[illegible]ம்

தமிழர் பண்பா[illegible]

திருமூர்த்தி ([illegible])

சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருளாய்வுத் துறை வெளியீடு - எண் - 3

# தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

சா. குருமூர்த்தி எம். ஏ., எம்.லிட்., டிப். மானிடவியல்,
விரிவுரையாளர்,
பண்டை வரலாறு, தொல்பொருளாய்வுத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்

சென்னைப் பல்கலைக்கழகம்
1974

முதல் பதிப்பு — செப்டம்பர், 1974

© — சென்னைப் பல்கலைக்கழகம்

விலை ரூ. 10/-

சோல்டன் அச்சகம், சென்னை 600 005

Madras University Archaeological Series No. 3

# ARCHAEOLOGY AND TAMIL CULTURE

S. GURUMURTHY, M.A., M.LITT., DIP-in *Anthropology*,
**Lecturer,**
**Department of Ancient History and Archaeology,**
**University of Madras**

**UNIVERSITY OF MADRAS**
**1974**

First Edition-September, 1974

© — University of Madras

**Price Rs. 10/-**

**Solden & Co., Madras 600 005**

# அணிந்துரை

சென்னைப் பல்கலைக்கழகம் உயர்மட்டப் படிப்பிற்கும் ஆராய்ச்சிக்கும் உரிய இடத்தைத் தொன்று தொட்டு வழங்கி வருகிறது என்பதை அனைவரும் அறிவர். அதுபோன்றே மொழி, கலை, விஞ்ஞானம் ஆகிய ஒவ்வொரு துறையின் மேம்பாட்டிற்கும் ஒல்லும் வகையெல்லாம் பல்கலைக்கழகம் பணிபுரிந்து வந்திருக்கிறது. பல்வேறு துறைகளும் ஆற்றியுள்ள சாதனைகள், அறிக்கைகள், இதழ்கள், நூல்கள் ஆகிய வடிவங்களில் அவ்வப்போது வெளியிடப்படுகின்றன. இதனைப் பெரும்பணியாக ஏற்றுக்கொண்டு இப்பல்கலைக்கழகம் கடந்த ஐந்தாண்டுகளில் 116 நூல்களை வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வரிசையில் இடம்பெற இருப்பதுதான் 'தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்' என்னும் ஆராய்ச்சி நூல்.

வரலாற்றுத்துறையில் நமது நாடு என்றுமே மிகுந்த அக்கறை காட்டியதில்லை என்று மேனாட்டினர் கூறியுள்ளனர். மேனாட்டினரின் தொடர்பால் இந்நூற்றாண்டில் நம் நாட்டினர் வரலாற்றுத்துறையில் புத்துணர்ச்சியுடன் செயல்பட்டு வருகின்றனர். மேனாட்டு விஞ்ஞான முறையின் அடிப்படையில் தக்க ஆதாரங்களைக்கொண்டு நம் நாட்டு வரலாறு எழுதப்பட்டு வருகிறது. வரலாற்றை எழுதுவதற்குரிய ஆதாரங்கள் பலவற்றுள்ளும் கல்வெட்டுகள், நாணயங்கள், செப்பேடுகள், புதை பொருள்கள் ஆகியவை முக்கிய இடம் பெறுகின்றன. இன்று விஞ்ஞான அடிப்படையில் இவற்றின் காலத்தை வரையறை செய்யவும் அக்கால மக்களின் சாதனைகளையும் பழக்க வழக்கங்களையும் ஒருவாறு உணரவும் முடிகிறது.

பழமை என்பதற்காகவே ஒன்றைப் போற்றுவதோ பின்பற்றுவதோ அறிவுடைமை ஆகாது. எந்த சமூகமும் பழமையை அறவே புறக்கணித்து விடவும் முடியாது. பழமையைப் புரிந்து கொண்டால்தான் புதுமையை நோக்கி அடி எடுத்துவைக்க முடியும்.

நாகரிகச் சிறப்பு மிக்க பழம்பெரும் நாடுகள் ஒரு சிலவே. அவற்றுள் நம் நாடு முன்னணியில் நிற்கிறது. தமிழக நிலப் பகுதி, உலகின் நிலப்பகுதிகளுள் மிகப் பழமையானவற்றுள் ஒன்று என்பது புவிஇயல் நிபுணர் களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. தமிழகத்தைப் பொறுத்த வரையில் பண்டைத் தமிழிலக்கியம் பழந் தமிழரின் நாகரிகத்தின் சிறப்பை, தனித்தன்மையை ஓரளவு புரிந்துகொள்ள உதவுகிறது. இந்நூற்றுண்டில் சர் மார்டிமர் வீலர் போன்றோரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி யின் வாயிலாகக் கண்டெடுக்கப்பட்ட கட்டடச் சிதைவுகள், மட்பாண்டங்கள், மணிகள், நாணயங்கள் ஆகியவை பெருமளவு நமது தமிழக வரலாற்றை மேலும் செப்பம் செய்ய உதவியிருக்கின்றன.

இத்துறையில் நமது பல்கலைக்கழகப் பண்டை இந்திய வரலாறு தொல்பொருளாராய்ச்சித் துறை பல அகழ்வா ராய்ச்சிகளை மேற்கொண்டு போற்றத்தக்க அளவில் நமது வரலாற்றுப் பெருமைக்கு விளக்கங்களைத் தந்துள்ளது. திருக்காம்புலியூர் நெற்களஞ்சியமும், சுடுமண் உருவங் களும் பானை ஓடுகளும் வண்ணக் கல்மணிகளும், உறையூர் பிராமி எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகளும் சங்கு வளையல்களும், ரோமர் சாயத் தொட்டியும், காஞ்சிபுரம் புத்த ஸ்தூபத்தின் இடிபாடுகளும், பல்லவர் நாணயங்களும் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆராய்ச்சித்துறையின் கண்டுபிடிப்புகளில் ஒரு சில. கண்டுபிடிக்கப்பட்ட புதை பொருள்கள் மறை பொருள்களாகவே இருந்துவிடக் கூடாது. வரலாற்றாசிரியர்களுக்குப் பயன்பட வேண்டும் எனக் கருதியே இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் அகழ்வாராய்ச்சி செய்யப்படும் முறையை விளக்குவதுடன், தொல்பொருளாய்வினால் நாம் அறியக் கிடக்கும் தமிழர் பண்பாடும் வாழ்க்கை முறையும் எத்தகையன என்பதை விளக்கிச் செல்கிறது. இந்நூலைப் பல்கலைக்கழகத்துறை யைச் சார்ந்த திரு சா. குருமூர்த்தி அவர்கள் சீரிய முறையில் தமிழில் வடித்துத் தந்திருக்கிறார். அவருடைய முயற்சி பாராட்டத்தக்கது. இது போன்ற நூல்கள் பல வெளிவர வேண்டும் என்பது பல்கலைக்கழகத்தின் நோக்கம். அறிஞர் உலகம் இதற்கு வரவேற்பளிக்கும் என நம்புகிறேன்.

*சென்னை*
*5-9-1974*

**நெ. து. சுந்தரவடிவேலு**
**துணைவேந்தர்**
**சென்னைப் பல்கலைக்கழகம்**

# முன்னுரை

தொல்பொருளாய்வு அல்லது தொல்பொருளியல் என்பது வளர்ந்துவரும் ஓர் அறிவியல் துறையாகும். இந்த நூற்றாண்டில் இந்தியாவிலே இது சிறப்பாக வளர்ச்சி அடைந்து வருகின்றது. இந்தியாவின் பல பகுதிகளில் நடைபெறும் அகழ்வாராய்ச்சிகளே இதற்குச் சான்று.

தமிழகத்தில் 1945ஆம் ஆண்டிலிருந்து சுமார் இருபது இடங்களில் அறிவியல் முறைப்படி அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அவைபற்றிய குறிப்புகள் அடங்கிய நூல்கள் வெளியிடப்படவில்லை. இதனால் தமிழக மக்களுக்கும், மேலை நாட்டினருக்கும், தமிழகத்து அகழ்வாராய்ச்சிகளின் முடிவுகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமல் இருந்தது ; அகழ்வாராய்ச்சியின் சிறப்பையும் மக்கள் உணரமுடியவில்லை.

மண்ணுள் மறைந்து கிடக்கும் பண்பாட்டுச் சின்னங் களை, அரிய பல உண்மைகளை, வெளிப்படுத்தும் பணியே அகழ்வாராய்ச்சி. அதன் மூலம் கிடைக்கப்பெறும் தொல் பொருள்களைப்பற்றிய குறிப்புகளை, உண்மைகளை வெளி யிடாவிட்டால் அது பண்டைய மக்களின் பண்பாட்டுச் சிறப்பினை மறைப்பதற்கு ஒப்பாகும். இதனைக் கருத்தில் கொண்டே இந்நாள்வரை தமிழகத்தில் நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளைப் பற்றியும் அவை காட்டும் பழந் தமிழர் பண்பாட்டுச் சிறப்புகளைப் பற்றியும் விளக்கமாக இந்நூலில் கொடுத்துள்ளேன். பல்வேறு துறையினரால் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளை நேரில் கண்டும், அவற் றின் விளைவாகக் கிடைக்கப்பெற்ற தொல்பொருள்களை ஆய்ந்தும் பல அரிய செய்திகளை இதில் தந்துள்ளேன்.

தொல்பொருள்களை வெறும் காட்சிப் பொருள்களாகக் கருதாமல், அவற்றை ஆய்வுசெய்து அவை தரும் சுவை யான குறிப்புகளை வெளிப்படுத்துவது, தொல்பொருளாய் வாளர்களின் தலையாய பணியாகும். தமிழகத்தில் கிடைத் துள்ள ஆயிரமாயிரம் தொல்பொருள்கள், பழந்தமிழர் சமூக, பொருளாதார, சமய நிலைகளைப்பற்றிய செய்திகளை அள்ளித்

தருகின்றன. பண்டைத் தமிழ் இலக்கியங்களும் மேலை நாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் உணர்த்தும் தமிழர் வரலாற்றை, பண்பாட்டுப் பெருமையை மேலும் விரிவு படுத்தி, விளக்கமாகத் தருவதற்குத் தக்க சான்றுகளாக இந்தத் தொல்பொருள்கள் அமைந்துள்ளன என்றால் அது மிகையாகாது. அகழ்வாராய்ச்சியின் பயனாகக் கிடைத்துள்ள அரிய பல தொல்பொருள்கள் பற்றிய குறிப்புகளைத் தமிழக வரலாற்று நூல்களில் சேர்ப்பதன் இன்றியமையாமையை இந்நூல் வலியுறுத்தும் என நம்புகிறேன்.

மேலும் இந்நூலில் அகழ்வாராய்ச்சிக்குரிய இடங்களைக் கண்டுபிடித்தல், அகழ்வாராய்ச்சி நடத்தும் முறைகள் இவை பற்றிய குறிப்புகளையும் விளக்கமாகக் கொடுத்துள்ளேன். பண்டைய சின்னங்கள் அகப்படும் ஊர்களின் பெயர்கள் நூலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த ஊர்களில் வசிக்கின்ற ஆசிரியர்களும் மாணவர்களும் அங்குத் தொல்பொருள்கள் கிடைத்திட வாய்ப்புண்டா என ஆய்வு செய்யலாம்.

தமிழகத்துத் தொல்பொருளாய்வு பற்றி வெளிவரும் முதல் நூல் இதுவேயாகும். இந்தியாவின் தொல்பொருளியலைப்பற்றிக் கூறும் எந்த நூலிலும், தமிழகத்தைப் பற்றிய செய்திகளைக் காண்பது அரிதாக உள்ளது. அதற்குக் காரணம் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளைப் பற்றிய குறிப்புகள் நூல் வடிவில் பெரும்பாலும் வெளிவருவதில்லை. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருக்காம்புலியூர், அலகரை ஆகிய ஊர்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் முடிவுகள் அடங்கிய நூல் ஒன்று சென்னைப் பல்கலைக்கழகத்தினரால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. தமிழகத்து அகழ்வாராய்ச்சிகளைப்பற்றித் தெரிவிக்கும் நூல் இதுவேயாகும்.

இந்நூலில் அடங்கியுள்ள சில பகுதிகள் கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'தமிழ்ப் பொழிலில்' தொடர் கட்டுரையாக வெளிவந்துள்ளன. அவற்றை இந்நூலில் சேர்ப்பதற்கு அனுமதியளித்த கரந்தைத்தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழுவிற்கும், அதன் தலைவர் புலவர். செ. தனக்கோடி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இந்நூலில் உள்ள புகைப்படங்களை வெளியிட அன்புடன் அனுமதியளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருளாய்வுத்துறைத் தலைவர் டாக்டர்

சி. கிருட்டிணமூர்த்தி அவர்களுக்கும், இந்தியத் தொல் பொருளாய்வுத் துறைத் தலைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்: புகைப்படக் கலைஞர் திரு. இரா. வெங்கடேசன் அவர்களுக்கும் நன்றி. கொற்கை அகழ்வாராய்ச்சி பற்றிய குறிப்புகளை மிகுந்த அன்புடன் நல்கிய தமிழ்நாடு தொல்பொருளாய்வுத்துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்களுக்கும் எனது நன்றி. இந் நூலை அச்சில் பார்த்து உதவிய 'குழந்தைகள் கலைக்களஞ் சியம்' கூட்டுப் பதிப்பாசிரியர் திரு. சு. கண்ணன் அவர் களுக்கும், இந்நூலிலுள்ள பொருட் குறிப்பு அகராதி யைத் தயாரித்து உதவிய தொல்பொருள் ஆராய்ச்சி மாண வர் திரு. எ. சுப்பிரமணியத்திற்கும் எனது நன்றி உரித்தாகும்.

இந்நூலைப் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டு வருவதற்கு அனுமதியளித்த சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கும், பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். மதிப்பிற்குரிய துணை வேந்தர் அவர்களுடைய தமிழ்ப் பற்றும், தமிழர் பண் பாட்டின் தொன்மையையும் மேன்மையையும் உலகுக்கு உணர்த்தவேண்டும் என்பதில் அவர் கொண்டிருக்கும் ஆர்வமுமே என்னை இந்நூல் எழுதத் தூண்டின. இந் நூலுக்கு அணிந்துரை நல்கி, பெருமை சேர்த்திட்ட எனது வணக்கத்திற்குரிய துணைவேந்தர் அவர்களுக்கு நான் மீண்டும் நன்றி கூறக் கடமைப்பட்டவனுவேன்.

இதனை நல்ல முறையில் அச்சிட்ட சோல்டன் அச்சகத் தாருக்கும் எனது நன்றி.

பண்டை வரலாறு,
தொல்பொருளாய்வுத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை 600005
செப்டம்பர், 1974

சா. குருமூர்த்தி

# பொருளடக்கம்


1. தொல்பொருளாய்வு ... 1
2. தொல்பொருளாய்வின் பல்வேறு நுணுக்கங்கள் ... 4
3. அகழ்வாராய்ச்சி ... 11
4. கற்காலத் தமிழகம் ... 15
5. தமிழகத்தில் அகழ்வாராய்ச்சிகள் ... 21
6. அகழ்வாராய்ச்சி காட்டும் தமிழர் பண்பாடும் வாழ்க்கை முறையும் ... 43
7. சிந்துவெளி நாகரிகமும் திராவிடர் நாகரிகமும் ... 52
8. பழந் தமிழர் மட்பாண்டத் தொழில் ... 60

*பழங் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப் பட்டுள்ள ஊர்கள் ... 70*

*கடைக் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப் பட்டுள்ள ஊர்கள் ... 71*

*புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப் பட்டுள்ள ஊர்கள் ... 72*

*சங்ககால ஊர்கள் ... 73*

*பழந்தமிழர் சவக்குழிகள் காணப்படும் ஊர்கள் ... 75*

*பொருள் குறிப்பு அகராதி ... 85*

# இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள படங்கள்


***படம்-1*** சோழ மாளிகை - மண்ணுக்கு அடியில் தோண்டியெடுக்கப் பட்ட செங்கற்கள்.

***படம்-2*** திருக்காம்புலியூர் - அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளுவதற் கேற்ற மண்மேடு.

***படம்-3*** அகழ்வாராய்ச்சிக்கென வரையறுக்கப்பட்ட இடத்தின் தோற்றம் - இரண்டு பக்கங்களில் மரமுளைகளைக் காண லாம் - நடுவில் அளவுகோல் வைக்கப்பட்டுள்ளது.

***படம்-4*** அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட குழியில் காணப்படும் மண் அடுக்குகள்.

***படம்-5*** அத்திரம்பாக்கம் - ஆற்றடுக்கில் புதைந்துகிடக்கும் பழங் கற்காலக் கருவிகள்.

***படம்-6*** சானூர் - 'மெகலிதிய' சவக்குழியின் மேல்தோற்றம்.

***படம்-7*** சானூர் - சவக்குழியினுள் காணப்படும் சுடுமண் சவப் பெட்டிகளும் எலும்புக் கூடுகளும்.

***படம்-8*** அமிர்தமங்கலம் - ஈமத்தாழி.

***படம்-9*** அரிக்கமேடு - உரோமர்களது 'ரவுலடெட்' மட்பாண்ட ஓடுகள்.

***படம்-10*** செங்கமேடு - செங்கமேட்டின் ஒரு தோற்றம்.

***படம்-11*** திருக்காம்புலியூர் - நெற்களஞ்சியம்.

***படம்-12*** திருக்காம்புலியூர் - களிமண் கற்களைக் கொண்டு கட்டப் பட்ட சுவர்கள்.

***படம்-13*** திருக்காம்புலியூர் - வண்ண வேலைப்பாடு கொண்ட பானை ஓடுகள்.

***படம்-14*** உறையூர் - சாயத்தொட்டி.

***படம்-15-16*** உறையூர் - 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள்.

***படம்-17*** காஞ்சிபுரம் - உரோமர்களது 'ஆம்போரா' மதுச்சாடிகள்.

***படம்-18*** காஞ்சிபுரம் - சங்க கால வேந்தர்களை நினைவுபடுத்தும் சுடுமண் உருவங்கள்.

***படம்-19*** காஞ்சிபுரம் - இடிந்த புத்த 'ஸ்தூபத்தின்' ஒரு தோற்றம்.

***படம்-20*** திருக்காம்புலியூர் - இரும்புப் பொருள்கள்.

***படம்-21*** திருக்காம்புலியூர் - சுடுமண் உருவங்கள்.

***படம்-22*** உறையூர் - சுடுமண் உருவங்கள்.

***படம்-23*** உறையூர் - மரத்தூண்களைத் தாங்கிய குழிகள்.

***படம்-24*** திருக்காம்புலியூர் - பலவண்ணக் கல்மணிகள்.

***படம்-25*** திருக்காம்புலியூர் - சுடுமண் மணிகள்.

***படம்-26*** அலகரை - அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகள்.

***படம்-27*** திருக்காம்புலியூர் - 'கிராபிடி' குறிகள் (விண் மீன்).

# 1. தொல்பொருளாய்வு

கிரேக்க மொழியில் ‘ஆர்க்கியாலஜி’ **(archaeology)** எனப் படும் இப்பிரிவைத் தமிழில் தொல்பொருளாராய்ச்சி என வழங்க லாம். இது மண்ணுக்கடியில் புதைந்து, மறைந்து கிடக்கின்ற மனித இனத்தின் பண்டைய நாகரிகச் சின்னங்களை அகழ்ந்தெடுத்து வெளிப் படுத்தும் ஆராய்ச்சியாகும். இந்தச் சொல்லை இரண்டாகப் பிரித்துப் பொருள் காணின் ஆதிகாலத்தைப் பற்றி ஆராயும் அல்லது விளக்கும் அறிவியல் என்ருகும் **(archaios = ancient ; logos = science).**

இவ்வுலகில் மனிதன் தோன்றிய அன்றே வரலாறும் தோன்ற லாயிற்று. மிகப் பழங்காலத்தைப் பற்றி இயம்பும் இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், கல்வெட்டுகள், காசுகள் போன்றவை தோன்று வதற்கு முன்னர் வாழ்ந்த மக்களது வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் பற்றி அறிய உதவுவது இவ்வியலேயாகும். இந்த ஆராய்ச்சியின் முழு நோக்கமும் இதுவேயாகும். ஒரு நாட்டின் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலநிலையை வெளிப்படுத்தும் திறன் இவ்வியலுக்கே உரித்தாகும். ஒரு நாட்டின் வரலாறு, பண் பாட்டுப் பெருமை ஆகியவற்றை விளக்குதல், விரிவுபடுத்தல் போன்ற திறமை மிக்க சிக்கலான பணிகளையும் தொல்பொருளாய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியப் பண் பாடு, வரலாற்றின் தொடக்கம் கி. மு. ஆயிரமென்றே அரப்பா, மொகஞ்சொதாரோ போன்ற இடங்களில் அகழ்வாராய்ச்சி நடத்தப் படுவதற்கு முன்னர் கருதப்பட்டது. ஆனல் மேற்கூறப்பட்ட புதை யுண்ட இரு நகரங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பண்பாட்டுச் சின்னங்கள் இந்திய வரலாற்றின் தொடக்கத்தை கி. மு. 2500-க்கு முன்னேக்கி நகர்த்தி விட்டன. இது தொல்பொருளாராய்ச்சியாளர் களின் அரும்பெரும் சாதனையன்ருே! இதுபோன்று தமிழ் நாட்டில் சங்கம் நிலவிய மதுரையிலோ, சோழ நாட்டின் ஆதித் தலைநகரான பழையாறையிலோ (சோழ மாளிகை—படம்-1) பெரும் நிலப்பரப்பில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பெறின் தமிழர் நாகரிகத்தின் பெருமை, பண்பாட்டின் தொன்மை போன்றவை உலகுக்கு மேலும் நன்கு உணர்த்தப் பெறலாம்.

மனிதன் ஆக்கிய பொருள்களைத் தேடும் முயற்சிகள், ஆராய்ச்சி கள் ஆகியவை மட்டுமேயன்றிக் கண்டெடுத்த பொருள்களை ஆய்ந்து, மனித வாழ்க்கையில் கடந்தகால நிகழ்ச்சிகள், பல நிலைகள் அவற்றின் தொடர்புகளைக் காட்டலும் இவ்வியலில் அடங்கும். மனிதன் இவ்வுலகில் தோன்றியது முதல் அவனை நிழலாகத் தொடர்ந்து

அவனது வாழ்க்கை வரலாற்றினைத் துருவி ஆராயும் ஓர் இயல் என்றும் இதனைச் சுருங்கச் சொல்லலாம்.

கடந்த ஒரு நூற்றுண்டாக இவ்வியல் சீரிய முறையில் வளர்ந்து வந்துள்ளது. பழமையான சின்னங்கள், தங்கம், வெள்ளி, இரத்தினக் கற்கள் போன்றவை அடங்கிய அழகிய தொல்பொருள்களைப் பற்றி மட்டுமே ஆய வேண்டுமென்பதில்லை; சாம்பல், மண், கற்கள், எலும்புத்துண்டுகள், மண்டை ஓடுகள் போன்றவற்றிற்கும் இந்த ஆராய்ச்சியில் முக்கியத்துவம் உண்டு. மனித இனத்தின் வரலாற்றுப் பெருமையை ஆராயும்போது அவனுடன் ஆதி காலந்தொட்டு உறவாடி, உறுதுணையாக இருந்த ஏனைய இயற்கைச் சக்திகளைப் பற்றியும் நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது ; புவியின் அமைப்பு, தட்பவெப்ப நிலை, ஆறுகளின் போக்கு போன்ற இயற்கைக் கூறுகளைப் பற்றியும் தெரிந்துகொள்ள இவ்வியல் நமக்கு ஒரு வாய்ப்பினை வழங்குகின்றது.

எனவே, தொல்பொருளியல் என்பது ஒரு வகையில் அறிவியலாகத் திகழ்கின்றது. மற்றுமொரு வகையில் ஒரு கலையாகக் காட்சியளிக்கின்றது. தொல்பொருளியல், "வளர்ச்சி பெற்றுவரும் ஓர் அறிவியல்" என எங்ஙனம் கருதலாம் என்பதைக் காண்போம். பல்லாயிரமாண்டுகளாக மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கும் பண்பாட்டுச் சின்னங்களைத் தோண்டி எடுப்பதற்குப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் பலவகையான அறிவியற் கருவிகளையும், சோதனைகளையும் கையாள வேண்டியுள்ளது. இப்பணியில் இவர்களுக்குப் புவி அமைப்பியல், பௌதிகம், வேதியியல், விலங்கியல், தாவரவியல், வானவியல், உடல்கூற்றியல் போன்ற அறிவியல்கள் கைகொடுத்து உதவுகின்றன. இவ்வகையில் இதை ஓர் அறிவியல் எனக்கருதலாம்.

தொல்பொருளியல் ஒரு கலை என்ற கூற்றுக்குச் சான்றுகள் பல உள்ளன. அகழ்ந்து எடுக்கப்படுகின்ற பொருள்களை வெறும் காட்சிப் பொருள்களாகக் கருதி அவற்றைப் பொருட்களஞ்சியத்தில் வைத்துப் போற்றிப் புரந்தால் மட்டும் போதாது ; அவை வெறும் காட்சிப் பொருள்கள் மட்டும் அல்ல ; பழங்குடிகளின் ஏற்றமிகு வாழ்க்கை நுணுக்கங்களை, இரகசியங்களை அடக்கியுள்ள பண்பாட்டுச் சின்னங்களுமாகும். அவை, சுவை நிறைந்த பல கதைகளைச் சொல்ல வல்லன. எனவே, அவற்றை நன்கு ஆய்ந்து, பண்டைய நாகரிகத்தின் மேம்பாட்டினை உலகுக்கு உணர்த்த வேண்டிய பணி தொல்பொருளாய்வாளர்களைச் சாரும். இப்பணியைத் தொடர்வதற்கு நுண்ணறிவு இருந்தால் மட்டும் போதாது. கலை உணர்வு, சிந்தனைத் திறன், எழுத்துத் திறன் ஆகிய மூன்றும் ஒருங்கிணைய வேண்டும். தொல்பொருளாய்வாளர் தன்னை ஒரு கவிஞனாக, எழுத்தாளனாகக் கருதி இவ்வாராய்ச்சியில் ஒரு கலைக்கண்ணோட்டம் கொண்டு இணைய வேண்டியுள்ளது.

## தொல்பொருளியலும், வரலாறும்

உலகில் உயர்ந்தெழுந்து மறைந்த பல பேரரசுகள், படையெடுப்புகள், அவற்றின் வெற்றி, தோல்விகள் ஆகியவை பற்றித் தான் வரலாறு நமக்குத் தெரிவிக்கமுடியும். பொதுமக்களைப் பற்றிய குறிப்புகளைப் பெரும்பாலும் அது நல்குவதில்லை. ஆனால் தொல் பொருளியலோ இப்புவியில் தோன்றி, மறைந்த பல தொன்மை மிக்க நாகரிகங்களைப் பற்றியும், அவற்றின் எழுச்சி, பரவல், ஊடுருவல், வீழ்ச்சி போன்ற குறிப்புகளையும் வெளிப்படுத்தும் தன்மைவாய்ந்தது. ஆதி மனிதனின் அன்றாட வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், அவனது சமூகத்தில் இயங்கிவந்த அரசியல், பொருளாதாரம், வாணிகம், கட்டடக்கலை, சமயம், இறந்தவர்களை அடக்கம் செய்யும்முறை, உடலை விட்டுப்பிரிந்த உயிரின்மேல் அவனுக்கு உள்ள நம்பிக்கை ஆகியவை பற்றிய விரிவான குறிப்புகளை இவ்வியல் நமக்குக்கூறும். அகழ்ந்தெடுக்கப்படும் ஆயிரமாயிரம் தொல்பொருள்கள் நமக்குச் சான்றுகளாக மாறி, இக்குறிப்புகளை உணர்த்தவல்லன ; ஏனெனில் இப்பொருள்களில் பெரும்பாலானவை சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்தவர்களால் பயன்படுத்தப்பட்டவையாகும். கல், மண், என்பு போன்றவற்றால் ஆக்கப்பட்ட கருவிகள், அணிகலன்கள், பாத்திரங்கள், தெய்வத்திருமேனிகள், மட்பாண்டங்கள் ஆகியவை எல்லாம் பொதுமக்களின் உடைமைகளாகும். இன்றும் இந்நிலையே உள்ளது. இவை தவிர, அக்கால நகர அமைப்புப் பற்றியும் ஓரளவு அறிந்து கொள்ள இயலும். வரலாற்று ஏடுகளினால் தொடமுடியாத, எட்டிப் பிடிக்க இயலாத காலத்தைத் தொல்பொருளாராய்ச்சியினால் தொட முடியும் ! தொடரவைக்கவும் முடியும் ! இதுவே இவ்விரண்டு இயல்களுக்கும் உள்ள முக்கிய வேறுபாடாகும். எனினும் வரலாற்றுக்கால நிகழ்ச்சிகளைப் பற்றி தெரிந்துகொள்ள இவ்விரு இயல்களும் ஒன்றுக்கொன்று நெருங்கி உறவாடவேண்டும். அப்போதுதான் ஒரு நாட்டின் பண்பாடு, வரலாறு ஆகியவற்றை முற்றுப்பெற்ற ஒரு நிலையில் மக்களுக்கு உணர்த்தமுடியும்.

# 2. தொல்பொருளாய்வின் பல்வேறு நுணுக்கங்கள்

மண்ணுக்கடியில் தொல்பொருள்கள் புதைந்து கிடக்கின்ற இரகசியத்தை ஆய்வாளர்கள் எவ்வாறு கண்டுபிடிக்கின்றனர் ? அதற்கு அவர்கள் கையாளும் முறைகள் யாவை என்பன பற்றி இங்கு ஆய்வோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் பண்டைய நாகரிகச் சின்னங்கள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன என்பதை அறிந்து, அங்கு மண்ணை அகழ்ந்து, பண்டைய நாகரிகத்தின் பெருமையை வெளிக்கொணர்வதற்கு உதவியாக ஆராய்ச்சியாளர்களுக்கு இருப்பன :—

(1) அவர்கள் மேற்கொள்ளும் விரிவான ஆராய்ச்சிச் சுற்றுப் பயணம்.

(2) பண்டைய இலக்கியங்களில் காணப்பெறும் குறிப்புகள்.

(3) அந்தந்த ஊர்களில் வாழ்கின்ற மக்கள் தரும் செய்திகள்.

(4) பழங்காலத்தில் நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்த பயணிகள் எழுதிவைத்துச் சென்ற நூல்களிலுள்ள குறிப்புகள்.

(5) தொல்பொருள்கள் புதைந்து கிடக்கும் இடத்தில் பெருமழையினால் மண் அரிக்கப்பட்டு மேற்பரப்பு தெரிவிக்கும் சில மறைமுகக் குறிப்புகள்.

(6) நவீன கருவிகளின் மூலமாகக் காணும் சில உண்மைகள்.

## 1. ஆராய்ச்சிச் சுற்றுப்பயணம்

பண்டைய இலக்கியங்களில் கொடுக்கப்பட்டுள்ள சில ஊர்களின் குறிப்புகளைக் கருத்திலே கொண்டு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாவட்டச் சுற்றுப்பயணத்தின்போது அங்குள்ள பழம்பெருமைவாய்ந்த இடங்களில் அல்லது ஊர்களில் நடந்து சென்றே தொல்பொருள் ஆராய்ச்சிக்குரிய மண்மேடு **(Mound)** ஏதாவது தென்படுகிறதா என்று ஆராயவேண்டும் (படம்-2). ஓர் ஊர் பழமை வாய்ந்ததாக இருந்தாலும், அங்கு ஒரு சில இடங்களில் மட்டுமேதான் தொல்பொருள்கள் கிடைக்கப் பெறும். அந்த இடங்களுக்குத்தான் மண்மேடுகள் என்று பெயர்.

இம் மண்மேடுகள் பழுதடையாமல் ஊருக்கு ஒதுக்குப்புறமான இடத்திலோ, நடுவிலோ எவ்வாறு அழியாமல் இருக்கின்றன என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். அவை எவ்வாறு உருவாகின்றன என்பதையும் தெரிந்துகொள்ளல் வேண்டும்.

## மண்மேடுகளின் தோற்றமும், வளர்ச்சியும்

ஆதிகாலத்தில் மக்கள் வாழ்ந்தபோது அவர்கள் சிலகாலம் பயன்படுத்திப் பின்பு பயன்படாதுபோன பொருள்களையும், பாத்திரங்களையும் ஏனைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய பிற பொருள்களையும் தொலைவில் எறிந்தனர். அவ்வாறு ஒதுக்கப்படுகின்ற பொருள்கள் நாளடைவில் மண்ணுடன் கலந்து ஒரு குவியலாக மாறும். பல ஆண்டுகள் சென்ற பிறகு பெரிய மண் குவியலாகவோ, திட்டாகவோ உருப்பெறும். பல நூற்றாண்டுகள் கடந்தால், பல மண் அடுக்குகளைக்கொண்ட, நன்றாக இறுகிய ஒரு பெரிய மேடாகக் காட்சியளிக்கும். இந்த மேடுகளைத்தான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தேடிக்கண்டுபிடித்து, அங்கு அகழ்வாராய்ச்சியைத் தொடங்குவர். இம்மேடுகளின் உயரம் தமிழகத்தில் 3 மீட்டர் முதல் 10 மீட்டர் வரை காணப்படுகிறது. வடநாட்டில் 30 மீட்டர் உயரமுள்ள மேடுகளும் காணப்படுகின்றன. மேலும், ஊர்களில் சாலை அமைத்தல், நெல் தானிய வயல்கள் அமைக்க மண்ணைத் தோண்டுதல் போன்றவற்றால் சில இடங்களில் இந்த மேடுகள் பலவிதமாக உருக்குலைந்து காட்சியளிக்கும். இன்னும் சில இடங்களில் மறைந்தும் இருக்கக் கூடும்.

ஒவ்வொரு மேடும் பல நூற்றாண்டுகளுக்கு உட்பட்ட தொல் பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும்; வெவ்வேறு விதமான பண்பாடுகள், வாழ்க்கைமுறை ஆகியவற்றைப் பின்பற்றி வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற பழம் பொருள்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும். ஆதி மனிதன் விட்டுச் சென்ற பொருள்களைக் கொண்டுள்ள இந்த மண் அடுக்குகள் அல்லது வரிசைகள் ஒன்றின் மேல் ஒன்றாகக் கீழிருந்து மேல்வாரியாக அமைந்திருக்கும். பெருமழையின் காரணமாக அரிக்கப்படுவதாலோ மக்களால் ஆங்காங்கே அவ்வப்போது குழிகள் தோண்டப்படுவதாலோ அவற்றின் உள்ளே இருக்கின்ற பொருள்கள் வெளியே கொணரப்பட்டுச் சிதறிக் கிடக்க வாய்ப்புண்டு; தோண்டிய பள்ளங்களின் சுவர்களும், அரிக்கப்பட்ட மண்ணும், மண் மேடுகளின் உள்ளே புதைந்து கிடக்கின்ற நாகரிகச் சின்னங்களின் குறிப்பிட்ட சில கூறுகளை விளக்க வல்லன. பக்கங்களிலும், மற்ற இடங்களிலும் பானை ஓடு, பாசி, வளையல் போன்ற தொல்பொருள்கள் கிடைக்கலாம். அவற்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஒரு மேட்டின் தோற்றம், வளர்ச்சியின் கால அளவு, அதில் அடங்கியுள்ள பல்வேறு பண்பாடுகளுக்குரிய மக்களது வாழ்க்கை முறை ஆகியவற்றை வரையறுக்க இயலும்.

## 2. இலக்கியங்கள் தரும் குறிப்புகள்

பெருமை சான்ற பழைய இலக்கியங்கள், அக்காலத்தில் பண்பாட்டுத் தலங்களாகத் திகழ்ந்த சில ஊர்கள் அல்லது பட்டினங்களைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் தமிழகத்தில் சங்ககால இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்ற அகநானூறு போன்ற நூல்களும், காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவையும், அக் காலத்தில் நம் நாட்டில் சிறந்து விளங்கிய பல ஊர்களைப் பற்றிய சுவையான குறிப்புகளைக் கொடுக்கின்றன. மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினத்தைப் (தஞ்சை மாவட்டம்) பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. அது சங்க காலத்தில் ஒரு பெரிய துறைமுகப் பட்டினமாகவும், புத்த மதத்தின் இருப்பிடமாகவும் விளங்கிற்று எனத் தெரிய வருகிறது. அண்மையில் காவிரிப்பூம்பட்டினத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி மூலம் ஒரு புத்த விகாரம், கல்லில் செதுக்கப்பட்ட புத்தரின் பாதம் ஆகியவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.[1] இந்தக் கண்டுபிடிப்பு மணிமேகலையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை அறுதியிட்டுக் கூற உதவியாக உள்ளது. அங்ஙனமே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தொன்மை வாய்ந்த உறையூர், சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. முற்காலத்தில், இவ்வூர் சோழர்களின் இரண்டாம் தலைநகரமாகவும், ஒரு பெரிய வாணிக நிலைக்களனுகவும் விளங்கிற்று எனக்கூறுவர். அங்கு மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சியில், கி. மு. 200 முதல் கி. பி. 400 ஆண்டுகட்கு உட்பட்ட தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. உரோமர்களுக்கே உரித்தான 'ரவுலடெட்' **(Rouletted ware)** என்னும் ஒரு வகை மட்பாண்டங்கள் இங்குக் கிடைத்துள்ளன. இவை, அக்காலத்தில், தமிழகத்திற்கும் உரோம நாட்டிற்கும் இடையே நிலவிய வாணிகத் தொடர்பைக் காட்டுகின்றன. இலக்கியங்கள் காட்டும் காஞ்சி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு புத்த மதத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இந்நகரம் கிரேக்க, உரோமர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. அன்றியும், மிக்க தொன்மை வாய்ந்த பண்பாட்டின் பிறப்பிடமாகவும் விளங்கிற்று. காஞ்சிமாநகரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில் ஏராளமான தொல்பொருள்கள் அகப்பட்டுள்ளன. இத் தொல்பொருள்கள் இலக்கியங்கள் ஏத்தும் காஞ்சியை நம் முன்னே படம் பிடித்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. எனவே இலக்கியங்களில் காணப்படுகின்ற குறிப்புகளைக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வாராய்ச்சிகள் ஓரளவுக்கு இத் துறையில் வெற்றியைக் கொடுத்துள்ளன. இலக்கியங்களின் தொன்மைக்கும், அவை தரும் குறிப்புகளின் உண்மைக்கும் சான்றுகளை அளித்துள்ளன.

---

1. புத்தரின் திருஉருவமும் கிடைத்துள்ளது.

## 3. ஊரவர் தரும் சுவையான குறிப்புகள்

வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர்களில் வசிக்கும் முதியவர்களில் சிலர், தத்தம் ஊரின் பழம் பெருமையைப் பிறருக்கு எடுத்துக் கூறுவதில் மன மகிழ்ச்சி பெறுவர். அவர்கள் தங்கள் பழங் காலச் சந்ததியார் வாயிலாகவும், முதியோர்கள் சொல்லக் கேட்டும் தெரிந்துகொண்ட அரிய செய்திகளை நமக்குத் தெரிவிக்க முன்வருவர். அவர்கள் ஊரில் பல நூற்ருண்டுகட்கு முன்பு ஆட்சி புரிந்த மன்னன், அவன் செய்த அரும்பெரும் செயல்கள், அங்கு தொன்றுதொட்டு இருந்து, மறைந்த வரலாற்றுச் சின்னங்கள், அரண்மனைகள், கோயில்கள், குளங்கள் ஆகியவை பற்றிய சில குறிப்புகளை நமக்குத் தெரிவிப்பார்கள். அவர்களிடம் அவைபற்றிய சுவையான பல செய்திகளை எளிதாகப் பெற முடியும். எடுத்துக் காட்டாகக் காவிரிப்பூம்பட்டினக் கடற்கரைப் பக்கமாக வாழும் சிலர், தாங்கள் அவ்வூரில் கண்டெடுத்த சோழர் காசுகளை இப்போதும் நமக்குக் காட்டுகிருர்கள். நாம் அவர்களை ஊக்குவித்தால், அவர்கள் அவற்றை எங்குக் கண்டெடுத்தார்கள் என்பதையும், இன்னும் பல அரிய குறிப்புகளையும் பெறமுடியும். அக் காசுகள் நமக்கே வேண்டுமென விரும்பினுல் சிறு தொகையைக் கொடுத்து நாம் அவற்றைப் பெறலாம். மேலும், அவ்வூரில் அவர்கள் கண்டெடுத்த வேறு பல தொல்பொருள்களையும் நமக்குக் காட்டத் துடிக்கிருர்கள். இம் மக்கள் தரும் குறிப்புகள் நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்கும் என்று நம்ப இயலாது. ஆயினும் அவர்கள் கொடுக்கும் குறிப்புகளை நமக்கு ஒரு வழிகாட்டியாக வைத்துக் கொள்ளலாம். அவற்றில் எத்துணை அளவு நம்பிக்கை வைக்கலாம் என்பது அவரவர் ஆராய்ச்சித் திறனைப் பொறுத்ததாகும்.

## 4. அயல்நாட்டுப் பயணிகள் தந்துள்ள குறிப்புகள்

ஒரு நாட்டிற்கு எக்காலத்திலும் தொழில், கல்வி, சமயம், கலை ஆகியவற்றின் தொடர்பாகப் பயணிகள் வந்துசெல்வர். தற்காலத்தில் இதனை நாம் நேரில் காண்கிறோம். இப்பயணிகளில் ஒரு சிலரே தாங்கள் சுற்றிப் பார்த்த நாடுகளைப் பற்றிய குறிப்புகளை எழுத வல்லவர்களாக இருப்பர். பழங் காலத்தில் நம் நாட்டைச் சுற்றிப் பார்க்க வந்த பயணிகள் மிகப் பலர். அவர்களுள் சிலர் மன்னர்களாலும், மக்களாலும் அன்புடன் வரவேற்கப்பட்டனர். அவர்கள் உள்ளூர் மக்களுடன் நெருங்கிப் பழகிப் பல சுவையான குறிப்புகளை அவ்வப்போது எழுதிவைத்து விட்டுச் சென்றிருக்கின்றனர். தாம் சுற்றிப் பார்த்த நாடுகளின் அமைப்பு, அவற்றிற்கு அக் காலத்தில் வழங்கிவந்த பெயர்கள், அவற்றுள் ஓடிய ஆறுகள், காணப்பட்ட மலைகள் ஆகியவை பற்றியும், ஆங்காங்கே நிலவிய சமூக, பொருளாதார, சமயத் தொடர்புடைய சுவையான செய்திகளையும் எழுதி வைத்துள்ளார்கள். இக் குறிப்புகள் பழங்காலத்தைப் பற்றிய

ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருப்பனவாகும். இவர்தம் குறிப்புகளில் காணப்படும் முக்கிய இடங்களையும், ஊர்களையும் நாம் இப்போது அடையாளம் தெரிந்து கொண்டு ஆராய்ச்சி நடத்தினல் பல உண்மைகள் தெரிய வரும். அவற்றின் பெயர்கள் காலப்போக்கில் சற்று மருவி மாறியிருக்கலாம். அவை பற்றி நுணுக்கமாக ஆராய்ந்தால் அவ்வூர்களை மிக எளிதில் அடையாளங் கண்டு கொள்ளலாம் எடுத்துக்காட்டாக கி. பி. 2-3ஆம் நூற்ருண்டில் தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்த 'தாலமி' என்னும் பெரியார், உறையூரை 'உறத்தூர' (Orathoura) என்று குறிப்பிட்டுள்ளார். உறையூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் அவ்வூரின் தொன்மையையும் பண்பாட்டுப் பெருமையையும் விளக்குகின்றன.

## 5. நிலத்தின் மேற்பரப்பு காட்டும் சில அரிய குறிப்புகள்

தொல்பொருள்களைக் கொண்டுள்ள மண்மேடுகள் முன்னமேயே கூறியது போல மழை, புயல், விலங்குகளின் காரணமாக சில இடங்களில் சிதைந்து காணப்படலாம். எனவே அந்த இடங்களில் மண்ணுள் புதைந்து கிடக்கின்ற தொல்பொருள்கள் மேலே கொண்டு வரப்பட்டு நான்கு பக்கங்களிலும் பரவிக் கிடக்கலாம். அப்பொருள்களை ஒன்ருகச் சேர்த்து ஆராய்ந்து பார்த்தால், அந்த இடத்தின் தொன்மையும், பெருமையும் ஓரளவு விளங்கும். பழங்காலத்துப் பானை ஓடுகள், மணிகள், செங்கற்கள், காசுகள் போன்ற அப்பொருள்களைப் பற்றித் தொல்பொருள் வல்லுநர்கள் முன்னமேயே நன்கு அறிந்து வைத்திருப்பதனல் அந்த மேட்டின் காலம் ஏறக்குறைய எவ்வளவு நூற்ருண்டுகள் இருக்கும் என உடனேயே மதிப்பிடுவர். மற்ற இடங்களில் எந்தக் காலத்திற்குட்பட்டு அவை போன்ற பொருள்கள் கிடைத்துள்ளன என்பதே அம்மதிப்பீட்டுக்குக் காரணமாகும். எனவே தொல்பொருளாராய்ச்சி என்பது ஒரு விந்தையான பணியாகும். அதற்கு வேண்டப்படுவன — நுண்ணறிவு, சலியா உழைப்பு, எதையும் ஊன்றி, ஆழ்ந்து பார்க்கும் தன்மை, சிந்தனைத் திறன் முதலியனவாகும்.

## 6. நவீன கருவிகள் மூலம் காணும் உண்மைகள்

நவீன கருவிகளைக் கொண்டும் தொல்பொருள்கள் புதைந்து கிடக்கும் மேடுகளையும், இடங்களையும் கண்டுபிடிக்க முடியும். எடுத்துக்காட்டாக விமானத்திலிருந்து தரையைப் புகைப்படம் எடுத்தால் பூமியில் உள்ள மேடு பள்ளங்கள் மிகத் தெளிவாகத் தெரியும். இம் முறையில், அகழ்வாராய்ச்சி நடத்தப்படவிருக்கும் ஊரைப் புகைப்படமெடுத்து, அந்த ஊரில் எந்தெந்த இடங்களில் மேடுகள் உள்ளன என்பதை அறிந்துகொண்டு பின்னர் ஆராய்ச்சியைத் தொடங்கலாம். இதுபோலவே மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கும் சுவர்கள், அவற்றின் இடிந்த பிரிவுகள் ஆகியவற்றைக்

கண்டுபிடிக்க 'புரோட்டான் மாக்னடோ மீட்டர்' (**Proton Magnetometer**) என்ற கருவி பேருதவியாக இருக்கின்றது. மிக அண்மைக் காலத்தில்தான் இக்கருவி இந்தியாவில் முதன் முதலாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது. மார்ட்டின் என்ற பிரெஞ்சு அறிஞர் இக்கருவியைக் கொண்டு தமிழ் நாட்டில் பல இடங்களில் சோதனை செய்து காட்டினர். அவ்வாறு பார்க்கப்பட்ட இடங்கள் :

1. காவிரிப்பூம்பட்டினம்
2. நத்தமேடு (கடலூர் அருகில்)
3. கம்பர்மேடு (தஞ்சை மாவட்டம்)
4. உறையூர் (திருச்சி மாவட்டம்)

இந்த ஊர்களில் பழங்காலத்துக் கட்டடங்கள், சுவர்கள் புதைந்து கிடக்கும் உண்மையை வரைபடங்கள் மூலம் அவர் விளக்கியுள்ளார். இந்தியாவில், முதன் முதலில் இக்கருவியைப் பயன்படுத்திய பெருமை நமது தமிழகத்தையே சேரும்.

## கடலுக்கடியில் தொல்பொருளாராய்ச்சி

அண்மைக் காலத்தில் வியக்கத்தக்க முறையில் கடலுக்கடியிலும் தொல்பொருளாராய்ச்சி நடத்தப்பட்டு வருகின்றது. இந்த ஆராய்ச்சி அறிவியல் மேம்பாடு அடைந்துள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில் தான் மிகவும் முன்னேற்றம் அடைந்து வருகின்றது. இந்தியா போன்ற நாடுகளில் இவ்வாராய்ச்சியை மேற்கொள்ளுவது என்பது தற்போது இயலாவிடினும், வருங்காலத்தில் முயன்று பார்க்கலாம். பண்டைக் காலத்தில் கடல்கோளினல் கடற்கரைக்கு அருகாமையி லிருந்த பல ஊர்களும், துறைமுகப்பட்டினங்களும் கடலுள் மூழ்கின என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. புயல், மழை, இன்னும் இயற்கை தோற்றுவித்த பல இடையூறுகளினலும் பலத்த சேதமடைந்த கப்பல்கள் கடலுக்கடியில் மூழ்கடிக்கப்பட்டு அமிழ்ந்து கிடக்கின்றன. இவ்வாறு கடலுள் மூழ்கிய நகரங்களையும், கப்பல் களையும்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் கடலுக்கடியில் தொல்பொருளாராய்ச்சி நடத்தினல்தான் இயலும். அண்மையில், மத்தியதரைக் கடலுக்கடியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் ஒரு பெரிய கப்பல் வெளியே கொண்டுவரப்பட்டது. அக் கப்பலில் சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இரும்பு, செப்பு ஆணிகள், பாத் திரங்கள், மதுச் சாடிகள் போன்ற பொருள்கள் காணப்பட்டன. அவை அக் காலத்தில் நிலவிவந்த கடல் வாணிகத்தைப் பற்றியும், கப்பல் கட்டும் தொழிலின் நுணுக்கத்தைப் பற்றியும் வியக்கத்தக்க உண்மைகளை வெளியிட்டுள்ளன. இதுபோன்ற ஆராய்ச்சியை,

தமிழ் நாட்டில் மேற்கொள்ளுவோமேயானுல் கடல்கோளால் அழிந்து போன காவிரிப்பூம்பட்டினம், மாமல்லபுரம் போன்ற பண்டையப் பெருமைமிக்க பட்டினங்களைப் பற்றிய பல அரிய குறிப்புகளை நாம் தெரிந்து கொள்ளலாம். விரைவில் இவ்வாராய்ச்சியைத் தமிழகத்தில் மேற்கொள்ளுவது இன்றியமையாத ஒன்ருகும். அப்போதுதான் தமிழர் பண்பாட்டினை இன்னும் சிறப்பாக வெளிநாட்டினர்க்கு நாம் உணர்த்த முடியும்.

# 3. அகழ்வாராய்ச்சி

தொல்பொருள்களைக் கொண்ட மேடுகளின் தோற்றத்தைப்பற்றி முன்னரே கண்டோம். பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்கள் பயன்படுத்திப் பின்பு கழிக்கப்பட்ட பொருள்கள் நிலத்தடியில் பன்னெடுங்காலம் இருக்க நேருகின்றன. பழைய மண் தரைகள் அழிக்கப்பட்டு, புதியவை இடம்பெறலாம். வெள்ளத்தின் காரண மாகவோ, வேறு பல இயற்கைக் கோளாறுகளினாலோ, கட்டடங்கள் இடிந்து சரியலாம். வெள்ளம் வடிந்த பிறகு மறுபடியும் அங்குக் குடியிருப்பு ஏற்படலாம். மேலும் இத்தகைய இடங்களில் பிற் காலத்திய மக்களால் குழிகள் பல தோண்டப்படுகின்றன. அந்தக் குழிகள் இறந்தவர்களைப் புதைப்பதற்காகவோ, கழிவுப்பொருள்களை சிதைப்பதற்காகவோ தோண்டப்பட்டிருக்கலாம். எனவே இத்தகைய மாறுதல்களுக்கான தடயங்களைக் கண்டுபிடித்து, அவற்றை ஆராய வேண்டியது ஓர் இன்றியமையாத பணியாகும். பூமியைத் தோண்டிச் செல்லுங்கால் இத்தடயங்களையும், அவற்றின் கால எல்லையையும் கணக்கிடல் வேண்டும். பல்வேறு காலங்களைச் சார்ந்த தொல்பொருள் களைக் கொண்டுள்ள மண் அடுக்குகளின் அமைப்பை ஆராய்வதே அகழ்வாராய்ச்சி எனப்படும்.

மண் அடுக்குகளின் நிறம், அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு, பல்வேறு காலங்களைச் சார்ந்த அடுக்குகள் பிரிக்கப்படுகின்றன. பிரித்த பின்பு, அவற்றின் தொன்மை, ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு, ஆகியவற்றைக் கணித்தாகவேண்டும். மண்ணுள் அகழ் வாராய்ச்சி நடத்துவது எப்படி என்றும், அதற்காகக் கையாளப்படும் முறைகள் எவை என்பதனையும் சற்று ஆய்வோம். தொல்பொருளியலில் பூமியைத் தோண்டுவது என்பது கிணறு, குளம் வெட்டுவது போன்ற தன்று. அதற்குச் சிறப்புப் பயிற்சி தேவைப்படுகின்றது. அகழ் வாராய்ச்சியில் பொதுவாக இரண்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

1. பரவலாகத் தோண்டும் முறை (Horizontal excavation)
2. ஆழத் தோண்டும் முறை (Vertical excavation)

## பரவலாகத் தோண்டும் முறை

இம்முறைப்படிதான் அரப்பா, மொகஞ்சொதாரோ போன்ற நகரங் களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இம்முறையின்

தத்துவம், தொன்மையான ஓர் இடத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற் குரிய புதைமண்ணை மட்டும் பெருமளவில் பரவலாகத் தோண்டிப் பார்ப்பதாகும். இதன்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய பண்பாட்டுச் சின்னங்களை ஒரே இடத்தில் பெருமளவில் பெற வாய்ப் புள்ளது. மேலும் பரவலான முறையில் நிலப்பரப்பைத் தோண்டுவதன் வாயிலாக ஓர் இடத்தில் கிடைக்கப்பெருத தடயங்கள் மற்ருேர் இடத்தில் காண்பதற்கு வாய்ப்பு உண்டு. மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்ற பண்டையக் கோட்டைச் சுவர்கள், அரண்மனைகள், வீதிகள் போன்றவற்றை எளிதில் கண்டுபிடிக்க இம்முறையினைக் கையாளலாம்.

## ஆழத் தோண்டும் முறை

இம்முறையின் தத்துவம், ஒரு குறிப்பிட்ட இடத்தில், மிகக் குறைந்த அளவு நிலப்பரப்பில், இயற்கைமண் அல்லது பாறை வரை (Natural soil) ஆழத் தோண்டிச் செல்வதாகும். ஆழமாகத் தோண்டுவதன் மூலம் அவ்விடத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு காலங்கட்குட்பட்ட தொல்பொருள்களை ஆராய ஏதுவாகின்றது. மேலும் இயற்கைப்பாறை வரையில் தோண்டுவதால் அந்த இடத்தில் மக்கள் முதன் முதலில் குடியேறியது முதல் தொடர்ச்சியாக அவ்விடத் தில் தோன்றி மறைந்த பல காலங்கட்குட்பட்ட பல்வேறு மக்களது வரலாற்றுப் பண்பாட்டுப் பெருமையை அறிய முடிகின்றது. ஆழத் தோண்டினுல்தான் பல்வேறு மண் அடுக்குகளைப் பிரித்து, அவற்றிற் குரிய காலத்தை வரையறை செய்து, அவை பறைசாற்றும் பண்பாட்டுச் சிறப்பினை உணரமுடியும். அதுபோலவே, தோண்டி எடுக்கப்படுகின்ற தொல்பொருள்களுக்கும், அவற்றிற்குரிய மண் அடுக்குகளுடன் இணைத்துக் காலவரம்பைக் கணக்கிட இயலும். இம் முறை, தொல்பொருள்களின் உண்மையான காலத்தை வரையறுத் துணரப் பெருமளவில் உதவி செய்கிறது. எனினும், குறைந்த அளவு நிலப்பரப்பில் தோண்டுவதன் காரணமாகக் குறிப்பிட்ட காலத்திற்குட் பட்ட ஒரு பண்பாட்டின் எல்லாக் கூறுகளையும் அறிந்துகொள்ள இயலாமற் போகலாம் என்பது இம்முறையில் உள்ள குறைபாடாகும். பெரிய கட்டடங்கள், சுவர்கள், கோயில்கள் போன்றவற்றை இம் முறையைக் கையாண்டு தோண்டுவதற்கு அதிக உழைப்பு, காலம், பொருள் ஆகியவை தேவைப்படுகின்றன. எனினும் தொல்பொருளிய லுக்கு இந்த ஆழத் தோண்டும் முறையே சிறந்ததெனக் கருதப் படுகின்றது.

## ஆழத் தோண்டும் முறையின் விளக்கம்

தோண்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தபின், அகழ வேண்டிய குழியின் அளவுகளை (நீளம், அகலம்) வரையறுத்து நிலத்தின் மேற்பரப்பில் அடையாளமிடப்படுகின்றது. அக்குழியின் அளவுக்குட்பட்ட நிலப்பரப்பின் மேற்பாகத்தைப் புற்கள் முதலியன

எதுவுமின்றி நன்ருகச் சுத்தம் செய்தல் இன்றியமையாததாகும். குழியின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும், மர முளைகளை ஒரு மீட்டர் இடைவெளிக்கு ஒன்ருக நடவேண்டும். பிறகு அந்த முளைகளை இணைக்கும் வகையில் நூற்கயிற்றைக் கட்டவேண்டும். ஒரு பக்கமுள்ள மரமுளைகளுக்கு I, II, III, IV...என்றும், மற்றெரு பக்கமுள்ளவற்றிற்கு I[1], II[1], III[1], IV[1]... என்றும் எண்கள் கொடுக்கப்படும். தோண்ட ஆரம்பிப்பதற்கு முன்பாகக் குழியின் மேற்பரப்பைப் புகைப்படம் எடுத்தல் அவசியமாகும் (படம் -3).

தோண்டுவது என்ருல் பெரிய மண்வெட்டிகளைக் கொண்டு தோண்டுவது என்பதன்று; சிறிய களைக்கொத்துகளைக் கொண்டு சிறிது சிறிதாக, அதாவது, அங்குலம் அங்குலமாக நிலப்பரப்பைத் தோண்டவேண்டும். தோண்டிய மண்ணை உடனேயே அப்புறப்படுத்தக்கூடாது. அதைக் கட்டிகளின்றி உடைத்துக் கைவிரல்களாலும், கத்தியாலும் அலசிப் பார்த்த பிறகே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனென்ருல் மண்ணுடன் கலந்த, கடுகளவை ஒத்த பாசிகள், சிறிய காசுகள் மற்றும் ஏனைய தொல்பொருள்கள் அதில் கிடைக்கப்பெறலாம். தொல்பொருள்கள் கிடைக்கப்பெறின் அவை கண்டெடுக்கப்பட்ட இடத்தின் அடையாளம், ஆழம் ஆகியவற்றை உடனுக்குடனே பதிவு செய்தல் வேண்டும். கிடைத்த பொருள் எந்த இரு மரமுளைகளுக்கிடையில் உள்ள இடப்பரப்பில் அகப்பட்டது என்பதே அப்பொருளின் இட அடையாளமாகும்.

கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காக அவ்வப்போது அவற்றிற்குரிய மண் அடுக்குகளுடன் இணைத்துப் பதிவு செய்து காகித உறைகளில் போட்டுவைத்துப் பாதுகாத்தல் வேண்டும். அதேபோல, ஏராளமான பானை ஓடுகள், முழுப் பானைகள் ஆகியவற்றையும், அவற்றிற்குரிய மண் அடுக்குப்படி தனி இடத்தில் வைப்பர். இவ்வாறு தோண்டுகையில் மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து, மண் அடுக்குகளின் மாற்றத்தைக் கண்டுகொள்ளுதல் இன்றியமையாததாகும். சில வேளைகளில் கிடைக்கும் தொல்பொருள்களின் வாயிலாக மண் அடுக்குகளின் மாற்றத்தை உணரலாம். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழாக 1, 2, 3.., என எண்களிடப்படும். இறுதியில், தோண்டி முடித்த பிறகு, குழியின் நான்கு பக்கங்களிலும் உள்ள சுவர்களைச் சமப்படுத்துவார்கள். சுவர்களைச் சமப்படுத்துவதால் மண் அடுக்குகள் பல நன்ருகத் தெரியவரும். அவற்றைக் கோடுகளிஞல் குறித்திடல் வேண்டும். குழியின் சுவர்களில் அந்தந்த மண் அடுக்குகளைக் காட்டும் 1, 2, 3... என்று எண்களிடப்பட்ட குறிப்புச் சீட்டுகள் மாட்டப்படும் (படம்-4).

மண் அடுக்குகளில் எவை எவை, எந்தக் காலவரம்பிற்குட்பட்டவை என்பதையும் வரையறுத்துக் கொள்ளல் வேண்டும். அதற்குப் பேருதவியாக இருப்பன காசுகளும், பானை ஓடுகளுமே

யாகும். காலவரம்பை வரையறுக்கும்போது ஒரு சிறந்த கருத்தைச் சிந்தையில் வைத்துக்கொள்ளல் வேண்டும். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழ்நோக்கி எண்களிடப்படும். ஆனால் பல காலங்களுக் குட்பட்ட வெவ்வேறு பண்பாடுகள், கீழிருந்து மேல்நோக்கிக் கணிக்கப்படும். ஏனெனில், தொல்பொருள்களின் தொன்மை, கீழிருந்து மேல்நோக்கிக் கணக்கிடப்படுவதேயாகும். அதாவது, மிகவும் கீழே உள்ள மண் அடுக்குகள் மிகப் பழங்காலத்தைச் சார்ந்தவை என்பதேயாகும். இதுவே மண் அடுக்குகளை ஆராய்வதில் உள்ள தத்துவமாகும்.

குழியின் பக்கங்களைச் சமப்படுத்திய பின்பு, அவற்றைப் புகைப்படம் எடுத்துக்கொள்ளுவார்கள். சுவர்கள், மண் தரைகள், பெரிய பானைகள் ஆகியவை காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் புகைப்படம் எடுத்துப் பதிவுசெய்தல் வேண்டும். மேலும் வரைபடத் தாளில் குழியின் சுவர்களில் காணப் படுகின்ற மண் அடுக்குகளின் நீளம், அகலம், மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை வரைந்து கொள்ளல் வேண்டும்.

மண்ணைத் தோண்டுவது கடினமான பணியல்ல. ஆயினும் தோண்டும்போது கிடைக்கும் தொல்பொருள்களின் கால வரம்பைக் கணக்கிட்டு, அவைகாட்டும் பண்டைய மனிதனின் பண்பாட்டுப் பெருமையை உலகினுக்கு உணர்த்த முற்படும் பணிதான் மிகக் கடினமான ஒன்றாகும். நிலத்தின் மேற்பரப்பில் தற்செயலாகக் கிடைக்கப்பெறும் தொல்பொருள்களின் காலவரம்பை நிர்ணயிக்க இயலாது. ஆனால் அகழ்வாராய்ச்சி வாயிலாகக் கண்டெடுக்கப் படுகின்ற தொல்பொருள்களுக்குக் காலவரம்பை எளிதில் கணிக்க முடியும். எனவே பண்டைய மக்களது பண்பாட்டுச் சிறப்பையும், தொன்மையையும் ஒருங்கிணைத்து உணர உறுதுணையாக இருப்பது அகழ்வாராய்ச்சி என்றால் அது மிகையாகாது.

# 4. கற்காலத் தமிழகம்

உலகில் பல்வேறு நாடுகளில் வாழ்ந்து மறைந்த கற்கால மனிதனின் அன்றாட வாழ்க்கை பற்றிய சுவையான செய்திகள் நமக்கு ஏராளமாகக் கிடைத்தவண்ணம் உள்ளன. இந்தியா உட்பட ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், சீனம் ஆகிய நாடுகளில் கற்கால மனிதன் வசித்த குகைகளும், பயன்படுத்திய கற்கருவிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலும் கற்கால மனிதனின் மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள் போன்ற வையும் அகப்பட்டுள்ளன. இவற்றை ஆய்கையில் பல அரிய உண்மைகள் தெரியவந்துள்ளன. ஆதிமனிதன் எப்போது இப்புவியில் தோன்றினான்? அவன் எத்தகைய முறையில் வளர்ச்சி யடைந்து தற்போதைய ஓர் உயர்ந்த நிலையை எய்தினான் என்பன போன்ற சிந்தையைக் கொள்ளை கொள்ளும் நுணுக்கமான தத்து வங்களுக்கு விளக்கம் ஓரளவுக்குக் கிடைத்துள்ளது.

கற்காலக் கருவிகளை ஆய்கையில் அக்காலத்தில் பல்வேறு நாடுகளுக்கு இடையே மக்கள் கூட்டங்களின் இடப்பெயர்ச்சி, கருத்துப் பரிமாற்றம் போன்றவை நிகழ்ந்திருக்கவேண்டும் என்று தெரிய வருகின்றது. எடுத்துக்காட்டாகச் சென்னைக்கு அருகில் ஏறக் குறைய 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள அத்திரம்பாக்கம் என்னும் ஊரில் கண்டெடுக்கப்பட்டுள்ள பழங் கற்காலக் கருவிகளும் தென் ஆப்பிரிக்கர்களின் கற்காலக் கருவிகளும் தம்முள் பல ஒற்றுமை களைக் கொண்டிருக்கின்றன! அவற்றின் தோற்றம், செய்முறை, பயன் போன்றவற்றை ஆராயும்போது, பழங் கற்காலத் தமிழகமும், ஆப்பிரிக்காவும் நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்கியிருக்க வேண்டும் என்ற உண்மையை உணர முடிகின்றது.

உலகின் பல நாடுகளில் கற்காலம் சில பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில், கற்காலத்தைக் கீழ்க்கண்டவாறு பிரித்து ஆராயலாம் :

1. பழங் கற்காலம் (Old Stone Age)
2. இடைக் கற்காலம் (Middle Stone Age)
3. கடைக் கற்காலம் (Late Stone Age)
4. புதிய கற்காலம் (New Stone Age)

இந்தப் பிரிவுகள் தமிழகம் உட்பட இந்தியாவின் எல்லாப் பகுதிகளுக்கும் பொதுவாகப் பொருந்தும் எனக் கொள்ளலாம். தமிழகத்தில் இதுவரை நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைத்துள்ள கற்காலத் தடயங்கள் இக்கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளன. இப்பிரிவுகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் சிறிது விரிவாக ஆராய்வோம்.

## 1. பழங் கற்காலம்

இந்தக்காலத்திற்குட்பட்ட கருவிகள் தமிழகத்தின் ஒரு சில மாவட்டங்களில் மட்டும்தான் கண்டெடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாகச் செங்கற்பட்டு, தென்னுர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில்தான் கற்கருவிகள் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இன்னும் குறிப்பாகக் கூறுவோமேயானுல், செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள அத்திரம்பாக்கம், நம்பாக்கம், குடியம், வடமதுரை, எருமைவெட்டிப்பாளையம், மஞ்சனகரணை போன்ற ஊர்களில் கிடைத்துள்ள கருவிகள் உலகப் புகழ் பெற்றவையாகும்.[2] அத்திரம்பாக்கத்தில் மட்டுமே ஆயிரக்கணக்கில் கற்கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்விடம் கற்கால மக்களின் 'கருவி உற்பத்திக்கூட' விளங்கியிருக்க வேண்டும் என்று கருதத் தோன்றுகிறது. நிலப்பரப்பின்மேல் எல்லாப் பகுதிகளிலும் கற்கருவிகள் சிதறிக்கிடக்கின்ற ஓர் அரிய காட்சியை இன்றும் இங்குக் காணலாம். செங்கற்பட்டு மாவட்டத்தில் கற்கால மனிதனுக்குச் சொந்தமான இயற்கை மலைக்குகைகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குடியம் என்ற இடத்தில் உள்ள குகையின் தளப்பரப்பில் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.[3]

பழங் கற்காலக் கருவிகள் மிகச் சொரசொரப்பாகவும், தரம் குன்றிய வேலைப்பாடு கொண்டவையாகவும் உள்ளன. இக்கருவிகளில் பெரும்பாலானவை கைக்கோடரிகளாகும். இவை மண்ணுக்குள் விளையும் கிழங்குகள், வேர்கள் போன்றவற்றை அகழ்ந்து எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் பக்கங்கள் கூர்மையாக இல்லாமல் முனைகள் உடைந்து, மழுங்கிக் காணப்படுகின்றன. இவை பல வடிவங்களில் செய்யப்பட்டுள்ளன. அவை முறையே வட்ட வடிவமானவை, சதுரமானவை, நீளமானவை, செவ்வகமானவை, கோழிமுட்டை வடிவமானவை போன்றவையாகும். இவற்றில் ஒரு வகைக்கு 'ரோஸ்ட்ரோ காரினேட்' **(Rostro-Carinate)** என்று பெயர். அதாவது இக்கருவியின் மேற்பக்கம் ஆமை உருவத்தை ஒத்திருக்கும். இது சுமார் 16 சென்டிமீட்டர் நீளமுடையது.

---

2. V. D. Krishnaswami, *Prehistoric Man Round Madras, Indian Academy of Sciences*, Madras, 1938, pp. 32-35.
3. *Indian Archaeology, 1962-63 - A Review, p. 12.*

கைக்கோடரிகளைத் தவிர வேறு பல கருவிகளும் இக்காலத்தில் செய்யப்பட்டன. இவற்றில் பெரும்பாலானவை உருவத்தில் சிறியன வாகும். அதாவது ஒரு கல்லிலிருந்து (core) செதிள்கள் (flakes) பிளக்கப்பட்டுப் பிறகு, அவை வேலைப்பாடுகொண்ட கருவிகளாக மாற்றப்பட்டுள்ளன. இந்தச் செதிள் கருவிகளிலும் பலவகை உள்ளன. அவற்றுள் துளையிடும் கருவி, தோல், இலை, தழை போன்ற வற்றைப் பதனிடும் கருவி, வட்ட வடிவமான சில்லுகள் போன்றவை குறிப்பிடத்தக்கனவாகும். தன் வேலைகளை எளிதில் செய்ய மனித னுக்கு அவை பேருதவி செய்தன எனக் கூறுவது பொருத்தமாகும். சில செதிள்கள் கைக்கோடரிகளாகவும் செய்யப்பட்டுள்ளன. இவற் றின் ஓரங்கள் ஒழுங்காகவும், கூர்மையாகவும் செதுக்கப்பட்டுக் காண்பவர் கண்ணையும், கருத்தையும் கவரும் வண்ணம் ஆக்கப் பட்டுள்ளன.

## 2. இடைக் கற்காலம்

இந்தக்காலக் கருவிகளை 'சீரிஸ்-II கருவிகள்' (Series-II tools) என்ற பெயரிலும் அழைக்கலாம். இது ஐரோப்பியக் கண்டத் தின் பழங் கற்கால உட்பிரிவுகளில் முக்கியமான ஒன்ருகும். இதையொட்டியே நம் நாட்டிலும் இந்த உட்பிரிவைப் பின்பற்றலாம். இந்தியக் கற்கால வரலாற்றில் இதன் முக்கியத்துவம் இன்னும் சரியாக உணரப்படவில்லை. அத்திரம்பாக்கத்தில் இக்கருவிகள் குறைந்த எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. இது ஆராய்ச்சிக் குரியதாகும். இவற்றைச் செதிள் கருவிகள் (Flake tools) என்று அழைப்பது மிகப் பொருந்தும். ஏனெனில் கருவிகளெல்லாம் சிறு சிறு செதிள்களினுல் செய்யப்பட்டவையாகும். கருவிகளில் பெரும் பாலானவை வேப்பிலை வடிவம் தாங்கிய கூர்மையான கத்தியைப் போன்று பளபளப்பாகச் செய்யப்பட்டுள்ளன. வேட்டையாடுதல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களுக்கும், விலங்குகளின் தோல், இலை போன்றவற்றைப் பதனிடுவதற்கும் இக் கருவிகள் பயன் படுத்தப்பட்டு வந்தன என்று கூறலாம்.

தமிழகத்தில் பழங் கற்கால மக்கள் சுமார் இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்திருக்க வேண்டுமென்று கருதப் படுகிறது.

## 3. கடைக் கற்காலம்

இப்பிரிவு பழங் கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடையில் வருவதாகும். இக்காலக் கருவிகள் உருவத்தில் மிகச் சிறியவையாக உள்ளன. எனவே இவற்றை 'மைக்ரோலித்ஸ்' (Microliths) என்றும் அழைக்கிருர்கள். இக்காலத்தை 'மைக்ரோ லிதிய' காலம் என்றும் அழைப்பர். இக்காலக் கருவிகள் உயர்தரமான

வண்ணக் கற்களினுல் செய்யப்பட்டவையாகும். பளபளப்பும், வழவழப்பும் உடையதாய்ப் பட்டொளி வீசி இவை மிளிர்கின்றன. குவார்ட்ஸ், அகேட், சாஸ்பர், கார்னீலியன், கார்னெட், சோப் புக்கல் போன்றவை இக்கற்களில் முக்கியமானவையாகும். இந்தக் கற்கள் கண்ணைக்கவரும் பல வண்ணங்களில் கிடைப்பதால் கருவிகளும் அவ்வண்ணங்களைத் தாங்கிக் கண்ணுடித்துண்டு களென மிளிர்கின்றன. கூரிய முனைகள், ஒரு முனை, இருமுனைச் செதிள்கள், செவ்வகச் செதிள்கள், இருமுனைப் பட்டைகள், சிறு அம்புகள், கொக்கிகள் போன்ற கருவிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரம் என்னும் ஊரில் இக்கருவிகள் ஆயிரக்கணக்கில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.[4] இம்மாவட்டத்தில் பல மணல்மேடுகள் (**Sand dunes**) காணப்படுகின்றன. இந்த மேடுகளில் இக்கருவிகள் கிடைக்க வாய்ப்புண்டு.

இவற்றின் காலவரம்பை வரையறுக்கக்கூடிய அளவுக்கு இன்னும் தடயங்கள் செம்மையாகக் கிடைக்கவில்லை. எனினும் சாயர்புரத்தில் கண்டெடுக்கப்பட்ட கருவிகளின் காலம் ஏறக் குறைய கி. மு. 4000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் விரிவான அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டால் இன் னும் பல தெளிவான, சுவையான குறிப்புகள் கிடைக்கப் பெறுவோம்.

## 4. புதிய கற்காலம்

புதிய கற்காலத்தின் தோற்றம் மனிதகுலப் பண்பாட்டின் தொடக்கம் எனக் கூறலாம். இக்காலத் தொடக்கத்தில்தான் மனிதன் முன்னேற்றப்பாதையில் அடியெடுத்துவைத்து நடக்கத் தொடங்கினுன். அவனது அன்றுட வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத சில வசதிகளை நிரந்தரமாய்ப் பெறவேண்டும் என உணரத் தொடங்கினுன். பிறகு அவ்வசதிகளை அடைவதற்குரிய கருவிகளையும், வழிவகைகளையும் முறையாகக் கண்டுபிடிக்கத் தொடங்கினுன். வேளாண்மை, விலங்குகளைப் பழக்கி வளர்த்தல், பாதுகாத்தல், பானை செய்தல், களிமண் சுவர்களைக் கொண்டு வீடு கட்டுதல், பளபளப்பான கற்கருவிகளைச் செய்தல் போன்ற, அரும்பெருஞ் சாதனைகளை மனிதன் முதன் முதலில் செய்து முடித் தான். இக்கண்டுபிடிப்புகள் மனிதகுல வரலாற்றில் மறக்கமுடியாத சாதனைகளாகும். இத்தகைய கண்டுபிடுப்புகள் மக்களின் அன்றுட வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்தன. பழங் கற்காலத்தில் மனிதன் நாடோடியாக விலங்குகளைப்போல் அலைந்து திரிந்துகொண்டிருந்தான். தனக்கு வேண்டும் உணவிற்கு

---

4. **Ancient India, No. 12 (1956), pp. 4–20.**

அவ்வப்போது காடுகளில் இயற்கையாகக் கிடைக்கின்ற காய், கனி, வேர் போன்றவற்றையே நம்பி வாழ்ந்து வந்தான். கண்ணிற் பட்ட விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடிக்கொன்று அவற்றின் இறைச்சியை உண்டு பசியாறி வந்தான். அவன் உணவுப் பொருள்களைச் சேகரிப்பவனாக இருந்தானே அன்றி அவற்றை எவ்வாறு உற்பத்தி செய்வது, பாதுகாப்பது என்பனவற்றைப் பற்றிச் சிந்திக்கவில்லை. ஆனால் புதிய கற்காலத்தில் பயிர் களைப் பயிரிடும் முறையைக் கண்டுபிடித்தான். அக்காலத்தில் பயிரிடும் முறையின் தத்துவம் யாதெனில், ஓர் இடத்தில் ஒருமுறை பயிரிட்டு அறுவடை செய்த பின்னர், அவ்விடத்திலேயே மறுபடியும் பயிரிடாமல், வேறு ஓர் இடத்தை நாடிச் செல்லுவதேயாகும். அதுபோலவே கண்ணிற் படுகின்ற விலங்குகளை உடனேயே வேட்டையாடல் வேண்டும் என்ற வேட்கையை ஒழித்து அவற்றைப் பழக்குதல், வளர்த்தல் ஆகிய கலைகளிலும் கைதேர்ந்தவனாக விளங்கினான். அதன் வாயிலாகத் தனக்கு வேண்டிய இறைச்சி உணவை எப்போது வேண்டுமாயினும் தடையின்றிப் பெற அவன் வகை செய்துகொண்டான். பழங் கற்காலத்தில் மனிதன் ஆற்றோ ரங்களிலும், ஏரி, குளம் ஆகியவற்றின் கரைகளிலும்தான் பெரும் பாலும் வாழ்ந்து வந்தான். பானை போன்ற பாத்திர வசதிகள் இல்லாமையால் தனக்கு வேண்டும்போது தண்ணீரைப் பெறுவதற் காகவே அவன் அவ்வாறு வாழ நேர்ந்தது. ஆனால் மட்பாண்டத் தொழில் தெரிந்ததும் நீரை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்லவும், வேண்டும்போது பருகவும் அவனால் இயன்றது. பண்டைய மக்களின் குடியிருப்பு இடங்களெல்லாம் பழம் பெரும் ஆற்றங்கரைகளில்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழ கத்தில் காவிரி, பாலாறு, வேகவதி, தாமிரபருணி போன்ற ஆறுகளின் கரைகளில்தான் பழந்தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். அடுத்து பளபளப்பும், வழவழப்புமான கற்கருவிகள் படைக்கப்பட்டன. மனித சமுதாயத்தில் தொழிற் கல்வியின் தொடக்கத்தை இப்படைப்புகள் நமக்கு உணர்த்துகின்றன. புதிய கற்காலக்கருவிகள் மிக நேர்த்தியான வேலைப்பாடு கொண்டனவாக உள்ளன. கல்லிலோ, மணற்பரப்பிலோ கற்கருவிகளை நன்றாக உரசினால் வழவழப்புத்தன்மை பெருகும் என்பதை புதிய கற்கால மனிதன் கண்டுபிடித்ததே இதற்குக் காரணமாகும். கருவிகள் பார்ப்பதற்கு உலோகத்தினால் செய்தவைபோல அவ்வளவு நேர்த்தி யாகப் படைக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் உலோகங்களிலிருந்து செய்யப்பட்ட கருவிகளுக்கும், புதிய கற்காலக் கருவிகளுக்கும் வடி வத்திலோ, வேலைப்பாட்டிலோ அதிக வேறுபாடு இல்லை எனக் கூற லாம். சுருங்கச் சொல்லின் உலோக காலக் கருவிகளில் பல, புதிய கற் காலப் படைப்புகளின் வளர்ச்சியையே உணர்த்துவனவாக உள்ளன

கருவிகளுள் கூம்புவடிவக் கைக்கோடரிகள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டன.

முதன்முதலில் பிரம்மகிரியிலும் (மைசூர்)[5], பின்பு மற்ற இடங்களிலும் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் நமக்குத் தெரிவிப்பது யாதெனில் தென்னகத்தில் தூய்மையான புதிய கற்காலம் **(Pure Neolithic Age)** என்ற ஒன்று கிடையாது. அது காலத்தால் பிற்பட்டு உலோக காலத்துடன் கலந்து திரிந்த ஒரு பிரிவு என்பதே யாகும். பிரம்மகிரியில் புதிய கற்காலக் கருவிகளும், ஏனைய தொல் பொருள்களும் உலோக காலத்துத் தொல்பொருள்களுடன் கலந்து காணப்பட்டதே இக்கூற்றுக்குக் காரணமாகும். எனவே தென்னகத்தில் புதிய கற்காலப் பிரிவிற்குச் செப்பு கலந்த புதிய கற்காலம் **(Neolithic-chalcolithic Age)** என்று பெயரிடப்பட்டது. அண்மையில் பையம்பள்ளியில் (வட ஆர்க்காடு மாவட்டம்) செப்பு கலப்படமில்லாத புதிய கற்காலப் பண்பாடு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது[6]. இதன் மூலம் தமிழகத்தில் உலோகக் கலப்படமில்லாத புதிய கற்காலப் பண்பாடு இருந்திருக்க வேண்டும் என்பது உறுதியாகி விட்டது. இவர்தம் இடிந்த வீடுகள், அவற்றின் அமைப்பு விதிகள், பாத்திர வகை, அணிகலன்கள், கலைப்பொருள்கள், இறந்தவரைப் புதைக்கும் முறைகள் ஆகியவற்றைப் பற்றிய பல குறிப்புகளை அகழ்வாராய்ச்சிகள் நமக்கு நல்கியுள்ளன. வீடுகள் களிமண் சுவர்களையும், இலை, தழை, கோரை போன்றவற்றால் வேய்ந்த கூரைகளையும் கொண்டனவாக இருந்தன. சுவர்களின் அடித்தளம் திண்ணிய களிமண்ணைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. சதுரம், வட்டம், செவ்வகம் போன்ற தரை அமைப்புகளைக் கொண்ட வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிய முடிகின்றது. அகழ்வாராய்ச்சி அள்ளித் தெளிக்கும் இது பற்றிய ஆழ்ந்த கருத்துகளைப் பின்னர் விரிவாகவும் விளக்கமாகவும் காண்போம்.

---

5. **Ancient India, No. 4, pp. 181-310.**

6. இவ்வகழ்வாராய்ச்சி பற்றிய குறிப்புகள் இன்னும் வெளியிடப்படவில்லை. இங்குக் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் ஔரங்கபாத்திலுள்ள இந்தியஅரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை அலுவலகத்தில் வைக்கப் பட்டுள்ளன.

# 5. தமிழகத்தில் அகழ்வாராய்ச்சிகள்

தமிழகத்தில் பல தொன்மைமிக்க ஊர்களில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை பண்டையத் தமிழர்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், அன்றாட வாழ்க்கைத் தேவைகள், அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், வசித்த வீடுகள் ஆகியவை பற்றிய சுவையான குறிப்புகளை நல்குகின்றன. அவற்றோடுமட்டுமின்றிப் பழங்குடி மக்களின் பொருளாதார, சமய வாழ்க்கை பற்றியும், அவர்கள் வெளிநாடுகளுடன் கொண்டிருந்த வாணிகப் பண்பாட்டுத் தொடர்புகளைப் பற்றியும் உணர்த்துகின்றன. எனவே தமிழகத்தில் இதுவரை நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளைப் பற்றியும், அவை உணர்த்துகின்ற குறிப்புகளையும் விரிவாகத் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். இதுவரை தமிழகத்தில் குறிப்பாகப் பதினைந்து ஊர்களிலும் பாண்டிச்சேரியில் அரிக்கமேட்டிலும் அகழ்வாராய்ச்சிகள் அறிவியல் முறைப்படி நடத்தப்பட்டுள்ளன. அவை பின் வருவனவாகும் :

அரிக்கமேடு (பாண்டிச்சேரி), அத்திரம்பாக்கம், குடியம், சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம், வசவசமுத்திரம், காஞ்சிபுரம் (செங்கற்பட்டு மாவட்டம்), செங்கமேடு (தென் ஆர்க்காடு மாவட்டம்), திருக்காம்புலியூர், அலகரை, உறையூர், கரூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்), பையம்பள்ளி (வட ஆர்க்காடு மாவட்டம்), காவிரிப்பூம்பட்டினம் (தஞ்சாவூர் மாவட்டம்), கொற்கை (திருநெல்வேலி மாவட்டம்). இவற்றுள் முதன் முறையாக அகழ்வாராய்ச்சி நிகழ்த்தப்பட்ட ஊர் அரிக்கமேடாகும். இவ்விடங்களை, அவை காட்டும் காலத்திற்கும், பண்பாட்டிற்கும் ஏற்றவாறு பிரித்து ஆராய்ந்தால் தமிழர் பண்பாட்டுத் தொடக்கம், தொடர்ச்சி, வளர்ச்சி, வரலாற்றுப் பெருமை ஆகியவை நன்கு புலனாகும். அவற்றைக் கீழ்க்கண்ட முறையில் பிரித்து ஆராயலாம்:

1. அத்திரம்பாக்கம், குடியம் (பழங் கற்காலம்)
2. பையம்பள்ளி (புதிய கற்காலம்)
3. சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம் (இறந்தவர்கள் புதைக்கப்பட்ட ஊர்கள்)
4. அரிக்கமேடு, செங்கமேடு, திருக்காம்புலியூர், அலகரை, உறையூர், கரூர், காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, வசவ

சமுத்திரம், காஞ்சிபுரம் (வரலாற்றுக் காலம் அல்லது சங்க காலம்)

**அத்திரம்பாக்கம்**

முன்பே கூறியதுபோல் இவ்வூர் பழங் கற்கால மக்கள் வாழ்ந்த இடமாகும். இவ்விடமும் இதன் சுற்றுப்புறமும் மலைக்குன்றுகளையும், காடுகளையும் அரண்களாகக் கொண்டுள்ளன. இது செங்கற்பட்டு மாவட்டத்தில், திருவள்ளூர் வட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும். கோத்தலையாறும், அத்திரம்பாக்கம் ஓடையும் சேருகின்ற இடத்தில் இது அமைந்துள்ளது. கோத்தலையாறு சித்தூர் மாவட்டத்தில் தோன்றிச் சென்னைக்கு அருகில் எண்ணூரில் கடலில் கலக்கின்றது. இந்த ஆற்றுக்கு ஆதிகாலத்தில் வழங்கிய பெயர் 'விருத்தச்சீர நதி' என்பதாகும். இதுவே பழைய பாலாறுமாகும். உலகப் புகழ்பெற்ற இக்கோத்தலையாறு பள்ளத்தாக்கில்தான் கற்கால மனிதன் வாழ்ந்ததற்குரிய தடயங்கள் பல காணப்படுகின்றன.

அத்திரம்பாக்கத்தில் காணப்படுகின்ற மலை அரணுக்கு 'அலிகூர்ச்சத்தியவீடு குன்றுகள்' எனப் பெயர். இவற்றின் அமைப்பும், ஆற்றின் ஓட்டமும், கற்கால மனிதனை மிகவும் கவர்ந்திருக்கவேண்டும். கருவிகளைச் செய்வதற்கு அவனுக்கு இக்குன்றுகள், ஏராளமான கற்கள் எளிதாகக் கிடைப்பதற்கு வசதியாக அமைந்திருந்தன. கற்கால மனிதனுக்குக் கருவிகள் எல்லாம் கற்களாலேயே செய்யப்படவேண்டும். இந்த ஒரு காரணத்திற்காகவே அவன் மலைப் பகுதிகளை நாடிச் சென்றான். அங்கேயே தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டான். அவன் பயன்படுத்தி விட்டுச் சென்ற கற்கருவிகளில் பல இப்போதும் இங்குக் கிடைக்கின்றன.[7] இவை அவன் விட்டுச் சென்ற பண்பாட்டுச் சின்னங்களாகும்.

**ஆற்றடுக்கு**: ஆற்றடுக்கு **(River terrace)** என்பது ஆற்றுப் போக்கில் அடித்துவரப்படுகின்ற கற்கள், கற்கருவிகள், மணல், குப்பைகூளங்கள் போன்றவற்றாலான ஒரு பெரிய மேடாகும். இந்த மேடு (அடுக்கு) பொதுவாக ஆற்றில் வெள்ளம் அல்லது அதிக நீரோட்டம் ஏற்படுகின்ற காலங்களில்தான் உருவாகும். இத்தகைய மேடுகள் மூன்று, கோத்தலையாறு பள்ளத்தாக்கில் காணப்படுகின்றன. சில இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே இந்த மேடுகள் இங்கு உருவாகியிருக்கவேண்டும் எனப் புவி அமைப்பியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். இவற்றின் தோற்றத்திற்கு அக்காலத் தட்ப வெப்ப நிலையும் ஒரு காரணமாகும். இந்த அடுக்குகளில்தான்

7. இந்நூலாசிரியர் இவ்விடத்திற்குப் பலமுறை நேரில் சென்று ஆய்வு நடத்தியுள்ளார்.

கற்கருவிகள் புதைந்து கிடக்கின்றன. இவை பல மைல்களுக்குப் பரவலாகப் படர்ந்து விரிந்து காட்சியளிக்கின்றன. (படம்-5) இவற்றின் உயரம் கடல் மட்டத்திற்குமேல் 3 மீட்டர் முதல் 18 மீட்டர் வரை உள்ளது. இங்குக் கிடைக்கின்ற கற்கருவிகளின் அமைப்பு, செய்முறை, அவற்றைப் படைக்கப் பயன்பட்ட மூலப்பொருள் போன்ற நுட்பமான குறிப்புகளை ஆராய்ந்தால் பழங் கற்கால மனிதனின் வாழ்க்கை முறை, பண்பாட்டு வளர்ச்சி, கருவிகள் செய்யும் முறை, அவன் பிறநாட்டு மக்களுடன் கொண்டிருந்த தொடர்பு போன்ற அரிய செய்திகளை நாம் தெரிந்துகொள்ள இயலும்.

## அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட கருவிகள்

இங்குக் கண்டெடுக்கப்பட்ட கருவிகளில் பெரும்பாலானவை கைக்கோடரிகளாகும். இவற்றிற்கு 'மதராசு கைக்கோடரிகள்' (Madras Handaxes) என்ற பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இவை மிகப் பழங் கற்காலத்தனவாகும். சில கோடரிகளின் மேல் சிவப்பு நிறப் பூச்சு காணப்படுகின்றது. இதற்குப் 'பாட்டிநேசன்' (Patination) என்று பெயர். மண்ணுக்கடியில் இவை புதைந்துகிடக்கின்ற காலங்களில் அங்குள்ள இரும்புச் சத்துடன் கலப்பதன் காரணமாக இந்நிறப் பூச்சு ஏற்படுகின்றது. கோடரிகளைத் தவிர, சிறிய செதிள் கருவிகள் பலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையிலுள்ள பொருட்களஞ்சியத்தில் இக்கருவிகளில் சில பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. கற்கால உலகைப்பற்றி ஆய்கின்ற ஒவ்வொரு மாணவரும் அத்திரம்பாக்கத்துக் கைக்கோடரிகளைப் பற்றித் தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். இந்தியாவில் பழங்கற்காலக் கருவிகள் அதிக அளவில் கண்டெடுக்கப்பட்டுள்ள இரண்டு இடங்களில் ஒன்று அத்திரம்பாக்கம் என்றால் அது மிகையாகாது. மற்றொன்று வட இந்தியாவில் உள்ள சோகன்நதிக்கரையாகும். அத்திரம்பாக்கத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள கற்கருவிகளும் தென்னாப்பிரிக்க நாட்டுக் கற்கருவிகளும் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன என்பதை முன்பே கூறினோம். உலகில் முதன் முதலில் மனிதன் தோன்றி வாழ்ந்த பகுதிகளில் தமிழகமும் ஒன்று என்பதைப் பறைசாற்றுகின்றன அத்திரம்பாக்கக் கற்கருவிகள்; தமிழகத்தின் தொன்மைக்கு இதைவிட வேறு ஒரு சான்று வேண்டியதில்லை.

## கற்கால மனிதனின் குகைகள்—குடியம்

அத்திரம்பாக்கத்தைச் சுற்றிலும் உள்ள மலைக்குன்றுகளுக்கிடையில் பழங்கற்கால மனிதனுக்குரிய குகைகள் பதினாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[8] இவற்றில் சிறப்பானது குடியம் என்ற இடத்தில்

8. Indian Archaeology, 1962-63—A Review, P. 12

உள்ள குகையாகும். இந்தக் குகையின் தரைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டுக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பதை முன்பே கூறியுள்ளோம். ஆனால் கற்காலத்திற்குரிய ஓவியங்கள் எதுவும் இக்குகைகளில் காணப்படவில்லை[9].

**பையம்பள்ளி**

இவ்வூர் ஒரு புதிய கற்கால இடமாகும். தமிழ்நாட்டில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட புதிய கற்கால இடம் இது ஒன்றேயாகும்[10]. ஆனால் இதற்கு முன்பே மைசூர், ஆந்திர மாநிலங்களில் பல புதிய கற்கால இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய ஆய்வுகள் புதிய கற்கால மக்கள் வாழ்க்கை பற்றிய ஏராளமான குறிப்புகளைக் கொடுத்துள்ளன ; பையம்பள்ளியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி, சிறிய அளவில், குறைந்த செலவில் நடத்தப்பட்டதால், தமிழ் நாட்டின் புதிய கற்காலப் பண்பாட்டைப் பற்றித் தெரிந்துகொள்ள நமக்குப் போதிய வாய்ப்பில்லை. தமிழ் நாட்டின் மற்றப் பகுதிகளிலும் புதிய கற்கால ஊர்கள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்குக் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களாவன — பளபளப்பான கைக் கோடரிகள், கையால் செய்யப்பட்ட மட்பாண்டங்களின் உடைந்த ஓடுகள், சிவப்பு வண்ணந்தாங்கிய சாம்பல் நிறக் கிண்ணங்களின் விளிம்புகள், சுடுமண் மணிகள், வட்ட வடிவமான மணல்தரை போன்றனவாகும். இங்குக் கிடைத்துள்ள தொல்பொருள்கள் பின்வரும் இரண்டு வெவ்வேறு பண்பாடுகளுக்குரியனவாகும்.

(1) உலோகக் கலப்படமில்லாத புதிய கற்காலப் பண்பாடு.

(2) 'மெகலிதிய' பண்பாடு (சங்க காலத்திற்குரியது).

உலோகக் கலப்படமில்லாத புதிய கற்காலப் பண்பாடு தமிழகத்தில் இருந்தது என்பதைப் பையம்பள்ளி அகழ்வாராய்ச்சி புலப்படுத்தியுள்ளது. தமிழகத்தின் கற்கால வரலாற்றில் இது ஒரு முக்கியத் திருப்பமாகும்.

**பண்டைய இடுகாடுகள் (சானூர், குன்றத்தூர், அமிர்தமங்கலம்)**

புதிய கற்காலத்தை அடுத்து வருவது உலோக காலமாகும்.

9. இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளிலுள்ள பழங் கற்காலக் குகைச் சுவர்களில் வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. மனிதர்கள் நுழைய முடியாத இக் குகைகளின் பின் சுவர்களில் வரலாற்றுப் புகழ்பெற்ற இவ் ஓவியங்கள் அழியாமல் இன்றும் காட்சியளிக்கின்றன. இந்த ஓவியங்களில் பெரும்பாலும் கற்கால மனிதனின் வேட்டைக்காட்சிகள்தான் சித்தரிக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் இக்காலத்திற்குரிய ஓவியங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. அண்மையில் கர்னூலுக்கு அருகே புதிய கற்கால மனிதனுக்குரிய சில குகைகளில் வண்ண ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

10. Indian Archaeology, A Review–1964-65, PP. 22–23.

தமிழகத்தில் இதனை 'இரும்புக்காலம்' (Iron Age) என அழைக்கலாம். இதனை ' மெகலிதிய ' காலம் (Megalithic Age) என்று சிறப்பாகத் தொல்பொருளாய்வாளர்கள்அழைக்கின்றார்கள். தமிழகத்தில் முதன் முதலில் இரும்பின் பயனைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தியமக்கள் இக்காலத்தவரேயாவர். சங்ககாலத் தமிழகத்தில் வாழ்ந்த பெருங் குடி மக்களும் இவரேயாவர். இந்த 'மெகலிதிய' பண்பாட்டின்[11] கால வரம்பு ஏறக்குறைய கி.மு. 1000 முதல் கி. பி. 500 வரை எனக் கொள்ளலாம். இவர்களது பண்பாட்டுச் சிறப்புகளைச் சங்க இலக்கி யங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இக்காலத்திற்குரிய ஊர்களை ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளுக்குத் தக்க வாறு இரண்டு பகுதிகளாகப் பிரித்து ஆராயலாம். அவையாவன:

1. இடுகாடுகள் காணப்படும் ஊர்கள் (Burial Sites)
2. குடியிருந்த பகுதிகள் (Habitation Sites)

சில ஊர்களில் இவர்களது இடுகாடுகள், குடியிருப்புப் பகுதி களுக்கு அருகாமையிலேயே காணப்படுகின்றன என்பதையும் கருத்தில் கொள்ளல்வேண்டும். இந்த இடுகாடுகளும், இவை மறைத்து வைத்திருக்கும் சவக்குழிகளும் இவர்தம் பண்பாட்டுச் சிறப் புக்கான மையமெனக் கருதலாம். இவர்தம் பண்பாட்டிற்குச் சிறந்த விளக்கங்களைக் கொடுக்கவல்லன இச் சவக்குழிகள். உலக இரும்புக் கால வரலாற்றில் இப்பண்பாடு சிறப்பாகப் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். இந்த இடுகாடுகளை அகழ்வதன் மூலம், சவக்குழிகளின் வெளித்தோற்றம், உள் அமைப்பு, அவற்றுள் காணப்படும் சவப் பெட்டிகள், தாழிகள், எலும்புக் கூடுகள், பானைகள் மற்றும் ஏனைய தொல்பொருள்களைப் பற்றிய குறிப்புகளை அறிய முடிகிறது.

இவர்களது இடுகாடுகள், ஈமத் தாழிகள், ஏனைய நினைவுச் சின்னங்கள் தமிழகத்தில் குறிப்பாகச் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஏறக்குறைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட சவக்குழிகள் இம்மாவட்டம் முழுவதும் பரவலாகக் காணப் படுகின்றன.[12] ஆகாயவிமானத்திலிருந்து இம்மாவட்டப் பகுதி களில் சிலவற்றினைப் புகைப்படம் எடுத்தால், இந்தச் சவக்குழிகள் அளிக்கும் வெவ்வேறு வகையான மேற்தோற்றத்தின் காட்சியை

---

*11.* 'மெகாஸ்' (Megos) என்றால் பெரியவென்றும், 'லிதோஸ்' (lithos) என்றால் கல் என்றும், கிரேக்க மொழியில் பொருள் கொள்ளலாம். பெரிய கற்களை அதிக அளவில் இம்மக்கள் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதாகும். தமிழில் இதனைப் பெருங்கற்காலம் அல்லது கற்கிடைக்காலம் என்று வழங்கலாம். பெரிய கற்கள் இவர்களது சவக்குழிகளை அலங்கரிக்கின்றன. இதை வைத்தே இவர்தம் பண்பாட்டிற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது.

**12.** ***Ancient India*, No. 12, P. 21**

நாம் கண்டு உணரலாம். இம் மாவட்டத்தில் சானூர்,[13] குன்றத்தூர்,[14] அமிர்தமங்கலம்[15] ஆகிய மூன்று ஊர்கள் அகழ்வாராய்ச்சிக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

சவக்குழிகளின் அமைப்புக்கு ஏற்றவாறு அவை பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் (1) கல் வட்டம் (**Cairn Circle**), (2) கல்லறை (**dolmenoid Cist**), (3) குடைக்கல் (**Umbrella Stone**) (4) தொப்பிக்கல் (**topikkal**), (5) குடைவரைக் குகை (**rockcut-cave**), (6) குத்துக்கல் (**menhir**), (7) நடுகல் (**hero-stone**), (8) ஈமத்தாழி (**urn**) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. மேற்கூறிய முதல் இரண்டு, கடைசி வகைகள் செங்கற்பட்டு மாவட்டம், பழைய புதுக்கோட்டை மாநிலப் பகுதிகளில் அதிகமாகக் காணப்படுகின்றன. குடைக்கல், தொப்பிக்கல், குடைவரைக் குகை போன்றவை கேரள மாநிலத்தில் மட்டும்தான் காணப்படுகின்றன. குத்துக்கல் வகை, சேலம், தர்மபுரி மாவட்டங்களிலும் கேரளத்திலும் காணப்படுகின்றது. நடுகல், தாழி போன்றவை தமிழகத்தில் பரவலாக எல்லாப்பகுதிகளிலும் காணப்படுகின்றன.

**கல்வட்டம்**

சவக்குழி, மேற்பகுதி அடைக்கப்பட்டுச் சிறியதும், பெரியதுமான பாறைகளால் அமைக்கப்பட்ட ஒரு வட்டத்தினுள் காணப்படுகிறது. சவக்குழியினுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தாழிகள், அல்லது சுடுமண் சவப்பெட்டிகள் புதைக்கப்பட்டுள்ளன. சவப்பெட்டிகள் நான்கு முதல் இருபத்திரண்டு கால்களைக் கொண்டிருக்கும். சானூரில் காணப்படும் இவ்வகைக் குழிகளில் ஐந்து மட்டும் அகழ்வாராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன (படம் 6, 7).

பழைய புதுக்கோட்டை மாநிலப் பகுதிகளில் இவற்றைக் 'குரங்குப்பட்டடை' என்று அழைக்கிறார்கள். 'குரக்குப்பட்டடை' என்பதே மருவி 'குரங்குப்பட்டடை' என ஆயிற்று. 'குரக்குப் பட்டடை' என்றால் மண்ணுக்கு அடியில் எடுக்கப்பட்ட படுக்கை என்பதாகும். (குரக்கு - புதைத்தல், படு (படை)-படுக்கை அல்லது சவப்பெட்டி இறந்தவருக்கு).[16]

சோழ அரசர்களது சவக்குழிகளின்மேல் எடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களைப் 'பள்ளிப்படை' என்று அவர்தம் கல்வெட்டுகள் குறிக்கின்றன என்பதனை இங்கு குறிப்பிடுதல் சாலப் பொருந்தும்.[17]

---

13. *Ancient India*, No. 12, PP. 28-34
14. *Indian Archaeology*, 1955-56—A Review, P. 23 ; 1956-57, PP. 31-34.
15. *Ancient India*, No. 12, P. 31.
16. K. R. Srinivasan, *Ancient India*, No. 2, PP. 9-10
17. 271 of 1927

பழனிக்கு அருகில் காணப்படும் சவக்குழிகள் 'பாண்டவர்'குழி என அழைக்கப்படுகின்றன. 'மாண்டவர்' குழியே, 'பாண்டவர்' குழி எனப் பிற்காலத்தில் மருவி வழங்கி வருகிறதுபோலும்.

**கல்லறை**

சவக்குழியின் உட்பகுதி நான்கு செங்குத்தான பாறைகளைக் கொண்டு, ஒரு சிறு அறையாகத் தடுக்கப்பட்டுள்ளது. அதன்மேல் ஒரு நீளமான பாறை கூரையாகப் போடப்பட்டுள்ளது. இது ஒரு சிறு கோயில் போலக் காட்சியளிக்கிறது. தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக் கலையின் தொடக்கத்தை நாம் இங்குக் காணமுடிகின்றது. [10]சவக்குழி கிழக்கு மேற்காக எடுக்கப்பட்டுள்ளது. குழியின் மேற்பகுதியும் மூன்று அல்லது நான்கு பெரிய பாறைகளைக் கொண்டு மூடப் பட்டுள்ளது. குழியினுள் கிழக்குப் பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ள பாறையில் ஒரு சிறிய இடைவெளி காணப்படுகிறது. இறந்தவர் களின் ஆவி குழியினுள் வந்துபோவதற்குச் செய்யப்பட்ட ஏற்பாடு இதுவெனக் கருதப்படுகிறது. குழியினுள் சுடுமண் சவப்பெட்டியும் புதைக்கப்பட்டுள்ளது. சானூரிலும், குன்றத்தூரிலும் காணப்படும் கல்லறைகளினுள், கிழக்குப் பக்கத்துப் பாறையில் இடைவெளி காணப்படவில்லை.

**குடைக்கல், தொப்பிக்கல், குத்துக்கல், குடைவரைக் குகை**

'குடைக்கல்' என்பது கவிழ்ந்த குடையைப் போன்ற வடிவம் கொடுக்கப்பட்ட ஒரு கல்லைக் கொண்டு மூடப்பட்ட சவக்குழியைக் குறிக்கும். 'தொப்பிக்கல்' என்பது மூன்று அல்லது நான்கு முக்கோண வடிவப் பாறைகளைக் கொண்டிருக்கும். 'குத்துக்கல்' என்பது 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை உயரங்கொண்ட ஒரு நெடுங் கல் சவக்குழியின் மேல் எழுப்பப்பட்டிருப்பதேயாகும். இக்கல்லைச் சுற்றிலும் சிறிய பெரிய கற்கள் வட்டவடிவமாக அமைக்கப் பட்டுள்ளன. சில ஊர்களில் இக்கல்லின் பக்கங்கள் செவ்வனே செதுக்கப்பட்டுள்ளன. குடைவரைக் குகை என்பது மலைப்பகுதி மிகுந்த இடங்களில் பூமிக்கு அடியில் பாறையைக் குடைந்து வெட்டப்பட்ட ஒரு கல்லறையாகும். பிற்காலக் குகைக் கோயில் களுக்கு இக்கல்லறைகள் முன்னோடிகளாக விளங்கியிருக்கவேண்டும் என ஊகிக்க முடிகின்றது. கேரள மாநிலத்திலுள்ள போர்க்களம் என்னுமிடத்தில் இவற்றைக் காணலாம்.[18] அறையினுள் கல் இருக்கை போடப்பட்டிருக்கிறது.

**நடுகல்**

நடுகல்லின் கதை எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். நடு கல்லில் பலவகைகள் காணப்படுகின்றன. தங்களது சமூகத்

18. *Ancient India*, No. 12, pp. 101–104.

திற்காகவோ, ஊருக்காகவோ, நாட்டிற்காகவோ பாடுபட்டு அதன் விளைவாக வாழ்க்கையை முடித்துக்கொண்ட நல்லோர்களுக்கு எடுக்கப்பட்ட நினைவுச் சின்னங்களே இவையாகும். இவற்றின்மேல் உருவங்கள், சித்திரங்கள், எழுத்துகள், சமயச் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நடுகற்கள் காணப்படும் இடுகாடுகளைப் பற்றிய சுவையான செய்திகள் சங்க இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றன. தற்காலத்தில் கிருத்தவர்களின் இடுகாடுகளில் தனித்தனியே பல கற்சிலுவைகள் நடப் பட்டிருப்பதைப் பார்க் கின்றோம். இதுபோன்ற ஒரு காட்சியினை நேரில் பார்க்கும் நாம், அக்கால நடுகல் இடுகாடுகளை மனக்கண்ணில் கண்டு நிறைவுபெற வேண்டியுள்ளது. நடுகல் நாட்டும் பழக்கம் தற்காலத் தமிழர் சமுதாயத்தில் ஒரு சிலரால்தான் பின்பற்றப்பட்டு வருகிறது.

முதுமக்கள் தாழிகள் ஆங்காங்கே தனித்தனியாகவும், கூட்டாக வும் புதைக்கப்பட்டுள்ளன. தாழி புதைக்கப்பட்டிருக்கும் நிலப் பகுதி சற்று மேடாகக் காணப்படுகிறது. அமிர்தமங்கலம் முழு வதும் இத்தாழிகள் அதிக எண்ணிக்கையில் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன[19] (படம்-8). அவற்றுள் பல அகழ்ந்தெடுக்கப் பட்டுள்ளன. தாழியின் அடிப்பக்கம் கூராக வடிக்கப்பட்டிருக்கிறது; எனவே மண்ணுக்கடியில் இவற்றைப் புதைப்பது எளிதாகிறது. சங்க இலக்கியங்கள் இவற்றை முதுமக்கள் தாழி அல்லது சாடி எனக் குறிக்கின்றன.[20]

### சவக்குழியில் காணப்படும் தொல்பொருள்கள்

சவக்குழியில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மண்டை ஓடுகளும் எலும்புக்கூடுகளும் அகப்படலாம். எலும்புக்கூடு பெரும் பாலும் நீட்டுவாக்கில் கிழக்கு மேற்காக வைக்கப்பட்டிருக்கும். இறந்தவர்கள் பயன்படுத்திய இரும்புக் கருவிகள், மட்பாண்டங்கள், அவர்கள் விரும்பி அணிந்த கல் மணிகள், சங்கு வளையல்கள் போன்ற பொருள்கள் இச்சவக்குழியினுள் காணப்படுகின்றன. இரும்புக் கருவிகளில் முக்கியமானவை கத்தி, ஈட்டிமுனை, அரிவாள், ஆணி, குதிரைலாடம் போன்றவையாகும். சவக்குழியினுள் குதிரைலாடம் காணப்படுவது ஆராய்ச்சிக்கு உரியதாகும். விலங்குகளுள் குதிரை அதிக அளவில் விரும்பி வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. இறந்தவர் களின் அன்றாட வாழ்க்கையில் குதிரையும் பங்கு ஏற்றிருக்கிறது

19. *Ancient India*, No. 12, p. 31.
20. *தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கத்தைச் சுட்டும் குறிப்புகள் கீழ்க்காணும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன ;*
*நற்றிணை: 271: 11-12: புறநானூறு : 238: 1-5: 364 : 10-14:*
*பதிற்றுப்பத்து : 44; 22-33: தக்கயாகப்பரணி ; 376.*
*குலோத்துங்க சோழன் உலா ; 22-24.*

என்பதைத்தான் இக்கண்டுபிடிப்பு உணர்த்துகிறது. இறந்தவர்கள் போர்வீரர்களாக இருந்திருக்கலாம். அல்லது வணிகப் பெருமக்களாக வாழ்ந்திருக்கலாம். அவர்கள் இரும்புப் பொருள்களை அதிக அளவில் பயன்படுத்தியுள்ளார்கள். இரும்புக் கருவிகளின்றிக் காணப்படும் சவக்குழிகள் அரிதாகும். மணிகள், உயர்ந்த வண்ணக் கற்களினால் செய்யப்பட்டுள்ளன. மட்பாண்டங்கள் சவ அடக்கத்தின் போது நிகழ்த்தப்பட்ட சடங்குகளுக்குப் பயன்பட்டு இருக்கலாம். எனினும் இதனை நன்கு ஆய்தல்வேண்டும். மட்பாண்டங்கள் கறுப்பு, சிவப்பு, கறுப்பு-சிவப்பு[21] (**Black and Red ware**) வண்ணங்களில் செய்யப் பட்டுள்ளன. பாத்திரங்களின் சுவர்கள் மிக மெல்லியதாகவும், மேற் பக்கங்கள் கண்ணாடிபோலப் பளபளப்புடனும் மின்னுகின்றன. இப் பானைகளினுள்ளும் மணிகள் போட்டு வைக்கப்பட்டுள்ளன.

இறந்த ஒருவரின் உடல் உடனேயே குழியில் புதைக்கப்பட வில்லை. இறந்த சிறிது காலத்திற்குப் பிறகு, அவரது மண்டை ஓடு, எலும்புக் கூட்டினைத் திரட்டி இக்குழியில் அடக்கம் செய்திருக் கிறார்கள். ஒரே குழியில் பலரது மண்டை ஓடுகளும், எலும்புக் கூடு களும் இத்தகைய முறையில்தான் அடக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். எனவே இச்சவக்குழிகள் இறந்தவர்களுக்குச் செய்யப் பட்ட இரண்டாவது சவ அடக்க நிலையை உணர்த்துகின்றன. தாழி களினுள் காணப்படும் எலும்புகளுக்கும், இவ்விளக்கத்தினைத்தான் கொடுக்க முடியும். ஏனெனில் சிறிய தாழியினுள் ஓர் உடலை அப்படியே நுழைப்பது என்பது இயலாத செயலாகும். ஆனால் குழந்தைகளின் சடலங்களைத் தாழியினுள் நுழைப்பது இயலும். எனினும் இம்முறையில் புரியாத சில சிக்கலான கருத்துகள் மறைந்து கிடக்கின்றன.[22]

இறந்த ஒருவருடைய உடலை முதலில் என்ன செய்தனர்? வேறொரு குழியில் புதைத்தனரா? எவ்வளவு காலத்திற்குப் பிறகு இறந்தவர்களின் மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளும் திரட்டப் பட்டன? ஒரு குழியில் காணப்படும் எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளும் ஒரே இனத்தைச் சார்ந்த பலரைச் சுட்டுகின்றனவா? அல்லது ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்களைக் காட்டுகின்றனவா? என்ற இப்புதிர்களுக்கு விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. இறந்த

---

21. *வடநாட்டில் லோதல், அம்ரா போன்ற ஊர்களில் வாழ்ந்த அரப்பா மக்கள் இம்மட்பாண்டங்களைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.*

22. *மணிமேகலையில் இறந்தவர்களை அடக்கம் செய்ய மக்கள் பின்பற்றிய முறை களைக் காட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன—"சுடுவோர்—இடுவோர்—தொடுகுழிப்படுப்போர்—தாழ்வாயினடைப்போர்—தாழியிற் கவிப்போர்"*
*—மணிமேகலை 6. 11. 66-67.*

வர்களின் சடலங்களை முதலில் எரித்து, பிறகு அவர்களது எலும்புகளைத் திரட்டி இக்குழிகளில் புதைத்திருக்கிறார்கள் எனக் கருதுவதற்கு இடமில்லை. ஏனென்றால் இக்குழிகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட எலும்புகளை ஆய்கையில் அவை சுடப்பட்டதற்கு எவ்வித ஆதாரங்களும் கிடைக்கவில்லை. மேலும் இறந்தவர்களை எரிக்கும் பழக்கமும் இம்மக்களிடையே கிடையாது.[23]

தென்னகத்தைத் தவிர ஒருசில வட இந்திய மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் இச்சவக்குழிகள் தென்படுகின்றன. அவற்றுள் பிரான்ஸ், இங்கிலாந்து, பலுச்சிஸ்தான், பாக்கிஸ்தான் (அரப்பா அருகில்) போன்ற நாடுகள் குறிப்பிடத் தக்கனவாகும். ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னமேயே இப்பண்பாடு தமிழக எல்லைக்கு அப்பாலும் பல நாடுகளுக்கு ஊடுருவிச் சென்றிருக்கிறது என்பதை உணரமுடிகின்றது.

## குடியிருந்த பகுதிகள் - அரிக்கமேடு

பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள இவ்வூரிலேயே முதன்முதலில் அறிவியல் முறைப்படி அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. 1945ஆம் ஆண்டு சர் மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) என்பவரால் இப்பணி இங்குத் தொடங்கப்பட்டது.[24] தமிழ்நாட்டிற்கும், உரோமாபுரிக்கும் இடையே வாணிக, பண்பாட்டுத் தொடர்பு இருந்துவந்ததைப் பற்றிச் சங்க இலக்கியங்களும், வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகளும் உணர்த்துகின்றன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். தமிழர், உரோமாபுரி மக்களிடையே நிலவிய உறவினை வலுப்படுத்த இக் கடற்கரைப்பட்டினம் பெரிதும் பயன் பட்டிருக்க வேண்டும். இவ்வூரில் உரோமர்கள் மிகப் பலர் பெரிதும் விரும்பித் தங்கி வாழ்ந்து வந்தனர். அவர்கள் வசித்த வீடுகள், பயன் படுத்திய தங்கக் காசுகள், பானைகள் (படம் 9) இன்னும் பல பண்பாட்டுச் சின்னங்கள் அகழ்வாராய்ச்சியின் மூலம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இத்தொல்பொருள்கள் சுமார் கி. மு. முதல் நூற்றாண்டுக்கும் கி. பி. முதல் நூற்றாண்டிற்குமிடைப்பட்ட காலத்தைச் சார்ந்தவையாகும்.

சுடுமண்ணால் செய்யப்பட்ட அழகிய ஆண், பெண் உருவங்கள், வண்ணம் தீட்டப்பட்ட பளப்பளப்பான பானைகள், உருவங்கள் வரையப்பட்ட பானை ஓடுகள், 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள், தந்தப் பொருள்கள், அழகான, பளப்பளப்பான பல

23. ஆதிச்சநல்லூரில் தாழிகளிலிருந்து மண்டை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டன. அவை திராவிட இனத்தைச் சார்ந்தவை என அறிவிக்கப்பட்டுள்ளது.
24. *Ancient India*, No. 2, pp. 17–124.

வண்ணக் கற்களால் செய்யப்பட்ட மணிகள், சுடுமண் காதணிகள், சங்கு வளையல்கள் போன்றவையும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஒரு சாயத்தொட்டியும் கிடைத்துள்ளது. இவை தமிழர் பண்பாட்டுப் பெருமையை மேலும் உயர்த்தும் வகையில் அமைந்துள்ளன. அன்றியும் அக்கால மக்களின் சமூக வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடிகளாகவும் விளங்குகின்றன. இங்கு அகப்பட்டுள்ள சுடுமண் பொம்மைகள் வரலாற்றுச் சிறப்புமிக்க கலைப்பொருள்களாகும். அவற்றுள் தெய்வத் திருவுருவங்கள், பெண் உருவங்கள், அக்கால மகளிர் சேலை உடுத்தும் முறை, முடி ஒப்பனை செய்துகொள்ளும் பாணி, காதணிகள், கை வளையல்கள் ஆகியவற்றை அணிகின்ற அழகு போன்ற கலைச்சுவை மிக்க கூறுகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுகின்றன. ஒரு பெண் ஆரியப் பாணியில் சேலை உடுத்திக்கொண்டிருக்கிறாள். இதன் காலம் சுமார் கி.பி. இரண்டாம் நூற்றாண்டாகும். இப் பொம்மை தமிழகத்தில் ஆரியப் பண்பாட்டின் ஊடுருவலைக் காட்டுகின்றது. 'பிராமி' எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அக்கால சமுதாயத்தில் சாதாரணக் குடிமக்களிடையே நிலவிவந்த கல்வி, எழுத்து அறிவை நமக்கு உணர்த்துகின்றன.

தமிழகத்தில் 'பிராமி' எழுத்தின் காலம் கி. மு. 300 முதல் கி. பி. 400-500 வரை எனக்கொள்ளலாம். 'பிராமி' எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் எடுக்கப்பட்டுள்ள சமணர் குகைச் சுவர்களில் காணப்படுகின்றன.[25] அரிக்கமேட்டுப் பானை ஓடுகளில் காணப்படுகின்ற 'பிராமி' எழுத்துகள், கி. பி. முதல், இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகும். 'பிராமி' எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அலகரை, உறையூர், கொற்கை,[26] காஞ்சிபுரம் போன்ற ஊர்களிலும் கிடைத்துள்ளன. எழுத்துகள் 'பிராமி'யாக இருந்தாலும் அவை உணர்த்தும் மொழி தமிழேயாகும். தமிழ் எழுத்துகளின் தற்கால வடிவங்கள் மிகப் பழங்காலத்திலேயே தோன்றிப் பல கட்டங்களைக் கடந்து வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். தமிழ் எழுத்துகள் தோன்றிய காலத்தில் அவற்றின் வடிவம் எவ்வாறு இருந்திருக்கவேண்டும் என்பதை இப் பானை ஓடுகளிலும், குகைகளிலும் காணப்படும் 'பிராமி' எழுத்துகள் நமக்கு ஓரளவுக்கு உணர்த்துகின்றன. இந்தியாவில் ஆதிகாலத்தில் வழக்கில் இருந்து வந்த எழுத்து வடிவம் 'பிராமி'யேயாகும். தற்போது வழக்கில் இருக்கின்ற பல்வேறு எழுத்து வடிவங்கள் 'பிராமி'யின் மூலமாகத்தான் உருப்பெற்று வளர்ந்துவந்துள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள்

25. அட்டவணை-1.

26. கொற்கையில் இப் 'பிராமி' எழுத்துகளின் காலம் கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டு எனக் கணிக்கப்பட்டுள்ளது.

கருதுகின்றூர்கள். தமிழ் எழுத்து வடிவம் 'பிராமி'யிலிருந்து தோன்றி வளர்ந்து வந்திருக்கலாம் என நாம் நம்பிஞல் இந்த 'பிராமி' கல்வெட்டுகளும், பானை ஓடுகளும் வரலாற்றுச் சிறப்புடையன வாகும்.[27]

## செங்கமேடு

இவ்வூர், திருமுதுகுன்றம் எனப்படும் விருத்தாசலத்திற்கு மேற்கே 20 கிலோமீட்டர் தொலைவில் தேநதியும், மணிமுத்தாறும் கலக்கின்ற இடத்தில் அமைந்துள்ள ஒரு பெரிய மேடாகும். நல்லூர் என்ற கிராமத்திற்கு மிக அண்மையில் உள்ளது. தேநதியின் வட கரையில் அமைந்துள்ள இந்த மேடு சுமார் ஒரு மீட்டர் நிலப்பரப்பள வுள்ளது. ஆற்றுநீரின் ஓட்டப்பெருக்கிஞல் கரைந்து கொண்டிருக் கும் இம்மேடு, இதனடியில் புதைந்துகிடக்கின்ற, சிதைந்த கட்டடங் களின் செங்கற்களை நமக்குக் காட்டுகின்றது. மேட்டின் மேற்பரப்பில் ஏராளமான பெரிய செங்கற்கள், பழங்காலப் பானை ஓடுகள், மணிகள் போன்றவை காணப்படுகின்றன.

இவ்வூரின் பெயரே ஆராய்ச்சிக்குரிய ஒன்ருகும். இந்த மேடு செங்கற்களாலான ஒரு பழமையான மேடாக இருப்பதால் இதற்குச் செங்கமேடு எனப் பெயர் வந்திருக்கலாம். மற்ருெரு கருத்துப்படி இந்த இடம் ஆற்றில் பொருள்களை ஏற்றிச் செல்கின்ற மரக்கலங்கள் நிறுத்தப்படுகின்ற இடமாக இருத்திருக்கவேண்டும் என்பதாகும். இவ்விடத்தைக் கடந்து செல்கின்ற மரக்கலங்களுக்கு இங்கே சுங்கம் வாங்கப்பட்டிருக்கலாம். எனவே இது சுங்கமேடு என அழைக்கப்பட்டு, அதுவே நாளடைவில் மருவி செங்கமேடு என்று வழக்கில் வந்திருக்கலாம். இன்னும் ஒரு சிலர் கருத்துப்படி தேநதியும், மணிமுத்தாறும் கலக்கின்ற (சங்கமமாகின்ற) இடத்தில் அமைந்திருப்பதிஞல் இது சங்கமேடு என்று அழைக்கப்பட்டு, பிறகு அதுவே வழக்கில் செங்கமேடு என மருவியிருக்கலாம் என்பதாகும்.

இம்மேட்டின் ஒரு பக்கம் இரண்டு 'பர்லாங்கு' தொலைவிற்கு ஆற்றுப் போக்கின் வேகத்தால் அறுக்கப்பட்டு ஒரு பெரிய செங்கற்

---

27. *தமிழ் எழுத்துகள் 'பிராமி'யிலிருந்து உருப்பெற்று வளர்ந்து வந்துள்ளன என்ற கூற்றை ஒப்புக்கொள்ளத் தயக்கமாக உள்ளது. காரணம், தமிழ் எழுத்துகளின் தொடக்கம் கி. மு. 300 எனக் கொள்ளல்வேண்டும். எனி னும் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவங்களில் சில 'பிராமி' எழுத்துகளை ஒத்துள்ளன. எனவே, 'பிராமி' எழுத்துகள், சிந்து வெளி நாகரிகத்திற்குரிய எழுத்துகளிலிருந்து உருப்பெற்று வளர்ந்து வந்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது; மேலும் சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகம் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகையால் 'பிராமி' யிலிருந்து தமிழ் எழுத்துகள் தோன்றியிருக்கலாம் எனக் கருத வாய்ப்புள்ளது.*

கட்டடம் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியே தெரியவந்தது (படம்-10). காலப்போக்கில் இக்கட்டடம் சிதைந்து, இப்போது சில செங்கல் வரிசைகளைக் கொண்டு காட்சியளிக்கிறது.[28] சிதைந்து காணப்படும் செங்கல் வரிசைகளை வைத்துப் பார்க்கையில் 3 மீட்டர் உயரம் கொண்ட ஒரு கட்டடம் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு கரையோரத்தில் கட்டப்பட்டிருக்கவேண்டும் எனத் தெரியவருகிறது. செங்கற்கள் மிகப் பெரியதாயும், அதிக எடையுடனும் காணப்படுகின்றன. ஒரு கல்லின் நீளம் 42 சென்டி மீட்டர், அகலம் 18 சென்டி மீட்டர், உயரம் 9 சென்டி மீட்டர் ஆகும். சங்க காலத்திலும் அதற்குப் பிந்திய பல்லவர், சோழர் காலத்திலும் தமிழகத்தில் இத்தகைய நீளமும், அகலமும் கொண்ட செங்கற்கள் பயன்படுத்தப்பட்டுவந்தன என்பது அகழ்வாராய்ச்சி காட்டும் உண்மையாகும். இதுபோன்ற செங்கற்கள் உறையூர், காவிரிப் பூம்பட்டினம், அரிக்கமேடு, நத்தமேடு, சோழமாளிகை, காஞ்சி புரம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன. இந்தக் கட்டடம் கி. பி. 200-900 கால வரம்பிற்குட்பட்டதாகும். இதற்கும் முன்பே இங்கு மக்கள் குடியிருந்ததற்குத் தடயங்களும் கிடைத்துள்ளன. அவை வருமாறு : உரோமர் மட்பாண்ட ஓடுகள், சங்கு வளையல், மணி, காதணி போன்ற பொருள்கள், ஈமத் தாழிகள் முதலியன வாகும். இவற்றை ஆராயும்போது இவ்வூரில் மக்கள் குடியிருப்பின் தொடக்கம் சுமார் கி. மு. 300 எனக் கணிக்கலாம். முன்பு உரோமர்கள் தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் மட்டும்தான் வாணிகம் செய்து வந்தார்கள் என்று கருதப்பட்டு வந்தது. உள் நாட்டிலும் அவர்கள் மக்களுடன் தொடர்பு கொண்டு தங்கள் வாணிகத்தைப் பெருக்கி வந்தனர் என இப்போது அறிகின்றோம். இது தொல்பொருளாராய்ச்சியின் அரிய சாதனையன்றோ !

## திருக்காம்புலியூர்

கீழ்க்காவிரிப் பள்ளத்தாக்கில் புதையுண்டு கிடக்கின்ற தமிழர் பண்பாட்டுச் சிறப்பினை உலகுக்கு உணர்த்தவே இங்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை, 1962-63ல் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது. இது காவிரியாற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். தமிழர் நாகரிகமும், பண்பாடும் காவிரியாற்றின் கரைகளில் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு தோன்றி வளர்ந்த கதையை நாம் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது இவ்வகழ் வாராய்ச்சி. அக்காலத்தில் காவிரியாற்றின் நீர்ப் பெருக்கினுல் நில வளம் மிகுந்த நாடாகத் தமிழகம் விளங்கிற்று; இன்றும் விளங்குகிறது. குறிப்பாக, சோழர் காலத்தில் காவிரிப் பள்ளத்தாக்கின்

---

28. *March of India*, 1956, pp. 43-46.

வளத்தினை வருணிக்க வார்த்தைகள் போதா. வானளாவிய பல கோயில்கள் இங்கே எழுந்தன. தமிழர்களின் அயராத உழைப்பினையும், கலைத்திறனையும், கற்பனை வளத்தையும், சமய வாழ்க்கையின் மேம்பாட்டையும் உலகுக்கு இன்றும் இவை பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன. பழந்தமிழர் பண்பாட்டுச் சிறப்பினைச் சங்க இலக்கியங்கள் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் கருத்துகளையும் நம் மனத்தில் கொண்டு, அகழ்வாராய்ச்சிகளின் மூலம் கிடைத்துள்ள சான்றுகளையும் வைத்து ஒப்பிட்டுச் சீர்தூக்கிக் காணும்போது இலக்கியங்களின் அருமை பெருமை மேலும் உயர்வடைகின்றது. அக்காலப் புலவர்கள் தாங்கள் நேரில் பார்த்து அனுபவித்த காட்சிகளையேதான் இலக்கியங்களாக வடித்துள்ளனர் என்பது புலனாகிறது. அவர்கள் எதனையும் உண்மைக்குப் புறம்பாகவோ, வெறும் புகழ்ச்சிக்காகவோ உரைக்கவில்லை. அகழ்வாராய்ச்சி மூலம் கிடைக்கப்பெற்ற பண்பாட்டுச் சின்னங்களை நாம் நேருக்கு நேராகப் பார்க்க முடிகின்றது. அவற்றைப் பிற மக்களுக்கு எடுத்துக்காட்டவும் முடிகின்றது.

கி. மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பதினாறும் நூற்றாண்டுவரை வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்துகொள்ள இவ்வூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி உதவுகிறது. திருக்காம்புலியூரில் ஆதிமக்களின் குடியேற்றம் தொடங்கிய காலம் ஏறக்குறைய கி. மு. 500 ஆகும். இங்கு புதையுண்ட ஒரு பெரிய செங்கற்கட்டடம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது இரண்டு சிறிய அறைகளையும், ஒரு முன் தாழ்வாரத்தையும் கொண்டுள்ளது. இது ஒரு நெற்களஞ்சியமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் (படம்-11). இறுகிய களிமண், சிறிய அரைச் செங்கற்கள் ஆகியவற்றால் சுவர்கள் கட்டப்பட்டுள்ளன. களிமண் கூழ், இணைக்கும் சாந்தாகப் பயன்பட்டிருக்கிறது. இக் கட்டடம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்கவேண்டும். இடிந்த மண்சுவர்கள், கூரையைத் தாங்குவதற்காகப் பொருத்தப்படுகின்ற மூங்கில் கால்களைத் தாங்கும் குழிகள் போன்றவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. களிமண்ணாலாகிய சுடாத கற்களைக் கொண்ட இடிந்த சுவர்களும் அகப்பட்டுள்ளன (படம்-12). அக்காலக் கட்டடக்கலையின் மேம்பாட்டினை இவற்றின் மூலம் நாம் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ள முடிகின்றது. சிதைந்த கட்டடங்களைத் தவிர, கண்ணைக் கவரும் வண்ண வேலைப்பாட்டுடன் கூடிய பானை வகைகள் (படம்-13), கிண்ணங்கள், தட்டுகள், கல் மணிகள், சங்கு வளையல்கள், இரும்பு, செப்புப் பொருள்களும் இங்கே நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளன.[29]

---

29. T. V. Mahalingam, *Excavations in the Lower Kaveri Valley*, University of Madras, 1970. pp. 10-59.

## அலகரை

இது காவிரியாற்றின் வடகரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூராகும். காவிரியாற்றின் அலைகள் மோதுகின்ற கரையில் அமைந்திருப்பதால் இவ்வூர் அலகரை (அலைகரை) எனப் பெயர் பெற்றதுபோலும். தென் கரையிலுள்ள திருக்காம்புலியூரிலிருந்து இவ்வூர் 10 கிலோ மீட்டர் தொலைவிலுள்ளது. இங்கு அகழ்ந்தெடுக்கப் பட்ட தொல்பொருள்கள் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சி காட்டும் பழந் தமிழர் நாகரிகத்தை விரிவுபடுத்தி விளக்கிக் கூறப் பயன்படுகின்றன.[30] இரண்டு ஊர்களும் ஒரே காலவரம்பிற்குட்பட்டவையாகும். காவிரியாற்றின் எதிரெதிர்க்கரைகளில் அமைந்திருந்தாலும் இவை காட்டும் பண்பாடு ஒன்றேயாகும். கி. பி. இரண்டாம் நூற்றுண்டுக்குட்பட்ட 'பிராமி' எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அழகிய சுடுமண் தெய்வத்திருவுருவங்களும், வண்ண ஓவியங்கள் தாங்கிய பளபளப்பான பானை ஓடுகளும் இவ்வூரின் பண்டைய பெருமையைத் தெரிவிக்கின்றன.

## உறையூர்

முற்காலச் சோழர்களின் தலைநகரமாக விளங்கிய உறையூர் சங்க காலத்தில் தலைசிறந்த ஒரு வாணிகத்தலமாக விளங்கிற்று. சங்க காலத்தில் 'கோழியூர்' என இது அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங்கள் சிலவற்றில் இவ்வூரின் சிறப்பு விளக்கமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. உறையூர் பல முதுபெரும் புலவர்களை நாட்டிற்குத் தந்துள்ளது. நீதியின் உறைவிடமாகத் திகழ்ந்தது. இத்தகைய வரலாற்றுப் பெருமைபெற்ற உறையூரில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது சாலச் சிறந்த ஒரு செயலாகும். ஆதி உறையூர் மக்களின் அன்றுடப் பழக்கவழக்கங்கள், மொழி, சமய வாழ்க்கை, உரோமாபுரி மக்களுடன் அவர்கள் கொண்டிருந்த நட்பு, உறவு ஆகியவை பற்றிய அரிய சுவையான குறிப்புகளை அகழ்வாராய்ச்சி நமக்கு நல்குகின்றது. கி.மு. 3ஆம் நூற்றுண்டுக்கும், கி.பி. 14ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த உறையூர் மக்களது பண்பாட்டுச் சிறப்பினை அகழ்வாராய்ச்சி படம் பிடித்துக் காட்டுகின்றது.[31] இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்களுள், உரோமர்கள் பயன் படுத்திய சாயத்தொட்டி (Dyeing vat) (படம்-14), 'ரவுலடெட்' மட்பாண்ட வகை, 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள் (படம் - 15, 16), சுடுமண் உருவங்கள், சிறு கல்மணிகள், சங்கு வளையல்கள், இரும்பு, செப்புப் பொருள்கள் போன்றவை குறிப்பிடத்

30. அடிக்குறிப்பு 29 ; pp. 63-116.

31. சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை இங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது (1965-69).

தக்கவை. உரோமர்களது சாயத்தொட்டியும், பானை வகைகளும் அவர்கள் இவ்வூருடன் கொண்டிருந்த தொடர்பினைக் காட்டுகின்றன. இவற்றின் காலம் கி.பி. 2ஆம் நூற்றாண்டெனக் கணிக்கலாம். அக் காலத்தில், ஆடை நெய்தல், அவற்றுக்குச் சாயம் பூசுதல் போன்ற தொழில்களுக்குப் பெயர்பெற்ற நகரமாக உறையூர் விளங்கியிருக்க வேண்டும். இன்று, இவ்வூர்க் கைத்தறிச் சேலைகளைப் பற்றித் தெரியாத மகளிர் நம் நாட்டில் இருப்பர் என்பது அரிதாகும். உரோமாபுரிக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களின் பட்டியலில் இவ்வூர்க் கைத்தறி ஆடைகளும் இடம்பெற்றிருக்க வேண்டும். மேலும், பல வண்ணக் கற்களினால் செய்யப்பட்ட மணிகளை உரோமர்கள் பெரிதும் விரும்பி வாங்கியிருத்தல் வேண்டும். சுடுமண் தாயக்கட்டைகள், சதுரங்கக் காய்கள், உருண்டை வடிவ எடைகள், முத்திரைகள் போன்ற அரிய பொருள்களும் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உறையூரின் அழிவைப்பற்றியும் அகழ்வாராய்ச்சி ஓர் உண்மையை எடுத்துக் காட்டுகிறது. அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட குழிகளில் மணலும், களிமண்ணும் அடுக்கடுக்காக அடுத்தடுத்துக் காணப்பட்டன. அவற்றின் இடையே சிறிதும், பெரிதுமான கருங் கற்கள் புதையுண்டிருந்தன. ஒரு பெரிய வெள்ளப் பெருக்கினால் இந்நகர் பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதையே இவை புலனாக்கு கின்றன. அகழ்வாராய்ச்சி கணிப்புப்படி, இவ்வடுக்குகளின் காலம் கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டாகும். இங்கு ஏற்பட்ட வெள்ளச் சிதைவைப் பற்றி ஒரு கல்வெட்டு குறிப்புகளை நல்குகிறது. உறையூருக்கு வடமேற்கில் சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள அல்லூரில் கண்டெடுக்கப்பட்ட இக்கல்வெட்டில், காவிரியாற்றின் வெள்ளப்பெருக்கினால் அல்லூரும் அதன் சுற்றுப்புறமும் அழிந்து போகநேர்ந்தது என்று குறிக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டின் காலம் கி. பி. 944ஆம் ஆண்டாகும். எனவே சங்க காலத்திய உறையூர், கி. பி. பத்தாம் நூற்றாண்டில் காவிரியாற்றின் சீற்றத்திற் குள்ளாகி அதனால் சிதைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை இவ்வூர் மண் தன்னுள் மறைத்து வைத்துக்கொண்டிருந்தது. இப் போது அகழ்வாராய்ச்சி, அந்த மண் மறைக்க முற்பட்ட இரகசி யத்தை வெளிப்படுத்தியுள்ளது. மண்ணுள் ஆராய்ச்சியின் மகத்தான சாதனையை மக்கள் அறிய இது ஒரு வாய்ப்பல்லவோ !

### கரூர் (கருவூர்)

சேரர்களின் தலைநகரான வஞ்சியின் இருப்பிடம் குறித்துப் பல கருத்து வேறுபாடுகள் இருந்து வருகின்றன. தற்போது திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரே, சேரர்களின் தலைநகரான வஞ்சியாகும் என்ற கருத்து வலுப் பெற்று வருகிறது. மேலும், சங்க இலக்கியங் களும், கல்வெட்டுகளும் இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில்

சான்றுகளைப் பகர்கின்றன. டாக்டர் கால்டுவெல், 'தாலமி' போன்ற அறிஞர்களும், சேரர்களின் தலைநகர் கருரே எனக் கூறியுள்ளார்கள்.

இந்தக் கருத்துக்கு வலுவூட்டும் சான்றுகளைப் பெறவே இங்குத் தமிழ்நாடு அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளது. சிதைந்த கட்டடங்கள், உரோமர் மண்கலங்கள், சுடுமண் பொம்மைகள், 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள் போன்ற தொல் பொருள்கள் இங்கு அகப்பட்டுள்ளன.[32] இவற்றின் காலம் கி. பி. முதல், இரண்டாம் நூற்றுண்டாகும். இங்கு அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

## காவிரிப்பூம்பட்டினம்

காவிரிப்பூம்பட்டினம் சோழர்களது முக்கிய நகரங்களுள் ஒன்ருகவும், அவர்களது வாணிக வளர்ச்சிக்குரிய கடற்கரைப் பட்டினமாகவும் விளங்கிற்று. யவன ஆசிரியர் 'தாலமி' எழுதியுள்ள வரலாற்று ஏடுகளிலும், 'பெரிபுளூஸ்' என்ற நூலிலும் இப்பட்டினத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. கரிகால் வளவன் காலத்தில் இவ்வூர் விழாக்கோலம் பூண்டிருந்தது. காவிரியாறு கடலோடு கலக்கும் நிலப்பகுதியில் அமைந்திருந்தமையால் இவ்வூர் புகார் என வழங்கப் பெறுவதாயிற்று.

இந்நகர், சங்க காலத்தில் புத்த சமய இருப்பிடமாகவும், ஒரு துறைமுகப்பட்டினமாகவும் திகழ்ந்தது. இந்த இரண்டு கருத்துகளையும் உலகுக்கு உணர்த்தும் வகையில் அரிய சில உண்மைகளை அகழ்வாராய்ச்சி தந்துதவியுள்ளது.[33] சிதைந்த புத்த விகாரங்கள், புத்தருடைய உருவங்கள், திருவடிகள் இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் சுமார் கி. பி. மூன்ரும் நூற்ருண்டு எனக் கருதப்படுகிறது. உரோமர்களது 'ரவுலடெட்' மட்பாண்டங்களும் கிடைத்துள்ளன. நீர்த்தேக்கச் சுவர்கள், கப்பல் நிறுத்தப்படும் இடம், மண்ணுக்கடியில் ஓடும் கழிவுநீர்க் குழாய்கள், அழகிய சுடுமண், களிமண் உருவங்கள், மணிகள், சங்கு வளையல்கள், வெண்கலத்தால் செய்யப்பட்ட உருவங்கள், சோழர் காசுகள் போன்ற பண்பாட்டுச் சின்னங்களும் இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வேற்று நாடுகளிலிருந்தும், உள்நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் புகார்த்துறை முகத்தில் வந்து இறங்கிய பொருட் குவியல்களைப் பட்டினப்பாலையில் கீழ்க்கண்டவாறு உருத்திரங்கண்ணனர் விளக்கியுள்ளார் :

32. *The Hindu*, 26-6-1973.

33. *Indian Archaeology*, 1963-64; 1964-65; 1965-66; — A Review.

" நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்துங் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின் " [34]

கடல் வாணிகத்தால் இந்நகரில் வந்து குவிந்த செல்வ வளத்தைச் சிலப்பதிகாரம் சிறப்புறக் காட்டுகிறது :

" முழுங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாவளத்த தாகி
அரும்பொருள் தருஉம் விருந்திற் றேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும்பண்டம் " [35]

எனவே பூம்புகாரில், பல நாடுகளிலிருந்து வந்த வணிகப் பெருமக்களின் போக்குவரத்து இருந்திருக்க வேண்டும் எனத் தெரியவருகிறது. இக்கருத்தினை மெய்ப்பிக்கும் வகையில், இங்கு கண்டெடுக்கப்பட்டுள்ள உரோமர்களது மட்பாண்ட வகைகள் சான்றுகளாக அமைந்துள்ளன. இவ்வூரின் பழம் பெருமையை உணர்த்தும் வகையில் இங்கு ஒரு சிலப்பதிகாரக் கலைக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் வரலாற்றுடன் தமிழக அரசியல் வரலாறு பின்னிப் பிணைந்துள்ளது என்று கூறலாம். இங்குப் பல்வேறு அரசு மரபுகளுக்குரிய கலைக்கோயில்களை இன்றும் காணலாம். இந்நகரின் அமைப்பையும், வரலாற்றுச் சிறப்பையும் பல மேனாட்டு அறிஞர்கள் பாராட்டியுள்ளார்கள். இந்நகர், அரசு இருக்கையாக, அறிஞர்கள் இருப்பிடமாக, கல்வி நிலையமாக, ஆலய நகராக, பல சமயங்களின் உறைவிடமாக, புலவர்களின் கற்பனைக்கு ஒரு கருவூலமாகத் திகழ்ந்தது. இன்று தமிழகத்தில் பழமையும் புதுமையும் இணைந்து காணப்படும் ஒரு தலை சிறந்த நகராக விளங்குகின்றது. விண் மறைக்கும் கோபுரங்களும் வினை தீர்க்கும் கோயில்களும் காணப்படும் காஞ்சி மண்ணில் அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது சாலச் சிறப்புடையதாகும்.

---

34. பட்டினப்பாலை : 185-193.
35. *சிலப்பதிகாரம், மனையறம்,* 3-6.

கச்சபேசுவரர் கோயிலுக்கு அருகிலுள்ள பல்லவமேடு என்ற இடத்திலும்[36] சங்கர மடத்தின் உள்ளேயும்,[37] காமாட்சி கோயிலுக்கு அருகிலும்[38] அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. உரோமர்களின் 'ரவுலடெட்', 'அர்ரிடைன்', 'ஆம்போரா', (படம்-17) போன்ற மட்பாண்ட வகைகள், சாதவாகனர், பல்லவர் நாணயங்கள், சின்னஞ் சிறு சுடுமண் பொம்மைகள், இரட்டை மீன், ஆமை, 'ஸ்ரீவத்சம்' போன்ற வடிவங்களில் செய்யப்பட்ட பதக்கங்கள், சங்ககால வேந்தர்களின் உருவங்களென வியக்கும்வண்ணம் முடி அலங்கரிக்கப்பட்ட சுடுமண் ஆண் உருவங்கள், 'பிராமி' எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், புத்த ஸ்தூப வடிவம் தாங்கிய கைப்பிடியினைக் கொண்ட பானை மூடிகள், புத்தத் துறவிகள் பயன்படுத்திய கமண்டலம், பன்னீர்க்கூசா போன்ற பாத்திரங்களின் உடைந்த பகுதிகள், பெரிய அகல்விளக்குகள், வண்ணக் கற்களால் செய்யப்பட்ட மணிகள், சங்குவளைத்துண்டுகள் ஆகிய தொல்பொருள்கள் இங்குக் கிடைத்துள்ளன. இவற்றின் மூலம் உரோமாபுரியுடன் காஞ்சி மக்கள் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. களிமண்ணில் கண்கவரும் பொம்மைகளைச் செய்யும் கலையில் காஞ்சி பெயர் பெற்றிருக்க வேண்டும். சில ஆண் உருவங்களுக்கு, பல மடிப்புகளைக் கொண்ட விசிறி போன்று முடி ஒப்பனை செய்யப்பட்டுள்ளது. அக்காலத்திய குறுநில மன்னர்களை நினைவு படுத்துகின்றன இவ்வுருவங்கள் (படம் - 18). கி.பி. இரண்டு அல்லது மூன்றும் நூற்றாண்டில் கோலோச்சிய பாண்டிய அரசு மரபைக் குறிக்கும் வகையில் அமைந்துள்ளது இரட்டை மீன்வடிவ அணிகலன். இவற்றைத் தவிர, சுடுமண் மணிகள், முத்திரைகள், காதணிகள், விளையாட்டுப் பொருள்கள் போன்றவை நூற்றுக்கணக்கில் கிடைத்துள்ளன.

காமாட்சியம்மன் கோயிலுக்கு அருகில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சியில், பெரிய செங்கற்களால் கட்டப்பட்ட ஒரு கட்டடம் சிதைந்து காணப்பட்டது. இக்கட்டடம், இடிந்த புத்த ஸ்தூபத்தின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மண்ணுள் 5 மீட்டர் ஆழத்தில் இது காணப்பட்டது (படம் - 19). செங்கற்கள் ஒவ்வொன்றும் 50 செ. மீ. நீளமும், 22 செ. மீ. அகலமும், 6 செ. மீ. உயரமும் கொண்டுள்ளன. இத்தகைய பெரிய செங்கற்களைக் கொண்டே அக்காலக் கட்டடக்கலையின்

---

36. தமிழக அரசு, தொல்பொருள் ஆய்வுத்துறை இங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டது (1970).
37. *Indian Archaeology*, 1962-63-A Review, P.12.
38. இங்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத்துறை அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளது (1970-73); அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடத்தப்படவிருக்கிறது.

மேன்மையை நாம் ஒருவாறு ஊகித்து உணரலாம். இந்தக் கட்டடத்தைச் சுற்றிலும் மூங்கில் அல்லது மரக்கால்களைத் தாங்கிய குழிகள் பல காணப்பட்டன. எனவே, ஸ்தூபத்திற்கு வெகு அருகில் ஒரு பந்தல் வேயப்பட்டிருந்தது எனக் கருத வாய்ப்புள்ளது. அகழ்வாராய்ச்சிக் கணக்குப்படி இந்த ஸ்தூபம், கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். இதன் மூலம், இலக்கியங்களும் சீனப் பயணி 'யுவான் சுவாங்' கும் குறிக்கும் புத்த காஞ்சி, செங்கை மாவட்டத்தில் உள்ள இவ்வூரே என்பதைத் தெளிவாக இன்று நாம் உணருகிறோம். புத்த மதத்தின் வளர்ப்பிடம் என்று போற்றப்படுகின்ற இந்தக் காஞ்சியில் ஒரு ஸ்தூபம் கூடக் காணப்படவில்லை. எனவே 'யுவான்சுவாங்'கால் வருணனை செய்யப்பட்டுள்ள காஞ்சிபுரம் இதுவல்ல என்று சில அறிஞர்கள் வாதாட முற்பட்டனர். அவர்களது வாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்துள்ளது காஞ்சி மண்ணுள் மேற்கொள்ளப் பட்ட அகழ்வாராய்ச்சி. இன்றும், காஞ்சியில் சில இடங்களில் அமர்ந்த நிலையிலிருக்கும் புத்தரின் மிகப் பெரிய கல் உருவங்கள் கேட்பாரற்ற நிலையில் சிதறிக் கிடக்கின்றன. இவற்றின் காலம் ஏறக்குறைய கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டெனலாம். காஞ்சியில் கிடைத்துள்ள பல வகைத் தொல்பொருள்களை ஆய்ந்தால், கி. மு. 3ஆம் நூற்றுண்டிற்கும், கி. பி. 14ஆம் நூற்றுண்டிற்கும் இடைப் பட்ட காலத்திய காஞ்சி மக்களின் பண்பாட்டுப் பெருமையை நாம் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளலாம்.

**வசவசமுத்திரம்** (சதுரங்கப்பட்டினம் அருகில்)

இவ்வூர் மாமல்லபுரத்திற்கு அருகில் உள்ள ஒரு பழமையான கிராமமாகும். உரோமர்களது மட்கலங்கள் இங்கு அதிக எண்ணிக் கையில் அகப்பட்டுள்ளன. தொண்டை நாட்டவர் உரோமர்களுடன் கொண்டிருந்த வாணிகத் தொடர்பினைக் காட்டுகின்றன இந்த உரோமர் மட்பாண்டங்கள்.[38a]

**கொற்கை**

கொற்கைப் பட்டினத்தைச் சுற்றிலும் வரலாற்றுப் புகழ் பெற்ற பல ஊர்கள் அமைந்துள்ளன. அவற்றுள் கடைக்கற்கால சாயர் புரமும், ஆதிச்சநல்லூரும் குறிப்பிடத்தக்கவை. 'தாலமி'யின் குறிப்புகளிலும், 'பெரிபுளுஸ்' நூலிலும் இவ்வூரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பழங்காலத்தில் இத்துறைமுகப் பட்டினத்தில் முத்துக்குளிப்பு செவ்வனே நடைபெற்று வந்தது. பாண்டியர்களின் கடற்றுறைப் பட்டினமாகத் திகழ்ந்த கொற்கை யைப் புலவர்கள் பாராட்டிப் பாடியுள்ளனர். பாண்டிய வேந்தர்கள்

38a, *Indian Archaeology, 1970-71 : A Review*, pp. I-65.

தங்களைக் 'கொற்கை வேந்து', 'கொற்கைக் கோமான்' என்று அழைப்பதில் பெருமை கொண்டனர். அரசர்கள் தங்கள் பெயர்களை இவ்வூரின் பெயருடன் இணைத்துக் கொண்டமை ஒன்றே இவ்வூரின் பெருமையை விளக்கப் போதுமான சான்றாகும்.

இவ்வூரின் தொன்மையை முதன் முதலில் நமக்கு அறிவித்தவர் மேலைநாட்டு அறிஞரான 'கால்டுவெல்' என்பவராவர். அவர், 1876ஆம் ஆண்டு இங்குத் தொல்பொருளாராய்ச்சியை மேற்கொண்டார். தற்போது தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை இங்கு அகழ்வாராய்ச்சியை மேற்கொண்டுள்ளது.[39] அறிவியல் சோதனைப்படி, ($C^{14}$ Dating) கி. மு. 785 ஆம் ஆண்டிலேயே இவ்வூரில் மக்கள் வசித்து வந்தனர் எனத் தெரிய வருகிறது.[40] இங்கு உரோமர்களின் மட்கலங்கள், 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள், ஈமத் தாழிகள் போன்றவை கிடைத்துள்ளன. மௌரியர் காலத்திற்குட்பட்ட வடநாட்டுக் கறுப்பு மட்பாண்ட வகையைச் (Northern black polishedware) சார்ந்த பானை ஓடுகளும் இங்குக் கிடைத்துள்ளன. இப்பட்டினத்தின் தொன்மையை விளக்க இவற்றைவிட வேறு சான்றுகள் வேண்டுமோ ?

## பாஞ்சாலங்குறிச்சி

மேற்கூறிய ஊர்களைத் தவிர, கட்டபொம்மன் வாழ்ந்த ஊரான பாஞ்சாலங்குறிச்சியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி தந்துள்ள அரிய குறிப்புகளைக் கொடுத்தால்தான் 'தமிழகத்தில் அகழ்வாராய்ச்சிகள்' என்ற தலைப்பு முழுமை பெற்றதாகக் கருதமுடியும். கட்டபொம்மன் மரபின் பண்பாட்டுப் பெருமையைப் பறை சாற்றும் வகையில், அவர் வசித்த அரண்மனைப் பகுதிகள், அவரது குடும்பத்தார் பயன்படுத்திய பாத்திர வகைகள், கருவிகள் போன்றவை இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.[41] இந்தக் கண்டுபிடிப்புகள், கட்டபொம்மன் தமிழக வரலாற்றில் ஒரு நிலையான இடத்தினைப் பெறவேண்டியவர் என்பதை வலியுறுத்துகின்றன.

---

39. *Damilica* (தமிழகம்), (1970); பக்.50-54; இங்கு அகழ்வாராய்ச்சி தொடர்ந்து நடத்தப் பெறவிருக்கிறது.
40. *Damilica* (தமிழகம்), (1970), பக். 50 - 54.
41. *Damilica* (தமிழகம்), (1070), *Plates*, 27a - 31b.

அட்டவணை - 1

## தமிழகத்தில் 'பிராமி' கல்வெட்டுகள்

| | ஊர் | மாவட்டம் | கல்வெட்டு எண் |
|---|---|---|---|
| 1. | மாமண்டூர் | வட ஆர்க்காடு | 171 of 1939-40 |
| 2. | அறச்சலூர் | கோயம்புத்தூர் | 1961-62, பக். 10 |
| 3. | சித்தன்னவாசல் | திருச்சிராப்பள்ளி | 388 of 1914 |
| 4. | புகழியூர் (புகழூர்) | ,, | 341-48 of 1927-28 |
| 5. | ஐயர் மலை[42] | ,, | |
| 6. | அழகர் மலை | மதுரை | 70-79 of 1910 |
| 7. | அரிட்டாப்பட்டி (மாங்குளம்) | ,, | 460-65 of 1906 |
| 8. | ஆனைமலை | ,, | 457 of 1906 |
| 9. | கருங்காளக்குடி | ,, | 561 of 1911 |
| 10. | கொங்கர் புளியங்குளம் | ,, | 55, 56, 57 of 1910 |
| 11. | முத்துப்பட்டி | ,, | 58, 59, 60 of 1910 |
| 12. | சித்தர்மலை (மேட்டுப்பட்டி அருகில்) | ,, | 45 of 1908 |
| 13. | திருப்பரங்குன்றம் | ,, | 333 of 1908 |
| 14. | விக்கிரமங்கலம் | ,, | 621, 622, 623 of 1926 |
| 15. | கீழவளவு | ,, | 135 of 1903 |
| 16. | வரிச்சியூர் | ,, | 38 of 1908 |
| 17. | குன்னக்குடி | இராமநாதபுரம் | 44 of 1909 |
| 18. | மருகால்தலை | திருநெல்வேலி | 407 of 1906 |

42. கொங்கு, 15-8-73, பக். 201-203.

# ௬. அகழ்வாராய்ச்சி காட்டும் தமிழர் பண்பாடும் வாழ்க்கை முறையும்

## (கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை)

புதிய கற்காலத்திற்குப் பிறகு கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை தமிழகத்தில் வாழ்ந்த மக்களுடைய பண்பாடு 'மெகலிதிய' பண்பாடு எனப்படும் என்பதை முன்னரே கூறியுள்ளோம். இம் மக்கள் திராவிடர்களேயாவர். சங்க இலக்கியங்கள் காட்டும் தமிழர் வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் அனைத்தையும் கொண்டதுதான் இந்த 'மெகலிதிய' பண்பாடாகும். எனவே அகழ்வாராய்ச்சி காட்டும் 'மெகலிதிய' பண்பாடும், இலக்கியங்கள் உணர்த்தும் தமிழர் பண்பாடும் ஒன்றே எனக் கொள்ளலாம். அகழ்வாராய்ச்சிகள் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்களை ஆய்ந்து பண்டைத் தமிழர் பண்பாடு, வாழ்க்கை நிலை போன்றவற்றைப்பற்றி ஓரளவு நாம் தெரிந்துகொள்ளலாம். பழந் தமிழர் நீர்ப்பாசனத்திற்காகக் கிணறு, சிறுகுளம், நீர்த்தேக்கம் போன்றவற்றை உருவாக்கினர்கள். இதற்கேற்ப, அவர்கள் அதிக எண்ணிக்கையில் வசித்த செங்கற்பட்டு மாவட்டத்தில் இன்றும் பண்டைய குளங்களும், ஏரிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. அவர்கள் மேட்டுப் பாங்கான இடங்களில் தங்கள் இருக்கைகளை அமைத்துக் கொண்டார்கள். தண்ணீர் வசதிக்கேற்ப ஆறுகள், குளங்கள் ஆகிய வற்றின் அருகிலேயும் வாழத் தலைப்பட்டார்கள். இவ்விடங்களில், இவர்களது ஈமத் தாழிகள் இன்றும் காணப்படுகின்றன. இவர்கள் தங்களின் மூதாதையரான புதிய கற்கால மக்களைக் காட்டிலும் மிகச் சிறப்பான நாகரிகத்தைத் தோற்றுவித்தவராவர்.

இந்தியாவில் மட்டுமின்றி உலகின் பல பகுதிகளிலும், குறிப்பாக மத்தியதரைக்கடல் பகுதியிலும் இப்பண்பாட்டுக்குரிய தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் இந்நாகரிகம், சுமார் 1500 வருடங்களில் படிப்படியாக வளர்ச்சியுற்று வந்திருக்கிறது.[43] மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தேவையான பல புதுக் கண்டுபிடிப்புகள் தோன்றலாயின. நாடோடிகளாய் விலங்குகளைப் போலத்திரிந்து வந்த மனிதர்கள் ஏற்றமிகு வாழ்க்கையை எட்டிப்

---

43. கி.மு. 1000 முதல் கி.பி. 500 வரை.

பிடித்தார்கள். நம் நாட்டில் இன்று வெறும் காட்சிப் பொருள்களாக விளங்கும் 'மெகலிதிய' சின்னங்கள், காலத்தளவில் பிற்பட்டும்,[44] மத்தியதரைக்கடல் பகுதி 'மெகலிதிய' பண்பாட்டுடன் ஒப்பிட்டு நோக்குதலுக்கேற்பவும் அமைந்திருப்பதால், இந்த 'மெகலிதிய' மக்கள் அப்பகுதிகளிலிருந்து தென்னகத்திற்கு வந்திருத்தல் வேண்டும் என்று விவாதிக்கப்படுகின்றது.[45] அது எப்படியாயினும் இவர்கள் தென் இந்தியாவில் நீண்டகாலம் வாழ்ந்து பண்பாட்டளவில் பெரிய மாறுதல்களைச் செய்தவர்களாவர்.

இரட்டைக் காப்பியங்களாகிய சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழகத்தில் அரசு அமைப்பு, சமுதாயம், சமயம், பொருளாதாரம் போன்றன எவ்வளவு ஏற்றமுற்று விளங்கி வந்தன என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இத்துறைகளில் இலக்கியங்கள் காட்டும் சான்றுகளுடன் நின்றுவிடாது, பல அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு, அவை தரும் சான்றுகளை இலக்கியங்கள் கொடுக்கும் குறிப்புகளுடன் ஒப்பிட்டு நோக்கிய பின்னர் ஒரு முடிவிற்கு வருதல் இன்றியமையாததாகும். இதனை முன்னிட்டே இன்று தமிழக அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையும், சென்னைப் பல்கலைக் கழகமும் அடுத்து அடுத்து அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

## பொருளாதாரம் - தொழில்கள்

வேளாண்மைத் தொழில் இம்மக்களின் இன்றியமையாத தொழிலாகும். இதற்கேற்பத் திருக்காம்புலியூர் நிலப்படிவங்களில் கருகிய நெல், உமி போன்றவை தென்பட்டன. மேலும், அகழ்ந்து எடுக்கப்பட்ட இரும்பு அரிவாள், ஏர்க்கொழு போன்றவை வேளாண்மைத் தொழிலில் மக்கள் பெரிதும் ஈடுபட்டிருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. காவிரிப்பூம்பட்டினத்து உள்முகப்புகொண்ட நீர்த் தேக்கமும், திருக்காம்புலியூர் நெற்களஞ்சியமும் இத்தொழிலின் இன்றியமையாமையைக் குறிக்கின்றன.

## நெசவுத் தொழில்

வேளாண்மைக்கு அடுத்தாற்போன்று நெசவுத் தொழிலும், ஆடைகளுக்குச்சாயம் பூசுதலும் அவர்களின் முக்கியத் தொழில்களாக

44. மத்தியதரைக்கடல் பகுதியில் இப்பண்பாட்டின் காலம் கி.மு. 2000 எனக் கொள்ளலாம்.

45. தமிழகத்திலிருந்து இந்தப் பண்பாடு, தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சென்றிருக்கிறது என்ற கருத்தை வலியுறுத்தத் தக்கச் சான்றுகளும் கிடைத்துள்ளன என்பதையும் நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

விளங்கின. அரிக்கமேடு, உறையூர், திருக்காம்புலியூர் ஆகிய இடங்களில் அவற்றிற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சாயத்தொட்டி செங்கற்களால் கட்டப்பட்டதாகும். இதேபோன்று, ஆனால் சிறிய தொட்டி ஒன்று உறையூரிலும் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொட்டிகள் பெரிய செங்கற்களைக் கொண்டு தேவையான உள், வெளித் திறப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன. திருக்காம்புலியூரில் பட்டு நூல் கட்டு ஒன்றும் அகப்பட்டுள்ளது. இது கி.பி. நான்கு அல்லது ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். மேலும், பலவித ஆடை அணிகளைக் கொண்ட சுடுமண் ஆண், பெண் உருவங்களும், நூல் நூற்கும் 'தக்களி' போன்றவையும் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற பொருள்கள் அக்கால மக்கள் துணி நெய்யவும், அவற்றுக்குச் சாயம் பூசவும் கற்றிருந்தார்கள் என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

## உலோக வேலைப்பாடுகள்

உலோகத்தை உருக்குதல், பிறகு அதனைப் பல வடிவங்களில் கருவிகளாக, பாத்திரங்களாக, கலைப்பொருள்களாக வார்த்தல் என்ற இரு கலைகளிலும் அவர்கள் தேர்ச்சிபெற்றிருந்தனர். இம்மாதிரியான வேலைப்பாடுகளுக்கு இரும்பு (படம்-20), செப்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன. நாணயங்கள், அணிகலன்கள் செய்ய தங்கமும், வெள்ளியும் மிகுதியாகப் பயன் பட்டு வந்தன. தமிழகத்தில் பல இடங்களில் 'பஞ்ச் மார்க்கு[46] (Punch marked coins) வெள்ளி நாணயங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தங்க நாணயங்களையும், வெள்ளிப் பாத்திரங்களையும் அக்கால மக்கள் பயன்படுத்தினார்கள் என இலக்கியங்கள் சுட்டினாலும் அத்தகைய அரிய பெரிய பொருள்கள் ஏதும் இதுவரை தமிழகத்தில் அதிக எண்ணிக்கையில் கண்டெடுக்கப்படவில்லை என்பதனையும் இங்குக் குறிப்பிடவேண்டியுள்ளது.

## சுடுமண் கலை

புதிய கற்காலத்திலேயே மனிதன் களிமண்ணைக் கொண்டு பாத்திரங்கள், பொம்மைகள் செய்யவும், பின்பு அவற்றைத் தீயிலிட்டுச் சுட்டுத் தனது அன்றாட வாழ்க்கைக்குப் பயன் படுத்திக் கொள்ளவும் அறிந்திருந்தான். பையம்பள்ளி அகழ் வாராய்ச்சியில் பல வகையான சுடுமண் பொருள்கள் தோண்டி

46. சென்னையில் உள்ள தமிழ்நாடு அரசு பொருட்காட்சியகத்தில் இந்த நாணயங்கள் வைக்கப்பட்டுள்ளன.

எடுக்கப்பட்டன. எனினும், இக்கலை கி.பி. இரண்டு அல்லது மூன்றாவது நூற்றாண்டில்தான் முழுமையான வளர்ச்சியடைந்திருக்கிறது. இக்காலத்திய சுடுமண் ஆண், பெண் உருவங்கள் பலவிதமான அணிகலன்களுடன் மெல்லிய உடைகளை அணிந்து காட்சியளிக்கின்றன.

சுடுமண் உருவங்கள், அரிக்கமேடு, திருக்காம்புலியூர், (படம்-21), உறையூர் (படம்-22), காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. சமயச் சடங்குகள், மனிதனின் அன்றாட வாழ்க்கைத் தேவை ஆகியவற்றை முன்னிட்டுக் களிமண் பாத்திரங்களும், பிற பொருட்களும் நிறையச் செய்யப்பட்டுப் பக்குவமாகச் சுட்டெடுக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வந்தன. தமிழகத்தில் நூற்றுக்கணக்கான ஊர்களில் இவை கிடைத்துள்ளதால் அக்கால மக்கள் இக்கலையில் அதிக ஆர்வம் காட்டினர் என்று அறிய முடிகின்றது. இவற்றில் பெரும்பாலானவை கையால் செய்யப்பட்டவையாகும். சில உருவங்கள் நீளப் பகுதியில் உச்சி முதல் கால் வரை உட்பக்கமாக வெற்றிடம் விடப்பட்டுச் செய்யப்பட்டுள்ளன. மேலை நாட்டு நாகரிகம் நம் நாட்டில் ஈர்க்கப்பட்டதைச் சில உருவங்கள் காட்டுகின்றன. எடுத்துக்காட்டாகத் திருக்காம்புலியூரில் கண்டெடுக்கப்பட்ட ஓர் ஆண் உருவம் சுருண்ட முடியுடன் காணப்படுகிறது. இதுபோன்ற முடி ஒப்பனையைக் காந்தார புத்தரின் உருவங்களிலே காணலாம்.

## வண்ணச்சித்திர வேலைப்பாடு

மட்பாண்டங்கள்மீது அழகான வண்ணவேலைப்பாடுகள் காணப்படுகின்றன. வண்ணப்பூச்சும், வண்ணப்புள்ளிகளும், சுடுமண் உருவங்கள், மணிகள், சங்கு வளையல்கள் ஆகியவற்றின் மீது காணப்படுகின்றன. செடி, கொடிவகைகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்களும் பானைகள்மீது பொறிக்கப் பட்டுள்ளன.

## வாணிகம்

கிருத்துவ நூற்றாண்டின் முதற்பகுதியில் தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே வாணிகம் தொடர்ந்து இடையறாது நடைபெற்றதைப்பற்றிச் சங்க இலக்கியங்கள் ஆங்காங்கே பகர்கின்றன. 'தாலமி' குறிப்புகளும் இத்தொடர்பினை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றுடன் அகழ்வாராய்ச்சிகளில் அகப்பட்ட உரோம நாட்டு நாணயங்கள், மணிகள், பலவிதமான மண்பாத்திரங்கள், கண்ணாடிப் பொருள்கள் போன்றவை இத்தொடர்பினைப்பற்றி நாம் அறிந்து கொள்ளச் சான்றுகளாக அமைந்துள்ளன. அரிக்கமேடு, செங்கமேடு, உறையூர், கரூர், காவிரிப்பூம்பட்டினம், காஞ்சிபுரம், வசவ

சமுத்திரம் ஆகிய இடங்களில் உரோமர்களது மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன என்பதே சிறந்த சான்றாகும்.

### நாணயங்கள்

தமிழகத்திற்கும் உரோமாபுரிக்கும் இடையே வாணிகத் தொடர்பு இருந்துவந்தது என்றாலும், எந்த நாணயத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் வாணிகம் செய்து வந்தனர் என்பதனை இன்னும் நாம் சரியாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. தமிழகத்தில் பல இடங்களில் 'பஞ்ச் மார்க்கு' நாணயங்களும், உரோமர் நாணயங்களும் ஏராளமாகக் கண்டெடுக்கப்பட்ட போதிலும் அவற்றின் மூலம் மேற்குறிப்பிட்ட சிக்கலில் தீர்வு காண முடியவில்லை. நாணயங்களின் எடை, அவற்றின்மீது காணப்படும் குறிகள் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளார்கள். இது விரைவில் ஆய்ந்து தீர்க்கப்பட வேண்டிய ஒரு ஐயமாகும். எனினும் இந்தப் 'பஞ்ச் மார்க்கு' நாணயங்கள் உள்நாட்டு வாணிகத்திற்காவது பயன்பட்டிருக்கவேண்டும் என்று கருத வாய்ப்புள்ளது.

### கட்டடக்கலை

பழைய கற்கால மனிதன் தான் வசிப்பதற்கு நிலையான இடம், இல்லம் ஏதும் அமைத்துக்கொள்ளவில்லை. ஆங்காங்கே கண்ணுக்குத் தென்பட்ட இயற்கை மலைக்குகைகளிலும், மரப்பொந்துகளிலும் தங்கி வசிக்கத் தலைப்பட்டான். கால வளர்ச்சிக்கேற்பப் புதிய கற்கால மனிதன் தனக்கென ஒரு வீட்டை அமைத்துக்கொண்டான். மண்ணைக் கொண்டு சுவர்கள் எழுப்பி, வீட்டுக் கூரையை இலை, தழைகளால் வேய்ந்து கொண்டான். மைசூர் மாநிலத்தில் 'தெக்கல கோட்டா' என்னும் இடத்தில் புதிய கற்கால மக்கள் இதுபோன்ற வீடுகளை அமைத்துக் கொண்டதற்கான தடயங்கள் கிடைத்துள்ளன.[47] இந்த வீடுகள் வட்டவடிவமான தளத்தைக் கொண்டுள்ளன. 'மெகலிதிய' மக்கள் தங்கள் வீடுகளை வசதியாகவும், நேர்த்தியாகவும் கட்டிக்கொண்டார்கள். அவர்கள் களிமண்ணை மிகுதியாகப் பயன்படுத்திச் சுவர்களைக் கட்டலானார்கள். காலப்போக்கில் செங்கற்களைக் கொண்டும் வீடுகளைக் கட்டத் தொடங்கினார்கள். சுண்ணாம்பு, கெட்டியான களிமண், சிறியதும், பெரியதுமான கூழாங்கற்கள் ஆகியவை சுவர்கள் கட்ட இடையிடையே பயன்படுத்தப்பட்டன. வீடுகள் மிக எளிய பாணியில் கட்டப்பட்டன.

மண்சுவர்களினூடே சம இடைவெளிவிட்டு மரத்தூண்களை நிறுத்தி அவற்றின்மீது கூரைவேயப்பட்டிருக்கவேண்டும். மரத்

---

47. **Nagaraja Rao, M. S.** *The Stone Age Hill Dwellers of Tekkala Kota* (1965), pp. 15-21.

தூண்கள் நிறுத்தப்பட்ட குழிகளின் அமைப்பைக் கொண்டு ஆய்கையில் (படம்-23)அக்காலத்தில் கட்டப்பட்ட வீடுகளின் தரை அமைப்பு வட்ட வடிவமாகவோ, சதுரமாகவோ, செவ்வகமாகவோ இருந்திருக்க வேண்டும் எனக் கூறலாம். அவர்கள் தங்கள் வீட்டுத் தரையினை களிமண்ணிட்டு நேர்த்தியாக மெழுகியிருக்கின்றூர்கள். மக்களின் பொருளாதார நிலைக்கேற்பவும், தேவைக்கேற்பவும் வீடுகள் கட்டப்பட்டன. மொகஞ்சொதாரோ, அரப்பா போன்று தமிழகத்திலும் பெரும் அளவிற்கு அகழ்வாராய்ச்சியை மேற் கொள்ளுவோமாயின் அக்காலக் கட்டடக்கலை பற்றிய நுணுக்கமான தகவல்களைப் பெற முடியும்.

வஞ்சி, காஞ்சி, மதுரை, உறையூர், காவிரிப்பூம்பட்டினம் போன்ற புகழ்மிக்க பட்டினங்கள் அன்று சிறந்து விளங்கின. இப்பட்டினங்கள் பெரிய கோயில்களையும், அரண்மனைகளையும், அகன்று நீண்ட தெருக்களையும் கொண்டு விளங்கின. சிற்ப சாத்திர நூல்கள் காட்டும் விதிமுறைகளுக்கேற்பக் கட்டடக்கலை வல்லுநர்களைக் கொண்டு கட்டடங்கள் கட்டப்பட்டன என்பதையும் இங்கு நாம் குறிப்பிட வேண்டியுள்ளது.

## சமுதாயம்

மக்கள் மேற்கொண்ட தொழில்களை முன்னிட்டுச் சமுதாயம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பலதரப்பட்ட இனத்தவர்கள் வாழ்ந்தார்களென்ற குறிப்புகளும், அவர்கள் வசித்த தெருக்களைப் பற்றிய வருணனைகளும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. இதற்கான சான்றுகள் இதுவரை நடத்தப்பெற்ற அகழ்வாராய்ச்சி களில் கிடைக்கவில்லை. ஆனல், அவர்களது அன்றாடப் பழக்க வழக்கங்கள், உணவு, உடை, பொழுதுபோக்கு விளையாட்டுகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாக நமக்குக் கிடைத்துள்ளன.

அரிசியே[48] அவர்கள் உட்கொண்ட முக்கிய உணவுப்பொரு ளாகும். ஆடவரும் பெண்டிரும் உடுத்திய உடை வகையினைச் சுடுமண் உருவங்கள் காட்டுகின்றன. ஆடவரும் பெண்டிரும் மார்பிலும் இடையிலும் ஆடை அணிந்திருந்தனர். மிக மெல்லிய ஆடை நெய்யும் கலையில் அவர்கள் தேர்ச்சி பெற்று விளங்கினர். பொதுவாக ஆடவர் தலையில் தலைப்பாகை அணிந்து கொண்டனர். அவர்கள் தங்கள் தலைமுடியைப் பல பாணிகளில் ஒப்பனை செய்து

---

48. குன்றத்தூரில் ஒரு சவக்குழியில் அரிசியுடன் கூடிய ஒரு கிண்ணம் காணப் பட்டது.

Ghosh, S. S. *Indian Forester*, vol. 87, No. 5.

கொண்டார்கள். பலவகையான அணிகலன்களை அணிந்து தங்களை அழகுபடுத்திக் கொண்டார்கள். மணிகள் (படம்-24, 25), காதணிகள், வளையல்கள், மோதிரங்கள் போன்றவை கல், களிமண், சங்கு, கண்ணாடி, உலோகம் போன்றவற்றால் செய்யப்பட்டன.

வேட்டையாடுவதில் அவர்கள் அதிக ஆர்வம் காட்டினர். நீந்துதல், படகு செலுத்துதல், கத்திச்சண்டையிடுதல் போன்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் அவர்கள் ஈடுபாடு கொண்டனர். தாயம், சதுரங்கம் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டுகள் அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. இந்த விளையாட்டுகளுக்குரிய சுடுமண் காய்களும், அவை' பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங் களும் நிறையக் கிடைத்துள்ளன.

'பிராமி' எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும், பானை ஓடுகளும் நமக்கு அவர்களது மொழியைப் பற்றிய சில குறிப்புகளை நல்குகின்றன. தமிழ் அவர்களது தாய்மொழியாகும். அவர்களது வழக்கில் இருந்து வந்த தமிழ் எழுத்து வடிவம் பற்றி நாம் அறிந்து கொள்ளத் தேவையான சான்றுகளும், சுருங்கச் சொல்லின் வாய்ப்பு களும் கிடைக்கவில்லை. தமிழ்ப் புலவர்கள், வரலாற்று ஆசிரியர்கள், தொல்பொருள் ஆய்வுத் துறையினர் ஆகியோரின் ஒத்துழைப்பின் மூலமே பண்டைத் தமிழரின் சமூக மேம்பாட்டினைத் தக்க சான்று களுடன் எடுத்துக் காட்ட இயலும்.

***சமயம்***

முற்காலத்தில் மக்கள் இயற்கைச் சக்தியினைப் போற்றி வந்திருக்கின்றனர். அவர்கள், எழுஞாயிறு, நிலா, கடல், வானம், ஆறு, மலை, மரம், செடி கொடிகள் போன்ற இயற்கைப் படைப்பு களில் பெரிதும் நம்பிக்கை கொண்டு அவற்றை வழிபட்டார்கள். மேலும் சைவ, வைணவக் கடவுளர்களை ஆண் வடிவிலும் பெண் வடிவிலும் வழிபட்டார்கள். புத்த, சமணத் துறவிகளையும் வழி பட்டனர். அவர்களது எண்ணப்படி, தெய்வங்களுக்குக் களி மண்ணால் உருவ அமைப்பு கொடுத்துத் தீயிலிட்டுச் சுட்டுப் பின்னர் அவற்றை வணங்கி வந்தார்கள். இறகுள்ள தேவதை, மரத்தில் உறையும் தேவதை போன்றவற்றையும் வழிபட்டனர் என்பதற்கான சான்றுகள் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சி மூலம் தெரிய வந்துள்ளன. அவர்கள் தாம் பிறந்த நிலத்தைத் தாயெனப் போற்றி வழிபட்டனர். பழந்தமிழர், புவி அன்னையை **(Mother Goddess)** இடை பெருத்த பெண்ணுருவில் அமைத்து வழிபட்டார்கள். பண்டைய சமயச் சிறப்புகளில் இதுவும் ஒன்றல்லவோ ! புவி அன்னையை வழி படுதல் இந்து சமயத்தின் தொடக்கமெனலாம். ஏன், உலகில்

தோன்றிய பல்வேறு சமயங்களின் தொடக்கம் என்றுகூடக் கூறலாம். புவி அன்னை, வழிபடுவோரை அவர்களுடைய ஒழுக்க நெறிகளுக்கு ஏற்ப வழுவாது காக்கும் குணமுடையவள். இம்முறையே பிற்காலத்தில் சக்தி வழிபாடு என்று பிறிதொரு பெயரில் வழங்கப்பட்டது. திருமகளாகக் கருதப்பட்ட இக் கடவுளை மக்கள் நிர்வாண கோலத்திலும் வழிபட்டார்கள்.

திருக்காம்புலியூரில் கண்டெடுக்கப்பட்ட நாகலிங்கம், 'முசிகம்', பாலகிருட்டிணன் போன்ற தெய்வத் திருவுருவங்களும், அலகரையில் அகப்பட்ட அமர்ந்த நிலையிலிருக்கும் விநாயகரின் உருவமும், தமிழகத்தில் 4,5 ஆம் நூற்றுண்டுகளில் மக்கள் இக்கடவுளர்களை வழிபட்டதனையும், சைவ, வைணவ சமயங்களின் சிறப்புகளையும் நமக்குப் புலப்படுத்துகின்றன. சுடுமண், சுதை, வெண்கலம் போன்றவற்றுல் செய்யப்பட்ட புத்தர் திருவுருவங்கள், 'சுவஸ்திகம்,' 'ஸ்ரீவத்சம்' (இலக்குமி) போன்ற சமயச் சின்னங்களும் பரவலாகக் கிடைத்துள்ளன. காவிரிப்பூம்பட்டினத்து புத்த விகாரங்களும், காஞ்சிபுரத்து ஸ்தூபமும், தமிழகத்தில் புத்த மதத்தின் வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன.

## இறந்தவர்களை வழிபடல்

இறந்தவர்களைப் போற்றுதலும், வழிபடுதலும் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்டே இருந்து வந்த வழக்கங்களாகும். பழைய கற்கால மக்கள்கூட இறந்தோரின் வாழ்க்கை அனுபவங்களை இயற்கைக் கற்குகைகளின் சுவர்களில் ஓவியமாகத் தீட்டி வைத்துள்ளார்கள். புதிய கற்கால மக்கள், இறந்தவர்களை, அவர்கள் வாழ்நாளில் பயன்படுத்திய பொருள்களுடன் குழியிலிட்டுப் புதைக்கும் வழக்கத்தை மேற்கொண்டார்கள். இறந்தவர்களை அல்லது அவர்களுடைய எலும்புக் கூடுகளைக் குழியிலிட்டுப் புதைத்தல், பெரிய தாழியிலிட்டுப் புதைத்தல் ஆகிய இரண்டு முறைகளையும் சங்க காலத் தமிழர் பின்பற்றி வந்தனர். இவர்களது கல்லறைகள் பொதுவாகக் கிழக்குப் பக்கத்தில் ஒரு மனிதன் நுழையுமளவுக்கு இடைவெளியைக் கொண்டுள்ளன. இறந்தோரின் ஆன்மா, தான் வேண்டும்போது கல்லறைக்குள் நுழையவும், வெளியே செல்லவும் அந்த இடைவெளியைப் பயன்படுத்தக்கூடும் என்று அவர்கள் நம்பி வந்தார்கள். இறந்தவர்கள் இவ்வுலக வாழ்வைத் துறந்த பின்னரும் உயிர்வாழ்வர் என்று நம்பியே அவர்கள் இவ்வுலக வாழ்க்கையில் பயன்படுத்திய அன்றாடத் தேவைப் பொருள்களையும் சேர்த்துப் புதைத்து வந்தார்கள் போலும். எலும்புக்கூடுகள் கிழக்கு - மேற்காக நீட்டிக் கிடத்திய நிலையில் புதைக்கப்பட்டுள்ளன.

மக்களுக்கு இன்னல்கள் கொடுத்துவந்தவர்களைத் தாக்கி வீரச் செயல் புரிந்து இறந்தவர்களை நினைவுகொள்ளும் பொருட்டு அவ் வீரர்களுக்கு நினைவுச் சின்னங்கள் (நடுகற்கள்) எழுப்பப்பட்டு வழிபடும் வழக்கம் நம் நாட்டில் இருந்து வந்தது என்பது நமக்கு நன்கு தெரியும். அகநானூறு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற இலக்கியங்கள் இதனைப்பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன. இறந்த வீரரின் உருவம் நன்றுகச் சமைக்கப்பட்ட கல்லின் ஒரு பக்கத்தில் செதுக்கப்படும். பின்னர் அவரது ஊரும், பெயரும் உருவத்திற்கு அருகில் எழுதப்படும். சமயச் சடங்குகளுடன் அந்தக் கல் நடப்பட்டு வழிபாடு நடத்தப்பெறும். சில வேளைகளில் ஞாயிறு, நிலா, விளக்கு, மலர்கள் போன்றவற்றின் உருவங்கள் அக்கல்லில் செதுக்கப்படுவதும் உண்டு. குறிப்பிட்ட காலங்களில் இந் நடுகற்களுக்குப் பலியிடுவதும், மலர் மாலைகளை அணிவித்தலும், வழிபாடுகள் செய்யப்படுவதும் உண்டு.

கணவர் இறந்தவுடன் வெந்தழலிற் புகுந்து உயிரை விட்ட வீரமங்கையருக்கும் நினைவுக்கல் நாட்டப்பட்டது. இதற்குச் 'சதிகல்' (Sati Stone) அல்லது 'மாசடிகல்' என்ற பெயர் வழக்கத்திலிருந்துவந்தது. இந்தச் 'சதிகற்'களையும் மக்கள் வழிபட்டார்கள்.

# 7. சிந்துவெளி நாகரிகமும் திராவிடர் நாகரிகமும்

சிந்துவெளி நாகரிகம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் ஏறக்குறைய 4500 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி வளர்ந்தது. உலகப் புகழ் பெற்ற எகிப்து, சுமேரிய நாகரிகங்களுக்கு ஈடாக அது திகழ்ந்தது. தொன்மைமிக்க நாகரிக நாடுகளில் இந்தியாவும் ஒன்று என இப்பகுதியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பறை சாற்றின. இந்தியாவின் பண்பாட்டுப் பெருமையை - தொன்மையை முதன் முதலில் உலகுக்கு உணர்த்தியவர் வெளிநாட்டினரான சர் சான் மார்சல் என்பவராவார். அதுபோலவே சிந்துவெளி மக்கள் திராவிடர்களே என்ற கருத்தினை பலப்படுத்தும் அளவுக்குச் சான்று களைப் பகன்றவர்களும் வெளிநாட்டினரேயாவர். இவர்கள் கோபன் கேகன் நகரைச் சார்ந்த இளம் ஆய்வாளர்களாவர். நுண்ணிய இடர்ப் பாடுகளுள்ள ஆராய்ச்சிகளில் தீவிர நாட்டம் செலுத்தித் துணிகர மான கருத்துகளை, முடிவுகளை, உடனுக்குடன் வெளியிடுவதில் கைதேர்ந்தவர்கள் மேலை நாட்டினரே என்றால் அது மிகையாகாது. உலகின் கவனத்தைக் கவர்ந்து வரும் இந்நாகரிகத்தினுள் புரியாத புதிர்கள் பல மறைந்து கிடக்கின்றன. இப்புதிர்களுக்கு விடை காண மேல்நாட்டு ஆராய்ச்சி வல்லுநர்கள் பலர் முன்வந்திருப்பது - முனைந்திருப்பது பாராட்டுதற்குரியதாகும்.

சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்களும் அவை விளக்கும் உண்மைகளும் எவையென இங்கு காண்போம்.[49]

பளபளப்பான கற்கருவிகள், வெண்கலம், செப்பு போன்றவற்று லான பொருள்கள், வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள், சுடுமண், கல், வெண்கலம் ஆகியவற்றால் செய்யப்பட்ட உருவங்கள், எழுத்துகளுடன் உருவங்களும் பொறிக்கப்பட்ட மாக்கல், செப்பு போன்றவற்றாலான முத்திரைகள் ஆகிய தொல்பொருள்கள் குறிப் பிடத்தக்கவை. இவற்றைத் தவிர மாண்டவர்களின் மண்டை ஓடுகள், எலும்புக் கூடுகள், அவர்கள் உருவாக்கிய நகர அமைப் பைச் சுட்டும் வீதிகள், நிலத்தினடியில் ஓடிய கழிவு நீர்க்குழாய்கள், உறைகிணறுகள் போன்றவையும் அகப்பட்டுள்ளன. இவற்றை

---

49. Sir. John Marshall, (Ed), *Mohenjo-daro and the Indus Civilization* 1931 (3 vols.)

ஆய்ந்து இந்நாகரிகத்தின் தொன்மை, பெருமையைப் பற்றிய விரிவான விளக்கங்களைப் பல அறிஞர்கள் கொடுத்துள்ளார்கள். ஆனால் இந்நாகரிகத்தின் தொடக்கம், முடிவு, அழிவு, இதனை உருவாக்கிய மக்களது இனம், மொழி ஆகியவை கடந்த 50 ஆண்டுகளாகக் கேள்விக்குறிகளாகவே இருந்து வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது இம்மக்கள் திராவிடர்களா அல்லது ஆரியர்களா என்பதாகும். அடுத்து, முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவம் திராவிட மொழியினைக் கொண்டுள்ளதா இல்லையா என்பதாகும். இந்த எழுத்து வடிவத்தைச் சரியாகப் படித்துவிட்டோமானால், மேலே குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடைகள் எளிதாகக் கிடைக்கப்பெறும். அதே நேரத்தில் தொன்மை மிக்க ஒரு நாகரிகத்தை இந்தியாவில் தோற்றுவித்த சிற்பிகளையும் நாம் அடையாளங் கண்டுகொள்ள இயலும். இந்தியத் துணைக்கண்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தொல்பொருள் ஆய்வுத் துறைகளில் பணிபுரியும் வல்லுநர்களும், மொழியியல் நிபுணர்களும் இத்திசை நோக்கித் தங்களது ஆய்வுத் திறனைச் செலுத்துதல் இன்றியமையாததாகும்.

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த ஆய்வு முடிவுகளில் ஒன்று இந்நாகரிகத்தைப் பற்றியதாகும். கோபன்கேகனிலுள்ள ஆய்வுக் கழகத்திலிருந்து வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரையொன்றில் இந்நாகரிகம், திராவிடர் நாகரிகமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. எழுத்துகளைத் தாங்கிய முத்திரைகளை 'கம்ப்யூட்டர்' வாயிலாக ஆய்ந்து, பழந்தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சொற்களின் துணைகொண்டு, துணிகரமான இக்கருத்தினை வெளியிட்டிருக்கிறார்கள்.[50]

## அகழ்வாராய்ச்சி காட்டும் திராவிட நாடு (தென்னிந்தியா)

தென்னிந்தியாவில் கடந்த 25 ஆண்டுகளில் நடத்தப்பட்டுள்ள அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாகப் பல உண்மைகள் தெரியவந்துள்ளன. கோதாவரி ஆற்றின் தெற்கே உள்ள நிலப்பகுதிகளைக் கொண்ட நாடு தென்னிந்தியாவென நாம் எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில், இப்பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள் தமக்குள் பல ஒற்றுமைகளையும், குறிப்பிட்ட ஒரு சில பண்பாடுகளுக்குரிய சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளன. கோதாவரி ஆற்றின் வடக்கு நோக்கிச் செல்லச் செல்ல இப்பண்பாட்டுக் கூறுகள் மறையத்

50. Astoparpola, Seppo Koskenniemi and others – *Decipherment of the proto Dravidian Inscriptions of the Indus civilization*, Copenhagen, 1969, 2 parts.

திரு. ஐராவதம் மகாதேவன் அவர்களும் இக்கருத்தை ஏற்றுக் கொண்டு முத்திரைகளில் காணப்படும் எழுத்துகளை ஆய்ந்து வருகிறார்.

தொடங்குகின்றன. தென் பகுதிகளில் வாழும் மக்கள் பேசும் மொழிகளும் திராவிட மொழிகளேயாகும்.

தென்னகத்தில் ஏறக்குறைய 30 ஊர்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள், பழங் கற்காலம் முதல் விசயநகரப் பேரரசு காலம்வரை உள்ள கால வரம்பிற்குட்பட்டவையாகும். இந்தத் தொல்பொருள்களில் சில வற்றினைச் சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னங்களுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கையில் பல ஒற்றுமைகள் புலப்படுகின்றன. இவற்றைக் கொண்டு சிந்துவெளி நாகரிகத்துடன் திராவிடர் நாகரிகத்தினை இணைத்துப்பார்க்க இயலுகின்றது. அம் மக்கள் திராவிடர்களே எனக் கணிக்கவும் அவை பயன்படுகின்றன. சிந்துவெளி நாகரிகம் திராவிடர் நாகரிகமே என்ற கோபன்கேகன் ஆய்வாளர்களின் கூற்றினை உறுதிப்படுத்தும் அளவுக்குத் தென்னகத்து அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல் பொருள்கள் உறுதுணையாக உள்ளனவென்றால் அது மிகையாகாது. இந்த அகழ்வாராய்ச்சிகள் தரும் சான்றுகளை நாம் விளக்கமாகக் காண்போம்.

## தமிழகத்தின் தொன்மை

உலகில் பழம்பெரும் பண்பாட்டுப் பெருமையும், வரலாற்றுச் சிறப்பும் கொண்ட பகுதிகளில் தமிழகமும் ஒன்றெனக் கூறுவதில் பெருமையடைகிறோம். எகிப்தியர், கிரேக்கர், சுமேரியர் நாகரிகத்தைப் போல் தமிழர் நாகரிகமும் உலகப் புகழ் பெற்றதாகும். தமிழகத்தின் வரலாறு பழங் கற்காலத்தில் தொடங்குகின்றது. ஏறக்குறைய இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஆதிமனிதன் வாழ்க்கையைத் தொடங்கினான் என முன்பே கூறியுள்ளோம். வரலாற்றுப் புகழ்கொண்ட கற்காலத் தமிழக மக்களது பண்பாட்டுக் கூறுகள் வட இந்தியப் பகுதிகளுக்கும், ஏன், இந்திய எல்லைக்கு அப்பாலுள்ள ஆப்பிரிக்கா, தென்கிழக்கு ஆசியா போன்ற நாடுகளுக் கும் ஊடுருவிச் சென்றுள்ளன. எனவே கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் எனப்படும் சங்க காலம் வரையில் தமிழகம் பல்வேறு பண்பாடு களுக்குரிய மக்கள் கூட்டங்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு உறவாடியிருக்கிறது. இதனை அகழ்வாராய்ச்சிகள் உறுதிப்படுத்து கின்றன. இத்தகைய தொன்மையான பண்பாட்டு வரலாற்றுச் சிறப்புடைய திராவிடர்கள் சிந்துவெளி நாகரிகத்திற்கு உரியவர் களென கருதுவதற்குரிய விளக்கத்தினை ஈண்டுக் காண்போம். சிந்து வெளி மக்கள் திராவிடர்களே என்பதற்குரிய சான்றுகளை முதலில் எடுத்துக்கொள்வதினும், அவர்கள் திராவிடர்கள் அல்லர் என்ப தற்குக் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளை முதலில் ஆய்வதே சாலப் பொருந்தும். அக் கருத்துகளுக்கு மறுப்பளிக்கும் வகையில் விளக்

கினுல் அதுவே முதலில் கூறிய கருத்தினை ஏற்றுக்கொள்ளுவதற்கு வகை செய்யும் என்பது உறுதி.

சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடையது அல்ல என்பதற்கு இரண்டு முக்கிய விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. அவை யாவன :— (1) முத்திரைகளின்மேல் காணப்படும் எழுத்துகள் வட மொழியைக் கொண்டுள்ளன. வேதங்களில் காணப்படும் பண்பாட்டுச் சிறப்பியல்புகளுக்குத்தான் இம் முத்திரைகள் வாயிலாக உருவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, வேதங்களில் காணப்படும் குறிப்பு களுக்குத் தக்கவாறு அவ்வெழுத்துகளைப் படித்து, அவற்றுடன் காணப்படும் உருவங்களை விளக்கியுள்ளார்கள்.[51] வேதகால ஆரியப் பண்பாட்டையே இம்முத்திரைகள் உணர்த்துகின்றன என்பதே அவர்களது கருத்துமாகும். (2) சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னங் கள் திராவிடர் நாடு எனக் கருதப்படும் தென்னகத்தில் இதுவரை கண்டெடுக்கப்படவில்லை என்பதாகும். முதற் கூறிய கருத்திற்கு மறுப்பளிக்கத் தேவையில்லை. ஏனெனில், அக்கருத்தினை எடுத்துக் கூறியவர்கள், தக்க சான்றுகளை, மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் விளக்கமாகத் தரவில்லை. மேலும், அவர்கள் தங்களது ஆய்வினைத் தொடர்ந்து பின்பற்றவுமில்லை. அவர்கள் விட்ட இடத் தில் தொடர்ந்து ஆய்வதற்கு அவர்களது வாதங்கள் பிறரைக் கவருவனவாக இல்லை என்பதே அதற்குக் காரணமாகும்.[52] மேலும் சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர்ப்புற நாகரிகமாகும் **(Urban Civilization)**. ஆனல் வேதகால ஆரியர் நாகரிகம், ஒரு 'கிராமிய நாகரிகம்' **(Rural Civilization)** என அவர்களது இலக்கியங்கள் வாயிலாகத் தெரியவருகிறது. எனவே சிந்துவெளி நாகரிகத்தினை ஆரியர்கள் நாகரிகம் எனக் கருதத் தயக்கம் ஏற்படுகின்றது.

அடுத்து, மேலே கூறப்பட்டுள்ள இரண்டாவது கருத்தினைக் கொண்டுள்ள ஆய்வாளர்களுக்கு விடையளிக்கும் வகையில் தென்ன கத்து அகழ்வாராய்ச்சிகள் பல புதிய தடயங்களைத் தந்துள்ளன. தென்னுட்டில் சிந்துவெளிப் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்பட வில்லை என்பது, 1947ஆம் ஆண்டுக்கு முன்பு வேண்டுமானுல் உண்மையாக இருந்திருக்கலாம். இந்தியா விடுதலையடைந்த பிறகு தென்னுட்டில் அறிவியல் முறைப்படி அகழ்வாராய்ச்சிகள் பல மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்த அகழ்வாராய்ச்சிகள் வெளிப்படுத்திய உண்மைகள் பலவாகும். அவற்றுள் சில சிந்துவெளி நாகரிகத்தினைப் பற்றியதுமாகும். அவற்றைப் பின் வருமாறு பிரித்து ஆராயலாம்.

---

51. Ramachandran, T. N., *All India Historical Congress, Agra*, 1956.

52. *இந்தியத் தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த திரு. எஸ். ஆர். ராவ் அவர்கள் அரப்பா முத்திரைகளில் காணப்படும் எழுத்து வடிவம் ஆரிய மொழியை உணர்த்துகின்றது என்று அண்மையில் அறிவித்துள்ளார்.*

வடமேற்கு இந்தியப் பகுதியில், லோதல் (Lothal), அம்ரா (Amra) போன்ற ஊர்களில் அகப்பட்டுள்ள அரப்பா பண்பாட்டுச் சின்னங்களுள், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்களும் காணப்படுகின்றன. இவ்வூர்களில், அரப்பாப் பண்பாட்டுடன் கலந்து காணப்படும் இந்த மட்பாண்டங்களை, அப்பண்பாட்டின் இணைபிரியா ஒரு கூறு எனக் கொள்ளலாம். இத்தகைய மட்பாண்டங்கள் தென்னகத்தில் கணக்கிட முடியாத எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்திய தென்னகத்து மக்கள் 'மெகலிதிய' மக்கள் ஆவர். லோதலில் குறைந்த அளவில் காணப்படும் இம் மட்பாண்டங்கள், தென்னிந்தியாவில் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு, இறுதியாக 'மெகலிதிய' காலத்தில், தமிழகம் முழுவதும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. எனவே, இவ்விரு பகுதியிலும் வாழ்ந்த மக்களிடையே கருத்துப் பரிமாற்றம் இருந்திருக்க வேண்டும். அதைக் காட்டிலும் இவ்விரு பகுதியிலும் வாழ்ந்த மக்கள் ஒரே இனத்தைச் சார்ந்தவர்களா? (திராவிடர்களா?) என்பதுதான் ஆராய்ச்சிக்குரியதாகும். லோதலில், அரப்பாப் பண்பாட்டின் காலம் கி. மு. 2000 எனக் கணிக்கப்பட்டுள்ளது. தென்னகத்தில், இந்த கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டவகையின் காலம் கி.மு. 300 என்று பிரம்மகிரியில் அகழ்வாராய்ச்சி நடத்திய சர் மார்டிமர் வீலரால் வரையறுக்கப்பட்டது. எனவே ஏறக்குறைய கி.மு. 2000ல் லோதலில் வாழ்ந்த அரப்பா மக்களுக்கும், தென்னகத்தில் கி.மு. 300ல் வாழ்ந்த மக்களுக்கும் யாதொரு தொடர்பும் இருந்திருக்க வாய்ப்பில்லை என வாதிக்கப்பட்டது. அரப்பாப் பண்பாட்டிற்குப் பிற்பட்டது தென்னகத்து 'மெகலிதிய' பண்பாடு என்பதே இம்முடிவிற்குக் காரணமாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு வேண்டுமாயின் இக்கூற்று உண்மையென ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கலாம். அண்மையில் மைசூரில் அல்லூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சி மூலம் கறுப்பு - சிவப்பு நிறப் பானை வகைகளின் காலம் கி.மு. 1000 எனத் தெரிய வந்துள்ளது.[53] மேலும், கொற்கையில் இவற்றின் காலம் கி.மு. 785 எனக் கொள்ளலாம். தமிழகத்தின் தென்கோடிப் பகுதிகளில் புதிய அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டால் இவற்றின் காலவரம்பினை இன்னும் சற்று முன்னோக்கித் (அதாவது கி.மு. 1000க்கும் முன்பாக) தள்ளத் தடயங்கள் கிடைத்திட வாய்ப்புண்டு. இந்த மட்பாண்டங்கள் மத்திய இந்திய மாநிலங்களிலுள்ள பல ஊர்களிலும் காணப்படுகின்றன. இந்தத் தடயங்களை வைத்து ஒப்பிட்டுப் பார்க்கையில், அக்காலத்தில் திராவிடர் பண்பாடு இந்தியாவின் பல பகுதிகளில் பரவியிருந்தது என்பது புலனாகிறது.

அரப்பா மட்பாண்ட வடிவங்களில் ஒரு சில தென்னகத்திலும் அகப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, ஆந்திர மாநிலத்தில்

53. Allchins, *Birth of Indian Civilisation*, (1968) P. 230.

நிகழ்த்தப்பட்ட எல்லேச்சுரம் அகழ்வாராய்ச்சியில் ஒன்றின்மேல் ஒன்ருக இணைக்கப்பட்ட மூன்று பானைகளைக் கொண்ட பாத்திர வகைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன[54]. இவ்வகைப் பானை வடிவங்கள் அரப்பா மக்களாலும் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தில் திருக்காம்புலியூர் அகழ்வாராய்ச்சியில் 'டிஷ்-ஆன்-ஸ்டாண்டு' (**Dish-on-Stand**), 'ரிங் ஸ்டாண்டு' (**Ring Stand**), 'இன்சென்ஸ் பர்னர்' (**Incense Burner**) போன்ற மட்பாண்ட வடிவங்கள் கிடைத்துள்ளன. இவ்வடிவங்கள் அரப்பாப் பண்பாட்டின் தலைசிறந்த ஒரு கூறுகும்.

அரப்பாப் பானை ஓடுகள்மேல் காணப்படும் சில 'கிராபிடி' (**Graffiti**) குறிகள், தென்னகத்துப் பானை ஓடுகளின் மேலும் காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட இத்தகைய 'கிராபிடி' குறிகள் தமிழகத்தில் மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த 'கிராபிடி' குறிகளை முறைப்படி வரிசைப்படுத்தி, நுட்பமாக ஆய்ந்தால் பல உண்மைகள் தெரியவரும். இவற்றைப் பற்றிய மற்ருெரு சிறப்பும் உண்டு. அரப்பா முத்திரைகளில் காணப்படும் எழுத்துகளில் சில, தமிழகத்தில் 'கிராபிடி' குறிகளாகக் காட்சியளிக்கின்றன. இன்னும் சில, தமிழக 'பிராமி' எழுத்துகளை ஒத்திருக்கின்றன.

தென்னகத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள மிகப் பழங்கால நாணயங்களின் மேல் ('பஞ்ச் மார்க்கு' நாணயங்கள்) பல்வேறு குறிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில குறிகள் அரப்பா முத்திரைகளின்மேல் வரையப்பட்டுள்ள எழுத்துகளை ஒத்துள்ளன.

அரப்பா, மொகஞ்சொதாரோ மக்கள் உறைக்கிணறுகளையும், நெல் உறைகளையும் அதிக அளவில் பயன்படுத்தி வந்தார்கள். இவை தமிழகத்திலும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, காஞ்சிபுரத்தில் மட்டுமே நூற்றுக்கு மேற்பட்ட உறைக்கிணறுகள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன.

ஆதிச்சநல்லூரில் அழகான வேலைப்பாடு கொண்ட வெண்கலப் பாத்திரங்கள், அணிகலன்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் இன்னும் சரியாக வரையறுக்கப்படவில்லை.[55] இதுபோன்ற வேலைப்பாடு கொண்ட வெண்கலப் பொருள்கள் தென் இந்தியாவில்

---

54. ஐதராபாத்தில் உள்ள ஆந்திர அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறைப் பொருட்களஞ்சியத்தில் இப்பானைகளைக் காணலாம்.

55. இவ்வூரில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வசித்த மக்களது இடுகாடுகளும், ஈமத்தாழிகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஈமத்தாழிகளிலிருந்து வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள், வேலைப்பாடுடன் கூடிய வெண்கலப் பாத்திரங்கள், இரும்பு, செப்புப் பொருள்கள், தங்க அணிகலன்கள், மண்டை ஓடுகள் போன்றவை கண்டெடுக்கப்பட்டன. ஆனல் அறிவியல்

வேறு எங்கும் அகப்படவில்லை. ஆனால் அரப்பா, மொகஞ்சொதாரோ போன்ற ஊர்களில் வெண்கலப் பொருள்கள் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன.

தென்னிந்தியாவில் புதிய கற்காலத்திலேயே இறந்தவர்களைப் புதைக்கத் தாழிகள் பயன்படுத்தப்பட்டன.[56] அடுத்தபடியாக வந்த 'மெகலிதிய' மக்களும் தாழிகளைப் பயன்படுத்தினர். எனவே இறந்தவர்களைத் தாழியிலிட்டுப் புதைக்கும் வழக்கம் புதிய கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தென்னகத்தில் வாழ்ந்த மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். 'மெகலிதிய' மக்களை திராவிடர்கள் எனக் கொள்ளுகையில், இவர்களுக்கு முன்பாக வாழ்ந்த புதிய கற்கால மக்களும் இவ்வினத்தைச் சார்ந்தவர்கள் எனக் கருதுவதற்கு இத்தாழிகள் கண்டெடுப்பு வகை செய்கின்றது. எனவே, புதிய கற்காலம் முதல் தென்னகத்தில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களேயாவர். சிந்துவெளி மக்களும் இவ்வழக்கத்தைக் கொண்டவராவர்.

ஆதிச்சநல்லூரில் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடுகளை ஆய்ந்து பார்க்கையில் அவற்றிற்குரியவர்கள் திராவிடர்களே என்பது புலனாகிறது. சிந்துவெளி அகழ்வாராய்ச்சியில் மண்டை ஓடுகளும், எலும்புக் கூடுகளும் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன. இவற்றை ஆய்தல் மானிடவியல் வல்லுநர்களின் முக்கியப் பணியாகும்.

இறுதியில் ஒரு குறிப்பினை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். சிந்துவெளி நாகரிகத்தைக் காட்டிலும் தொன்மையான வரலாற்றுச் சிறப்புடையது திராவிடர் நாடாகிய தமிழகம். திருநெல்வேலி மாவட்டத்தில் சாயர்புரத்திலும் அதனைச் சுற்றிலுமுள்ள பல சிற்றூர்களிலும் கடைக்கற்காலக் கருவிகள் ஆயிரக்கணக்கில் காணப்படுகின்றன என்பதை முன்பே குறிப்பிட்டுள்ளோம். இவற்றில் சில

---

*முறைப்படி இங்கு இன்னும் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். இங்குக் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் சென்னையிலுள்ள தமிழக அரசு பொருட்களஞ்சியத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் சுமார் கி.மு. 300 எனக் கொள்ளலாம். இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்கள், இரான் (Iran) நாட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ள தொல்பொருள்களுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் அமைந்துள்ளன.*

56. Nagaraja Rao, M. S. *The Stone Age Hill Dwellers of Tekkalakota*, P. 33

மிக்க தொன்மையுடையனவாகும். இந்தியாவில், இத்தகைய தொன்மை வாய்ந்த கடைக் கற்காலக் கருவிகள் மற்றோர் இடத்தைத் தவிர வேறெங்கும் காணப்படவில்லை.[57] எனினும் இலங்கைத் தீவில் மட்டும் இத்தகைய கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. எனவே தமிழகமும், ஈழமும் மிக்க தொன்மை வாய்ந்த பகுதிகளைக் கொண்ட நாடுகளெனப் புவி அமைப்பியல் வல்லுநர்கள் கருதுகிறார்கள். தமிழகமும், ஈழமும் அக்காலத்தில் தரை வழியாக இணைந்திருக்கலாம். இவை இரண்டுக்கும் இடையே இருந்த நிலப் பகுதிகள் தற்போது கடலுக்கடியில் அமிழ்ந்து கிடக்க வாய்ப்புண்டு. இப்பகுதிகளில் கடலுக்கு அடியில் அகழ்ந்து பார்த்தால் அரப்பா நாகரிகச் சின்னங்கள் தட்டுப்படலாம். மத்தியதரைக் கடற்பகுதிகளுக்கடியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் நல்ல பலனைக் கொடுத்துள்ளன என்பதை இங்கு மீண்டும் குறிப்பிட வேண்டியுள்ளது.

57. மேற்கு வங்கத்தில் பிர்பங்பூர் என்ற ஊரில் இத்தகைய கருவிகள் காணப்படுகின்றன.

# 8. பழந் தமிழர் மட்பாண்டத் தொழில்

மட்பாண்டத் தொழில் தொல்பொருள் இயலின் உயிர்நாடி எனக் கருதப்படுகிறது. பண்டைக்கால சாதாரண மக்களின் பண்பாட்டின் மேம்பாட்டினை மதிப்பிட்டு அளக்கும் அளவு கோலாக அது நமக்குப் பயன்படுகிறது. ஏனெனில் அவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய பொருள்களில் மட்கலங்களே மிகுதியாகும். மேலும், நிலத்தை அகழ்கையில் கிடைக்கும் தொல் பொருள்களில் பெரும்பாலானவை பானைகளும், பானை ஓடுகளுமேயாகும் (படம்-26).

**மட்பாண்ட வகைகள் :** பழங்கால மட்பாண்டங்கள் பல பிரிவுகளைச் சாரும். அவற்றைப் பின்வருமாறு பிரித்து ஆராயலாம்.

(1) கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்டங்கள் **(Black-and-red ware)**

(2) 'ரசட்' கலவையும், வண்ணமும் பூசப்பட்ட மட்பாண்டங்கள் **(Russet Coated and Painted ware)**

(3) கறுப்பு நிற மட்பாண்டங்கள் **(All black ware)**

(4) பழுப்பு நிற மட்பாண்டங்கள் **(Brown ware)**

(5) சிவப்பு நிற மட்பாண்டங்கள் **(Red ware)**

(6) உரோமர் மட்பாண்ட வகைகள் :

(a) 'ரவுலடெட்'

(b) 'ஆம்போரா'

(c) 'அரிடைன்'

***(1) கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்ட வகை :***

இதற்கு ஒரு காலத்தில் வழங்கி வந்த பெயர் 'மெகலிதிய மட்பாண்ட வகை' என்பதாகும். அதாவது 'மெகலிதிய' பண்பாட்டைப்

பறைசாற்றும் ஒரு முக்கியக் கூறுகக் கருதப்பட்டு வந்தது. தமிழகத்தில் 'மெகலிதிய' மக்கள் வசித்த ஊர்களிலும், அவர்களது சவக்குழிகளிலுமே இம் மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஈமத்தாழிகளில் சில இவ்வகையைச் சார்ந்தவையாகும். இவ்வகை மட்பாண்டங்கள் தற்போது இந்தியா முழுவதும் பரவலாகப் பல மாநிலங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட அரிக்கமேடு, செங்கமேடு, திருக்காம்புலியூர், அலகரை, உறையூர், சானூர், குன்றத்தூர், காஞ்சிபுரம், கொற்கை, காவிரிப்பூம்பட்டினம், வசவசமுத்திரம் ஆகிய ஊர்களைத் தவிர வேறு பல இடங்களிலும் இவ்வகைப் பானைகளும், பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வண்ணங்களின் விளக்கமும், சுடும் முறையும் :** பானையின் உட்பக்கம் முழுவதும் கறுப்பாகவும், வெளிப்பக்கத்தில் விளிம்பு தவிர, ஏனைய இடங்கள் சிவப்பாகவும் இருக்கும். விளிம்பு மட்டும் கறுப்பாக இருக்கும். எனவே இது கறுப்பு-சிவப்பு நிற மட்பாண்ட வகை என அழைக்கப்படுகிறது. இந்த நிற வேற்றுமைக்குக் காரணம் சுடும் முறையேயாகும். இப்பானைகளைச் சுடும் முறை தனிச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். சூளையில் பானைகள் ஒன்றின் மேல் ஒன்றாகத் தலைகீழாக அடுக்கப்படும். சுடும்போது இரசாயன மாறுதல்களின் காரணமாக உள்பக்கம் கறுப்பாகவும், வெளிப்பக்கம் சிவப்பாகவும் மாறும். பானைகளை அடுக்கும் முறை காரணமாக விளிம்பு கறுப்பாக மாறுகின்றது. சிவப்பு நிறத்தின் தன்மை, மேன்மை ஆகியவை எரிபொருளின் வெப்ப அளவைப் பொறுத்திருக்கும். சூளைக்குள் வெப்ப நிலை சம அளவில் பரவினால் பானைகள் நல்ல சிவப்பு நிறத்துடன் காட்சி அளிக்கும். இல்லையேல் அவற்றின் மேல்பக்கம் கரும்புள்ளிகளைக் கொண்டு காணப்படும்.

மட்பாண்டங்களைச் சுடுவதற்கு முன்பாக ஒரு வகையான கலவைப் பூச்சு (செங்காவி) அவற்றின் உட்புறம், வெளிப்புறங்களில் பூசப்பட்டு, பிறகு அவை மேற்கூறிய முறையில் சுடப்படுகின்றன. இந்தக் கலவைப் பூச்சு எல்லாப் பானைகளிலும் காணப்படுவதில்லை. இந்த வண்ணப் பூச்சின் காரணமாக, பானைகள் பளபளப்பாகவும், வழவழப்பாகவும் காணப்படுகின்றன. சில பானை ஓடுகள் பளபளப்பாகக் கண்ணாடிபோல் மின்னுகின்றன. 'மைக்கா' துகள்கள் களிமண்ணுடன் கலக்கப்படுவதால் இந்த பளபளப்புத் தன்மை ஏற்படுகிறது.

**பானை வகைகள் :** பலவிதமான விளிம்புகளைக் கொண்ட கிண்ணங்கள், குவிந்த தட்டுகள், குடிநீர்ப் பானைகள், மூடிகள் ஆகிய பாத்திரங்கள் மிகுதியாகச் செய்யப்பட்டன. பானை ஓடுகளில் சில 'கிராபிடி' குறிகளையும், 'பிராமி' எழுத்துகளையும், வண்ண ஓவியங்

களையும் தாங்கியுள்ளன. இன்னும் சில ஓடுகள் கைவிரல், நகம் போன்றவற்றால் செய்யப்பட்ட வேலைப்பாடுகளையும் கொண்டுள்ளன.

**கால வரம்பு :** தமிழகத்தில் இதன் காலவரம்பு இன்னும் சரியாகக் கணிக்கப்படவில்லை. வட இந்தியாவில் (லோதலில்) இதன் தொடக்க காலம் சுமார் கி.மு. 2000 என மதிப்பிடப்பட்டுள்ளது. மைசூரில் பிரம்மகிரியில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் இதன் காலம் கி.மு. 300 எனத் தெரிய வந்தது. தமிழகத்தில் இதன் தொடக்க காலத்தை இன்னும் சற்று முன் தள்ளிப் போடலாம். கொற்கையில் இதன் காலம் கி. மு. 8-ஆம் நூற்றாண்டாகும். தமிழகத்தில் 'மெகலிதிய' பண்பாட்டின் ஆரம்ப காலமே இந்த மட்பாண்ட வகையின் தொடக்க காலம் ஆகும் என்று சுருங்கக் கூறலாம்.

*(2)* **'ரசட்' கலவை பூசப்பட்ட வண்ண மட்பாண்ட வகை :** பழங்கால மட்பாண்ட வகைகளில் மிகவும் சிறப்புத் தன்மை வாய்ந்தது இந்த 'ரசட்' கலவை பூசப்பட்ட வண்ண மட்பாண்ட வகையாகும். முதன் முதலில் 'இராபர்ட் புரூஸ் புட்' (Robert Bruce Foote) என்பவர் 1879ல் இந்த வகைப் பானைகளை 'மெகலிதிய' சவக்குழிகள், ஈமத் தாழிகளிலிருந்து அகழ்ந்தெடுத்தார்.[58] அதன் பிறகு தமிழ் நாட்டில் பல மாவட்டங்களில் இவ்வகை மட்பாண்டங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

**வண்ண ஒப்பனை :** பானையைச் செய்து முடித்தவுடன் களிமண் ஈரத்துடன் இருக்கும்போதே வெண்மையான ஒரு கலவையைக் கொண்டு (Kaolin paste) அதன்மீது வண்ண ஒப்பனைக்குரிய வேலைப்பாடுகளைச் செய்வார்கள். பிறகு பானையை நிழலில் உலரவைப்பார்கள். உலர்ந்தவுடன் 'ரசட்' கலவை என்ற சிவப்பு நிறப் பூச்சைத் தீட்டுவார்கள். தீயில் சுடப்பட்ட பிறகு வண்ணப் பூச்சு நல்ல மெருகுடன் பளபளப்பாகக் காட்சி தரும்.

**பாத்திர வகைகள் :** கழுத்து குறுகிய சிறு பானைகள், பலவிதமான கிண்ணங்கள், தட்டுகள் ஆகியவை அதிகமாகக் காணப்படுகின்றன.

**வண்ண வேலைப்பாடுகள் :** சிவப்பு நிறப்பூச்சைக் கொண்டு பானைகள் மீது வரையப்பட்டுள்ள ஓவியங்களுள் செடி கொடிகளின் பிரிவுகள், விலங்குகள், வட்டங்கள், அலை அலையான கோடுகள், வளைந்து நெளியும் கோடுகள், நேர்க்

58. Foote, R. B. *Catalogue of Pre-historic Antiquities in the Madras Museum* Nos. 1076 to 1086; 1119 to 1123 and 1151.

கோடுகள், குறுக்குக் கோடுகள் போன்றவை குறிப்பிடத் தக்கனவாகும்.

**கால வரம்பு :** பொதுவாக இந்த மட்பாண்டங்கள் கறுப்பு-சிவப்பு நிறப் பானை வகைகளுடன்தான் கிடைக்கப் பெறும். திருக் காம்புலியூர், அலகரை, உறையூர், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் முடிவுப்படி இவற்றின் கால வரம்பு சுமார் கி.மு. 300 முதல் கி.பி. 300 வரை எனக் கொள்ள லாம். இந்த மட்பாண்டங்களுக்கு 'ஆந்திரர்களின் மட்பாண்ட வகை' என்ற பெயரும் உண்டு. பிரம்மகிரியில் சாதவாகனர் காசு களுடன் இவை சேர்ந்து காணப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

(3) **கறுப்பு நிற வகை :** இவ்வகைப் பானைகளின் இருபக்கங்களும் கறுமை நிறத்துடன் காணப்படும். இவையும் மிக உயர்ந்த ரகத்தைச் சார்ந்தவையாகும். கால வரம்பிலும், தன்மையிலும் கறுப்பு-சிவப்பு நிறப் பானை வகையைச் சார்ந்ததாகும். பானைகளின் இரு பக்கங்களும் பளபளப்புடன் மின்னுகின்றன. பானைகள் மிக மெலிந்த சுவரைக் கொண்டிருக்கின்றன. 'மெகலிதிய' சவக்குழிகளிலும், ஈமத் தாழிகளிலும் இப் பானைகள் அதிக எண்ணிக்கையில் அகப்பட்டுள்ளன.

**பாத்திர வகைகள் :** கழுத்து குறுகிய சிறு பானைகள், ஆழமான கிண்ணங்கள், அகலமான கிண்ணங்கள், தட்டுகள், மூடிகள் ஆகிய பாத்திர வகைகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**வண்ணக் கோடுகள் :** ஒரு சில பானைகளில் வெள்ளை நிறக் கோடுகள் தீட்டப்பட்டுள்ளன. இன்னும் சில பானைகள் 'கிராபிடி' குறிகளைக் கொண்டுள்ளன.

(4) **பழுப்பு நிற வகை :** இவ்வகை மட்பாண்டங்கள் காலத்தில் சற்றுப் பிற்பட்டவையாகும். கி.பி. 4ஆம் நூற்றுண்டின் இறுதியைச் சாரும். அதாவது மேற்கூறிய வகைகளின் இறுதிக் காலத்தில், இதன் உற்பத்தி தொடங்கப்பட்டிருக்க வேண்டும். பானைகளின் மேல் காணப்படும் பூச்சின் நிறம் மங்கலான பழுப்பு நிறத்திலிருந்து பளபளப்பான கறுமையுடன் கூடிய பழுப்பு நிறம் வரையிலும் பல நிறங்களில் காணப்படுகிறது.

**பாத்திர வகைகள் :** மெல்லிய சுவர்களைக் கொண்ட கிண்ணங் கள், அகலமான தட்டுகள், தடித்த விளிம்பும், சித்திர வேலைப்பாடும் கொண்ட ஏனைய பாத்திரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**கால வரம்பு** : இதன் கால வரம்பு சுமார் கி.பி. 400 அல்லது 500 முதல் கி.பி. 700 அல்லது 800 வரையாகும்.

(5) **சிவப்பு நிற வகை** : இந்த வகைப் பாணைகள் நல்ல சிவப்பு அல்லது ஆரஞ்சுப் பழ நிறப் பூச்சைக் கொண்டிருக்கும். பூச்சு ஒரு பக்கத்திலோ இரு பக்கங்களிலோ பூசப்பட்டிருக்கலாம். பாத்திரங்கள் மெல்லிய அல்லது பருத்த விளிம்பைக் கொண்டிருக்கும்.

**பாத்திர வகைகள்** : மூடியுடன் கூடிய கிண்ணங்கள், அகலமான வாய் கொண்ட பாத்திரங்கள், சாடிகள் போன்ற பாத்திரங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

**அழகு ஒப்பனை** : பாத்திரங்களின் விளிம்புகள், கழுத்துப் பக்கங்கள் ஆகியவை பலவித கோடுகளால் ஒப்பனை செய்யப்பட்டுள்ளன.

(6) **உரோமர்களின் மட்பாண்ட வகைகள்** : உரோமரது மட்பாண்டங்கள் உரோமாபுரியிலிருந்து நேரிடையாக இறக்குமதி செய்யப்பட்டவையாகும். ஆனால் நம் நாட்டில் இவற்றைப் போல் போலிகளும் செய்யப்பட்டன.

(a) **ரவுலெட்டட் வகை** : பாத்திரங்களின் இரு பக்கங்களும் கறுப்பு, சிவப்பு, சிமிட்டு, பழுப்பு நிறக் கலவைப் பூச்சுகளால் மிளிர்கின்றன. பானை ஓடுகள் வழவழப்புடன், பளபளப்பாகக் கண்ணாடி போலக் காட்சி அளிக்கின்றன. பாத்திரங்களின் சுவர்கள் உலோகத் தகடுகளைப் போல மிக மெல்லியதாகச் செய்யப்பட்டுள்ளன. உள்பக்கத்தில் ஒன்றுக்குள் ஒன்று அடங்கிய பல வட்டங்கள் சிறு புள்ளிகளால் பொறிக்கப்பட்டிருக்கும். இவ்வித அழகு ஒப்பனை இவ்வகை மட்பாண்டங்களுக்கே உரித்தாகும்.

**பாத்திர வகை** : அகலமான பெரிய தட்டுகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன.

(b) **ஆம்போரா வகை** : உரோமர்களின் மதுச் சாடிகளுக்கு இப்பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. சாடிகளின் மேற் பக்கம் (வாய்ப் பக்கம்) விரிந்தும், அடிப்பக்கம் கூராகவும் வடிக்கப்பட்டிருக்கும். இவற்றின் சுவர்கள் தடித்துக் காணப்படும். நிறம், மங்கிய சிவப்பாகும். உயர்ந்த ரக மதுவை இவற்றில் ஊற்றி, மண்ணுக்கடியில் புதைத்து வைக்கும் பழக்கம் அக்காலத்தில் இருந்து வந்திருக்கிறது. காஞ்சியில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட இத்தகைய சாடிகள்

ஒரே இடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**(c) அரிடைன் :** இந்த வகை மட்பாண்டங்கள் 'ரவுலடெட்' வகையைப் போல மிக வழவழப்பும், பளபளப்பும் கொண்டிருக்கும். ஆனால் சற்று மங்கலான காவி அல்லது ஆரஞ்சுப் பழ நிறப் பூச்சுடன் காணப்படும்.

**'கிராபிடி' குறிகள் :** பழங்கால மட்பாண்டங்களைப் பற்றி ஆய்கை யில் சில குறிப்பிடத்தக்க கூறுகள் நமது கவனத்தைக் கவருவன வாக உள்ளன. அவற்றுள் இந்த 'கிராபிடி' குறிகள் சிறப்புத் தன்மை உடையனவாகும்.

**'கிராபிடி' குறிகள் என்றால் என்ன ?**

பாத்திரங்களின் வெளிப்பக்கத்திலோ, உள்பக்கத்திலோ பல்வேறு கோடுகளைக் கொண்டு வரையப்பட்ட குறிகள் காணப் படும். இவற்றுக்குத்தான் 'கிராபிடி' குறிகள் என்று பெயர்.

**குறிகள் பொறிக்கப்படும் விதம் :** பானையைச் செய்து முடித்த வுடன் அதனை உலரவைப்பதற்கு முன்பாக, இக் கோடுகள் வரையப் படலாம். சில வேளைகளில் பானை சுடப்பட்ட பிறகும் குறிகள் வரையுப்படலாம். பானை ஈரமாக இருக்கும்போது வரையப்பட்ட குறிகள் சற்று ஆழமாகவும் நேர்த்தியாகவும் காணப்படுகின்றன; சுடப்பட்ட பிறகு வரையப்பட்ட குறிகள் மெல்லியதாகவும் மங்க லாகவும் காணப்படுகின்றன.

## கோடுகளின் அமைப்பும் குறிகளின் வகைகளும்

இக் குறிகள் பலவாகும். அவையாவன : ஞாயிறு, நிலா, விண்மீன் (படம்-27), மலை, ஆறு, திரிசூலம், வில், அம்பு, படகு, தராசு, 'ஸ்வஸ்திகம்', செடி, மரம், கட்டடம், கூட்டல், கழித்தல், பெருக்கல் குறிகள், விலங்குகள் போன்றவையாகும். தமிழ கத்தில் இதுவரை இருநூற்றுக்கும் மேற்பட்ட இக் குறிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## குறிகள் தரும் விளக்கம்

இந்தக் குறிகள் பாத்திரங்கள்மீது காணப்படுவதற்குத் தகுந்த விளக்கம் இன்னும் கொடுக்கப்படவில்லை. தொல்பொருளியலில்

இவை இன்னும் விளங்காத புதிராகவே இருக்கின்றன. எனினும் சில வல்லுநர்கள் தங்களால் இயன்ற அளவு விளக்கம் கொடுக்க முற்பட்டனர். அவர்களுள் இ. எச். அண்ட் (E.H. Hunt), பி. பி. லால் (B.B. Lal), யஸ்தானி (Yazdani) போன்றவர்களின் கருத்துகள் கவனிக்கத் தக்கனவாகும். அண்ட், 'கிராபிடி' குறிகளை 'மெகலிதிய' கல் வட்டங்களுடன் இணைத்து விளக்கினார்.[59] அதற்குக் காரணம் 'மெகலிதிய' சவக்குழிகளில் கண்டெடுக்கப்பட்ட பானைகளின் மேல் இக்குறிகள் முதன் முதலில் காணப்பட்டன என்பதே யாகும். லால் அவர்களின் கருத்துப்படி, இக் குறிகள் 'மெகலிதிய' இடுகாடுகளில் புதைக்கப்பட்டிருக்கும் மக்களைக் குறிக்கும்.[60] இக் குறிகள் ஒரு வகை எழுத்து வடிவம் என்பது யஸ்தானியின் வாதமாகும்.[61] லால் அவர்கள் இக்குறிகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றும் எழுதியுள்ளார்.[62]

அண்மையில் நடத்தப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியில் பல புதிய கருத்துகள் கிடைத்துள்ளன. இவை மேற்கூறிய அறிஞர்களின் கருத்துகளுக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் அமைந்துள்ளன. தற்போது 'கிராபிடி' குறிகள் வரையப்பட்டுள்ள பானைகள், 'மெகலிதிய' மக்கள் வசித்த இடங்களிலிருந்தும் கிடைத்துள்ளன. ஆகையால் இவை, இடுகாடுகளில் புதைக்கப்பட்டிருக்கும் 'மெகலிதிய' மக்களையே சாரும் என்ற கருத்துக்கு இனிமேல் இடமில்லை. அதே போல் கொற்கை, அரிக்கமேடு, உறையூர் போன்ற இடங்களில் 'பிராமி' எழுத்துகளைக் கொண்ட பானை ஓடுகள் கிடைத்துள்ளன. ஆகையால் 'கிராபிடி' குறிகள் ஒரு வகையான எழுத்து வடிவமாகும் என்ற கருத்துக்கும் இடமில்லை.

இன்னும் சிலரின் கருத்துப்படி இக்குறிகள் பானை செய்தவர்களின் பெயர்களைக் குறிக்கின்றன.[63] பானை செய்வோர் அல்லது பானை செய்து விற்போர் சங்கங்களின் அடையாளக் குறிகளே இந்த 'கிராபிடி' குறிகள் என்ற கருத்தும் நிலவுகிறது. இக் கருத்துகளை முழு மனத்துடன் ஏற்றுக் கொள்ளவோ, ஒதுக்கித் தள்ளவோ இயலாத ஒரு நிலையில் நாம் இருக்கின்றோம்.

---

59. Hunt, E. H. *Hyderabad Cairn burials and their Significance, Journal of the Royal Anthropological Institute, Vol. LIV, 1924, pp. 140-156.*

60. *Ancient India*, No. 16, P.23.

61. Yazdani, *Megalithic Remains of the Deccan-New features of them, Journal of the Hyderabad Acrhaeological Society*, 1917, PP. 56-79.

62. *Ancient India*, No. 16, (1960), PP. 4-24.

63. *Ancient India*, 13 (1957), PP. 86-87.

இந்தக் குறிகள் அக்காலத்தில் மக்கள் பின்பற்றி வந்த சமய நெறிகள், அவர்கள் வணங்கிய கடவுளர் ஆகியவை பற்றி மறைமுகமாகச் சில தகவல்களையும் தருகின்றன. எடுத்துக்காட்டாக, ஞாயிறு, நிலா, விண்மீன், மலை, ஆறு, மரம் ஆகிய குறிகள் அக்காலத்தில் மக்கள் இயற்கைச் சக்திகளுக்கு வடிவங்கள் கொடுத்து வணங்கிய வரலாற்றினை நமக்குத் தெரிவிக்கின்றன. இத்தகைய வழிபாடு இன்னும் நம்மில் பலரிடையே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது.

இறுதியாக இக்குறிகளுக்கு இன்னுமொரு விளக்கமும் கொடுக்கலாம். முற்கால மனிதன், தனது சந்ததி, இயற்கைச் சக்தி அல்லது பொருள்களின் வாயிலாகத்தான் தோன்றி வளர்ந்து வந்திருக்க வேண்டும் எனக் கருதி அவற்றைத் தொழுது வந்தான். விலங்குகள், தாவர வகைகள், பூச்சிகள், கற்கருவிகள், அணிகலன்கள், பாத்திரங்கள், போன்றவையும் இவற்றுள் அடங்கும். இவை மானிடவியலில் 'டோடமிக்' குறிகள் (Totemic Symbols) என்று அழைக்கப்படுகின்றன. இவற்றின் உருவங்களைப் பண்டைய மக்கள் தாங்கள் வசித்து வந்த வீடுகள் அல்லது குகைகளின் சுவர்களிலும், பயன்படுத்திய மரச் சாமான்கள், பாத்திர வகைகள் ஆகியவற்றின்மேலும், தங்களது உடம்பின் சில பகுதிகளிலும் பொறித்துப் போற்றி வந்தார்கள். இந்த 'டோடமிக்' சின்னம் அவர்களது இனத்தைக் காப்பாற்றும் கடவுள் எனக் கருதப்பட்டது. 'கிராபிடி' குறிகளும் இவை போன்று அமைந்திருப்பதால், அவற்றை 'டோடமிக்' குறிகள் என நாம் கருத வாய்ப்புள்ளது. உலகின் பல் வேறு நாடுகளில் வாழும் தற்காலத்தியப் பழங்குடி மக்களிடம் இப் பழக்கம் இன்றும் இருந்து வருகிறது. எனவே 'கிராபிடி' குறிகள் பழங்குடி மக்களின் சமூக அமைப்பையும், அவர்களின் பண்பாட்டுச் சிறப்பினையும் சீரிய முறையில் விளக்குகின்றன என்றால் அது மிகையாகாது.[64]

64. Gurumurthy, S. *Decorations and Totemism*, *Bulletin of the Institute of Traditional cultures*, *Madras*, 1968, Part II, PP. 239-44.

## அட்டவணை-2

### தமிழகத்தில் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றின் தோற்றமும் வளர்ச்சியும்

| காலம் | ஊரின் பெயர் | கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் | கண்டுபிடிப்பு-மனித வாழ்க்கை, சமுதாயம் |
|---|---|---|---|
| 2,00,000 ஆண்டுகட்கு முன்பு | வட மதுரை அத்திரம்பாக்கம் | கல்லால் செய்யப்பட்ட பெரிய கைக் கோடரிகள் | மனிதன் விலங்கைப் போல் திரிதல் |
| கி.மு. 75,000-50,000 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் | அத்திரம்பாக்கம் | சிறு கைக் கோடரிகள், செதிள் கருவிகள் போன்றவை | மனிதன் விலங்கைப் போல் திரிதல் |
| கி.மு. 40,000-20,000 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் | அத்திரம்பாக்கம் | சிறு கற்கருவிகள், தோல் பதனிடும் கருவிகள், கூரிய முனைகள் போன்றவை | மனிதன் விலங்கைப் போல் திரிதல் |
| கி.மு. 8,000-2,000 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் | சாயர்புரம் | அழகான பளபளப்பான வண்ணக் கற்கருவிகள் —மிகச் சிறிய உருவங் கொண்டவை | பழம், வேர் போன்றவற்றைத் தேடிக் கண்டுபிடித்தல், இயற்கையாக வளரும் செடி கொடிகளைப் பயன்படுத்தல் |

| காலம் | ஊரின் பெயர் | கண்டெடுக்கப்பட்ட தொல்பொருள்கள் | கண்டுபிடிப்பு-மனித வாழ்க்கை, சமுதாயம் |
|---|---|---|---|
| கி.மு. 2,000-1,000 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் | பையம்பள்ளி | பளபளப்பான கல் உளிகள், கோடரிகள் போன்றவை | வேளாண்மைத் தொழில் கண்டு பிடிப்பு-மண் சுவரைக் கொண்ட வீடுகள் கட்டுதல் |
| கி.மு. 1,000-கி.பி. 500 ஆண்டுகட்கு இடைப்பட்ட காலம் | ஆதிச்சநல்லூர், சானூர், அமிர்தமங்கலம், பையம் பள்ளி, கொற்கை, திருக் காம்புலியூர், உறையூர், காஞ்சிபுரம், அரிக்கமேடு | இரும்பு, செப்புக் கருவிகள் | சேர, சோழ, பாண்டிய அரசர் களின் ஆட்சித் தொடக்கம் (சங்க காலம்) |

## பழங் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள ஊர்கள்

| | ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | அத்திரம்பாக்கம் | செங்கற்பட்டு |
| 2. | வட மதுரை | ,, |
| 3. | திருப்பெரும்புதூர் | ,, |
| 4. | எருமை வெட்டிப்பாளையம் | ,, |
| 5. | மஞ்சனகரணை | ,, |
| 6. | நம்பாக்கம் | ,, |
| 7. | குடியம் | ,, |
| 8. | தக்கோலம் | வட ஆர்க்காடு |
| 9. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| 10. | அதிராம்பட்டினம் | ,, |
| 11. | பர்கூர் | சேலம் |
| 12. | அவியூர் | மதுரை |
| 13. | தி. புதுப்பட்டி | ,, |

## கடைக் கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள ஊர்கள்

| ஊர் | மாவட்டம் |
|---|---|
| 1. போடிநாயக்கனூர் | மதுரை |
| 2. கொல்லம்பட்டரை | ,, |
| 3. தாதனேடை மேடு | ,, |
| 4. திருமங்கலம் | ,, |
| 5. பெரியகுளம் | ,, |
| 6. தி. கல்லுப்பட்டி | ,, |
| 7. சிவரக்கோட்டை | ,, |
| 8. கருவேலம்பட்டி | ,, |
| 9. சென்னம்பட்டி | ,, |
| 10. சாயர்புரம் | திருநெல்வேலி |

## புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ள ஊர்கள்

| ஊர் | மாவட்டம் |
|---|---|
| 1. செங்கமேடு | தென்னார்க்காடு |
| 2. ஒத்தக்கோயில் | திருச்சி |
| 3. கறுப்பண்ணசாமி கோயில் மேடு | மதுரை |
| 4. தேனி | ,, |
| 5. பெரியகுளம் | ,, |
| 6. சைதங்கநல்லூர் | திருநெல்வேலி |
| 7. கொற்கை | ,, |
| 8. சாயர்புரம் அருகில் | ,, |
| 9. மோகனூர் | சேலம் |
| 10. சேனங்காடு | தர்மபுரி |

## சென்னைப் பல்கலைக்கழகத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் நேரில் சென்று ஆய்ந்த ஊர்கள் (சங்க காலத்திற்குரியன)

இவ்வூர்களில் சங்க காலத் தமிழர்களது இடுகாடுகளும் தாழிகளும் காணப்படுகின்றன. சில ஊர்களில் அவர்கள் வசித்தப் பகுதிகள் மட்டுமே காணப்படுகின்றன - சவக் குழிகள் காணப்படவில்லை. இன்னும் சில ஊர்களில் அவர்கள் வசித்தப் பகுதிகளுக்கு அருகாமையில் சவக்குழிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

### செங்கற்பட்டு மாவட்டம்

1. காஞ்சிபுரம்
2. அய்யங்கார்குளம் (காஞ்சி அருகில்)
3. செவிலிமேடு
4. வசவசமுத்திரம்
5. உத்திரமேரூர்
6. கூழம்பந்தல்
7. புதுப்பட்டினம்
8. நெய்யாடிப்பாக்கம்

### தென்னார்க்காடு மாவட்டம்

1. தேவநாத பட்டினம் (கடலூர் அருகில்)
2. அரசன் குப்பம் ,,
3. செல்விமேடு ,,
4. குதிரைமேடு ,,
5. நொச்சிமேடு ,,
6. உச்சிமேடு (மரக்காணம் அருகில்)
7. எருமானூர் (செங்கமேடு அருகில்)
8. மங்கலம்பேட்டை (விருத்தாசலம் அருகில்)

## தஞ்சாவூர் மாவட்டம்

1. மேலப்பழுவூர்
2. வாணகிரி
3. திருவெண்காடு
4. காவிரிப்பூம்பட்டினம்
5. நாகப்பட்டினம்
6. புத்தமங்கலம்
7. சிக்கில்
8. திருக்கடவூர்
9. ஆக்கூர்
10. கம்பர்மேடு

## திருச்சி மாவட்டம்

1. சமயபுரம்
2. செங்கனம்
3. கண்ணனூர்
4. பழைய சயங்கொண்ட சோழபுரம்
5. மேட்டுமகாதானபுரம்
6. சோழம்பாறை
7. அல்லூர்
8. மாகாளிக்குடி
9. பேரூர்
10. புதுக்கோட்டை [புதூர்க்கோட்டை]
11. திருமுக்கூடல்
12. மண்மங்கலம்
13. புலியூர்
14. மணவாசல்
15. நந்தன்கோட்டை
16. அரசலூர்
17. திருவள்ளறை
18. கரூர்
19. குளித்தலை

## சேலம் மாவட்டம்

1. அதமன் கோட்டை (அதிகமான் கோட்டை)
2. அரசலூர்
3. பர்கூர்

## 2000ம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மக்களது சவக்குழிகள் காணப்படும் முக்கிய ஊர்கள்

| ஊர் | சவக்குழி வகை |
|---|---|
| **சென்னைக்கு அருகில்** | |
| 1. காட்டேரி | சவக்குழி |
| 2. ஆட்டந்தாங்கல் | தாழி—சவப்பெட்டி |
| 3. கீழ்ப்பாக்கம் | தாழி |
| 4. அடையாறு | தாழி—சவப்பெட்டி |
| 5. பல்லாவரம் | சவப்பெட்டி |
| **செங்கற்பட்டு மாவட்டம்** | |
| 1. அமிர்தமங்கலம் | தாழி—காடு |
| 2. அச்சரப்பாக்கம் | தாழி |
| 3. உத்தமநல்லூர் | ,, |
| 4. குன்றத்தூர் | கல்வட்டம்—தாழி |
| 5. கடமலைப் புத்தூர் | தாழி |
| 6. சானூர் | தாழி—சவப்பெட்டி |
| 7. சீதாபுரம் | கல்வட்டம்—தாழி |
| 8. திம்மாபுரம் | தாழி |
| 9. திரிசூலம் | கல்வட்டம் |
| 10. தென்மேற்காடு | தாழி |
| 11. தேன்பாக்கம் | ,, |
| 12. பெரும்பயர் | கல்வட்டம்—சவப்பெட்டி |
| 13. பெரியநத்தம் | ,, |
| 14. வெ(ள்) ளியன்மலை | கல்வட்டம் |
| 15. படப்பை | ,, |

| ஊர் | சவக்குழி வகை |
|---|---|
| **தென்னார்க்காடு மாவட்டம்** | |
| 1. நத்தமேடு | தாழி |
| 2. துலுக்கன்வேலி | ,, |
| 3. பொறையார் கோயில் | ,, |
| 4. வரிக்கல் (10 கல் செஞ்சியிலிருந்து) | கல்லறை |
| 5. தேவனூர் | ,, |
| 6. மங்கலம்பேட்டை | கல்வட்டம் |
| 7. நாச்சியார்பேட்டை மேடு | தாழி |
| 8. எருமானூர் | ,, |
| 9. செங்கமேடு | ,, |
| 10. காட்டுமன்னார்குடி அருகில் | ,, |
| 11. நாஞ்சலூர் (சிதம்பரம் அருகில்) | தாழி-காடு |
| **வட ஆர்க்காடு மாவட்டம்** | |
| 1. கரிக்கந்தாங்கல் | கல்லறை |
| 2. அரியூர் | கல்வட்டம் |
| 3. திருவாலங்காடு | கல்லறை |
| 4. ஒடுகத்தூர் | கல்வட்டம் |

| ஊர் | சவக்குழி வகை |
|---|---|
| **தஞ்சாவூர் மாவட்டம்** | |
| 1. தேரழுந்தூர் | தாழி |
| 2. கந்தகை | ,, |
| 3. வாணகிரி | ,, |
| 4. வீரமேட்டிருப்பு | ,, |
| 5. மணிக்கிராமம் | ,, |
| 6. மேலப்பெரும்பள்ளம் | ,, |
| 7. பழைய கந்தர்வ கோட்டை | ,, |
| 8. நந்தன்மேடு | ,, |
| ***திருச்சி மாவட்டம்*** | |
| 1. கோட்டைமேடு | தாழி |
| 2. திருக்காம்புலியூர் | ,, |
| 3. மண்மங்கலம் | கல்வட்டம் |
| 4. கேத்தம்பட்டி | தாழி |
| 5. மலைக்கோயிலூர் | பலவகை |
| 6. பெருமாள்பாளையம் (திருச்சி-சென்னை வழியில்) | எல்லா வகைகளும் |
| 7. பாடலூர் ,, | ,, |
| 8. சின்னமேட்டுக்காளி (காட்டுப் புத்தூர் அருகில்) | கல்வட்டம் |
| 9. செங்கனம் | ,, |
| 10. நாரண மங்கலம் | ,, |
| 11. அலகரை | ,, |
| 12. காட்டுப்புத்தூர் | தாழி |

| ஊர் | | சவக்குழி வகை |
|---|---|---|
| 13. ஆரணிப்பட்டி (பழைய புதுக் கோட்டைப் பகுதி) | | கல்லறை |
| 14. சுரந்தப்பட்டி | ,, | ,, |
| 15. தச்சன்பட்டி | ,, | ,, |
| 16. தொடையூர் | ,, | ,, |
| 17. முத்துக்காடு | ,, | ,, |
| 18. கலியப்பட்டி | ,, | ,, |
| 19. களக்குடிப்பட்டி | ,, | ,, |
| 20. திருப்பூர் | ,, | ,, |
| 21. சித்தன்னவாசல் | ,, | ,, |
| 22. மொட்டை மலை | | பலவகை |

**மதுரை மாவட்டம்**

| | |
|---|---|
| 1. மதுரை | தாழி |
| 2. குண்டலநாயக்கன்பட்டி (பெரியகுளம் அருகில்) | கல்வட்டம் |
| 3. விளாங்குடி | தாழி |
| 4. பழங்காநத்தம் | ,, |
| 5. சாமநத்தம் | ,, |
| 6. பெருமாள்மலை (திண்டுக்கல் பழனிமலைக் குன்றுகள்) | தாழி-கல்வட்டம்-கல்லறை |
| 7. கோடைக்கானல் (பழனி வழி) | கல்லறை |
| 8. பறவை | தாழி |

| ஊர் | | சவக்குழி வகை |
|---|---|---|
| 9. தாதன்பட்டி | | கல்லறை |
| 10. அனுப்பானடி | | தாழி |
| 11. ரிஷபன் திடல் (அவனிபுரம் அருகில்) | | கல்வட்டம் |
| 12. கறுப்பண்ணசாமி கோயில் மேடு | | ,, |
| 13. பொதும்பசிகந்தர் சாவடி | | ,, |
| 14. தேனூர் | | ,, |
| 15. சமயநல்லூர் | | ,, |
| 16. மேலகுயில்குடி | | ,, |
| 17. வேடர் புளியங்குளம் | | ,, |
| 18. செங்குளம் | | ,, |
| 19. தாதனோடை மேடு (போடி அருகில்) | | ,, |
| 20. பெரியகுளம் | (வட்டங்கள்) | கல்வட்டம் பலவகைகள் |
| 21. திருமங்கலம் | | |
| 22. மதுரை | | |
| 23. வண்டாரி | | தாழி |
| 24. பாறைப்பட்டி | | ,, |
| 25. திருமாணிக்கம் | | ,, |
| 26. தி. கல்லுப்பட்டி | | ,, |
| 27. வேலம்பூர் | | ,, |
| 28. கோபாலசாமி பறம்பு மதுரை-இராமநாதபுரம் எல்லையில்) (ஒரு கல் பாப்பளவ) | | ,, |
| 29. வடகரை | | ,, |

| | ஊர் | சவக்குழி வகை |
|---|---|---|
| 30. | தங்களாச்சேரி | கல்வட்டம் |
| 31. | மதிப்பனூர் | தாழி |
| 32. | சிவரக்கோட்டை | ,, |
| 33. | கோட்டைமேடு | ,, |
| 34. | அமத்தியப்பட்டி | ,, |
| 35. | பெரியகோட்டை | ,, |
| 36. | கோபாலபுரம் | கல்வட்டம் |
| 37. | சங்கப்படை | தாழி |
| 38. | மல்லபுரம் | கல்லறை |
| 39. | பேரையூர் | கல்வட்டம் |
| 40. | புதூர்க்கோட்டைப்பட்டி | தாழி |
| 41. | கிரிசல்கலம்பட்டி | ,, |
| 42. | குருயூர் | ,, |
| 43. | சென்னம்பட்டி | ,, |
| 44. | மண்ணுண்டிப்பட்டி | கல்லறை |
| 45. | வீரசின்னம்மாள்புரம் | கல்வட்டம் |
| 46. | ஆலம்பட்டி | ,, |

**திருநெல்வேலி மாவட்டம்**

| | | |
|---|---|---|
| 1. | குற்றாலம் | கல்வட்டம் |
| 2. | ஆதிச்சநல்லூர் (ஆதித்தநல்லூர்) (15 கல் திருநெல்வேலியிலிருந்து-114 ஏக்கர் நிலப்பரப்பில் காணப் படுகிறது) | தாழி |

| ஊர் | சவக்குழி வகை |
|---|---|
| 3. பாளையங்கோட்டை அருகில் (38 இடங்கள்) | தாழி |
| 4. திருது (பாளையங்கோட்டை அருகில்) | ,, |
| 5. கீழ் நத்தம் (3 கல் பாளையங்கோட்டையிலிருந்து) | ,, |
| 6. காயல்பட்டினம் | ,, |
| 7. கொற்கை | ,, |
| 8. உக்கிரன்கோட்டை | ,, |
| 9. கரிசாத்தன் அரியூர் | ,, |
| 10. கருவநல்லூர் | ,, |
| 11. வாசுதேவ நல்லூர் | ,, |
| 12. பணையூர் | ,, |
| 13. சிவகிரி | ,, |
| 14. சிவசைலம் | ,, |
| 15. கீழ் ஆம்பூர் | ,, |
| 16. வளியம்கோட்டை | ,, |
| 17. கீழ்புலியூர் | ,, |
| 18. பள்ளிக்கோட்டை | ,, |

## கோயமுத்தூர் மாவட்டம்

| | |
|---|---|
| 1. தெல்லஞ்சி | கல்லறை |
| 2. கல்சடம்பூர் | கல்வட்டம் |
| 3. கணியம்பூண்டி | தாழி |

| ஊர் | சவக்குழி வகை |
|---|---|
| 4. அவனுசி<br>கோயமுத்தூர் (வட்டங்கள்)<br>சத்தியமங்கலம் | கல்வட்டம் |
| 5. நட்டுக்கல் பாளையம் | ,, |
| 6. பெரியநாயக்கன் பாளையம் | தாழி |
| 7. காளப்பட்டி | கல்வட்டம் |
| 8. வெள்ளமடை | ,, |
| 9. பிளிச்சி | ,, |
| 10. கூடலூர் | ,, |
| 11. வீரபாண்டி | ,, |
| 12. செட்டிபாளையம் | ,, |
| 13. பெருந்துறை | ,, |
| 14. நல்லம்பட்டி | ,, |

**சேலம்—தர்மபுரி மாவட்டங்கள்**

| | |
|---|---|
| 1. மோகனூர் | தாழி |
| 2. மூக்கனூர் சேரி | கல்வட்டம் |
| 3. குஜ்ஜர அள்ளி | ,, |
| 4. கேலமங்கலம் | ,, |

**நீலகிரி மாவட்டம்**

| | |
|---|---|
| 1. குன்னூர்<br>2. உதகமண்டலம் | கல்லறை |

# மேற்கோள் நூல்கள்


## தமிழ் நூல்கள்

குலோத்துங்க சோழன் உலா

சிலப்பதிகாரம்

தக்கயாகப்பரணி

நற்றிணை

பட்டினப்பாலை

பதிற்றுப்பத்து

புறநானூறு

மணிமேகலை

## தமிழ் இதழ்கள்

கொங்கு

தமிழ்ப் பொழில்

## ஆங்கில நூல்கள்

**Allchins :** *The Birth of Indian Civilisation* (1968)

**Askoparpola,** Seppo Koskenniemi & others : *Decipherment of Proto Dravidian Inscriptions of the Indus Civilization,* Copenhagen, (1969), 2 parts

**Foote, R. B :** *Catalogue of the Prehistoric Antiquities in the Madras Museum*

**Mahalingam, T. V :** *Excavations in the Lower Kaveri Valley.* University of Madras, (1970)

**Nagaraja Rao, M. S :** *The Stone Age Hill Dwellers of Tekkalakota* (1965)

**Sir John Marshall :** *Mohenjodaro and the Indus Civilization*, (1931), 3 vols.

## ஆங்கில இதழ்கள்

Ancient India

Annual Reports of the Archaeological Survey of India

Annual Reports of the Archaeological
Survey of India-Southern Circle

Bulletin of the Institute of Traditional Cultures, Madras

Indian Archaeology-A Review

Indian Forester

Journal of the Hyderabad Archaeological Society

Journal of the Royal Anthropological Institute

March of India

Proceedings of the All India History Congress

# பொருட்குறிப்பு அகராதி


அ

அகழ்வாராய்ச்சி 5, 11, 14

அகழ்வராய்ச்சியின்
விளக்கம் 12-14

அத்திரம்பாக்கம் 15, 22-23
இடைக் கற்காலக் கருவிகள் 17
மதராசு கைக்கோடரிகள் 23

அரப்பா 1, 11, 48, 56, 57
சவக்குழிகள் 30
மட்பாண்ட வகைகள் 56
வெண்கலப் பொருள்கள் 58

அரிக்கமேடு 30-32
அகழ்வாராய்ச்சி 30-31
உரோமுடன் வாணிகம் 46
சாயத் தொழில் 45
சுடுமண்கலே 46
செங்கற்கள் 33

'அரிடைன்' மட்பாண்ட
வகை 60, 65

அலகரை 35
அகழ்வாராய்ச்சி 35
சுடுமண்கலே 50
பானே ஓடுகள் 31

ஆ

ஆதிச்சநல்லூர் 57-58
அகழ்வாராய்ச்சி 57
மண்டை ஓடுகள் 58

'ஆம்போரா'—காஞ்சிபுரம் 39

ஆற்றடுக்கு-கோத்தலேயாற்
றுப் பள்ளத்தாக்கில் 22

இ

இடைக் கற்காலம் 15, 17

இராபர்ட் புரூஸ்புட் 62

இரும்புக் காலம் 25

ஈ

ஈமத்தாழி ('தாழி' காண்க)

உ

உரோமாபுரி 30

உரோமாபுரி நாணயங்கள் 56

உரோமாபுரியுடன்
வாணிகம் 46-47

உறைக்கிணறுகள் 52, 57

உறையூர் 35-36
அகழ்வாராய்ச்சி 35
அழிவு 36
உரோமுடன் வாணிகம் 46
சாயத்தொட்டி 35
சாயத்தொழில் 45
செங்கற்கள் 33
சுடுமண்கலே 46
'தாலமி' தரும் குறிப்பு 8
தொல்பொருள்கள் 6

க

கடைக்கற்காலம்—இலங்கை
யில் 59

கடைக்கற்காலம்—சாயர்
புரத்தில் 58

கரூர் 36-37
அகழ்வாராய்ச்சி 37
உரோமுடன் வாணிகம் 46

கற்கால மனிதன் 15

கறுப்பு மட்பாண்டம் 63

கறுப்பு மட்பாண்டம்—
தாழியினுள் 29

கறுப்பு—சிவப்பு
மட்பாண்டம் 60-62

கறுப்பு—சிவப்பு மட்பாண்டம்—
சிந்துவெளியில் 56

கறுப்பு—சிவப்பு மட்பாண்டம்—
தாழியினுள் 29

கா

காஞ்சிபுரம் 6, 22
அகழ்வாராய்ச்சி 6, 38-40
இலக்கியங்களில் 6
உரோமுடன் வாணிகம் 46
உறைக்கிணறுகள் 57
சாதவாகனர் நாணயங்கள் 39
சுடுமண்கலை 46
செங்கற்கட்டடம் 39
பானை ஓடுகள் 31

காஞ்சிபுரம் பற்றி யுவான்-
சுவாங் 40

காந்தார புத்தர் 46

கால்டுவெல்—கொற்கைபற்றி 41

கால்டுவெல்—சேரர் தலைநகர்
பற்றி 37

காவிரிப்பூம்பட்டினம் 37-38
அகழ்வாராய்ச்சி 5, 37-38
உரோமுடன் வாணிகம் 46
செங்கற்கள்33
நீர்த்தேக்கம் 44
புத்த விகாரம் 37
பெரிபுளூஸ் நூலில் 37
மணிமேகலையில் 5

கி

'கிராபிடி' குறிகள் 57, 65-67

கு

குடியம் 23-24
அகழ்வாராய்ச்சி 16, 24
பழங்கற்கால குகைகள் 16,
23-24

குன்றத்தூர்—இறந்தவர்கள்
புதைக்கப்பட்ட ஊர் 21

குன்றத்தூரில் சவக்குழிகள் 26

குரங்குப்பட்டடை—கல்வட்டத்
தின் மறுபெயர் 26

கொ

கொற்கை 40-41
அகழ்வாராய்ச்சி 41
கால்டுவெல் கூற்று 44
பெரிபுளூஸ் நூலில் 40
மட்பாண்ட வகை 56

கோ

கோத்தலையாற்றுப் பள்ளத்
தாக்கு 22

கோயிற்கட்டடக் கலையின்
தொடக்கம் 27

கோழியூர் - உறையூரின்
மறுபெயர் 35

ச

சங்கமேடு ('செங்கமேடு' காண்க)

சதிகல் 51

சவக்குழிகள் 26-28, 57

சா

சாயர்புரம் - கடைக்கற்கால
ஊர் 18
சானூர் 26
சானூரில் சவக்குழிகள் 26

சி

சித்தன்னவாசல் 42

சிந்துவெளி நாகரிகம் 52

சிந்துவெளி மக்கள் திராவிடர்களே 54

சிந்துவெளி முத்திரைகள் 52

சு

சுடுமண் உருவங்கள் 30

சுடுமண் கலை 45-50

சுடுமண் காதணிகள் 31

சுடுமண் சவப்பெட்டி 25-27

செ

செங்கமேடு (சங்கமேடு) 32-33
உரோமுடன் வாணிகம் 46

சோ

சோகன் நதிக்கரை—இடம் 23

சோழமாளிகை 1

தா

தாலமி தரும் குறிப்புகள் 37, 46

தாழி (ஈமத்தாழி, முதுமக்கள் சாடி)–அமிர்த மங்கலத்தில் 28

தாழி—புதிய கற்காலத்தில் 58

தி

திராவிட நாடு 55

திராவிட பண்பாடு 56

திராவிட மொழி—சிந்துவெளி முத்திரைகளில் 53

திருக்காம்புலியூர் 33-34
அகழ்வாராய்ச்சி 33-34
சுடுமண் கலை 46
நிலப்படிவங்கள் 44
நெற்களஞ்சியம் 44
மட்பாண்ட வடிவங்கள் 57

தொ

தொப்பிக்கல் (சவக்குழி வகை) 26-27

ந

நடுகல் 26-28, 51

நத்தமேட்டில் அகழ்வாராய்ச்சி 33

ப

'பஞ்ச்மார்க்' நாணயங்கள் 45, 47, 57

பழங்கற்காலத்தில் கருவிகள் 16, 20, 23

பழங்கற்காலத்தில் மனிதன் வசித்த இடம் 19

பழையாறை 1

பள்ளிப்படை—நினைவுச் சின்னங்கள் 26

பா

பாண்டவர்குழி—கல்வட்டம் 27

பி

'பிராமி' எழுத்து 30-31

பு

புகார்—இலக்கியங்களில் 6, 38, 44, 50, 51

புத்தர் திருவுருவங்கள் 50

புதிய கற்காலத்தில் தொழில்கள் 18-19

## பு

புதிய கற்காலத்தில் வாழ்க்கை 18, 58

புதிய கற்காலம் 15, 18, 19, 24

புதிய கற்காலத்தின் பிரிவுகள் 20-24

## பை

பையம்பள்ளி — புதிய கற்கால ஊர் 20-21

பையம்பள்ளியில் அகழ் வாராய்ச்சி 24

பையம்பள்ளியில் சுடுமண் கலை 45-46

## ம

மண் அடுக்குகளை ஆராய்ந்து வரைதல் 11, 13-14

மண்மேட்டின் விளக்கம் 4

மணல்மேடு — திருநெல்வேலி மாவட்டத்தில் 18

'மதராசு கைக்கோடரிகள்' — அத்திரம்பாக்கத்தில் 23

## மெ

'மெகலிதிய' பண்பாடு 43

'மெகலிதிய' பண்பாடு — இடங்கள் 24, 54

'மெகலிதிய' பண்பாடு — காலவரம்பு 25

## மொ

மொகஞ்சொதாரோவில் அகழ் வாராய்ச்சி 1, 11, 48

மொகஞ்சொதாரோவில் தொல்பொருள்கள் 58

## ர

'ரவுலடெட்' மட்பாண் டங்கள் 6, 35, 37, 39

## லோ

லோதல் — சிந்துவெளிப் பண்பாட்டுடன் கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் கிடைத்திடும் ஊர் 56

## வ

வசவசமுத்திரத்தில் அகழ் வாராய்ச்சி 40

வசவசமுத்திரம் உரோமோடு செய்த வாணிகம் 46

வஞ்சி 36, 48

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992
MADRAS-600 008



படம் 1 - சோழ மாளிகை - மண்ணுக்கு அடியில் தோண்டியெடுக்கப்பட்ட செங்கற்கள்



**படம்** 2 - திருக்காம்புலியூர் - அகழ்வாராய்ச்சி மேற்கொள்வதற்கேற்ற மண்மேடு



படம் 3 - திருக்காம்புலியூர் - அகழ்வாராய்ச்சிக்கென வரையறுக்கப்பட்ட இடத்தின் தோற்றம்

NNEMARA PUBLIC LIBRARY
DEC 1992



படம் 4 - காஞ்சிபுரம் - அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்ட குழியில் காணப்படும் மண் அடுக்குகள்



**படம் 5** - அத்திரம்பாக்கம் - ஆற்றடுக்கும் அதில் புதைந்துகிடக்கும் பழங்கற்காலக் கருவிகளும்

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992



படம் 6 - சானூர் - 'மெகலித்திய' சவக்குழியின் மேல்தோற்றம்

CONNEMARA PUBLIC LIBRARY
31 DEC 1992
MADRAS-600 008

CONNEMARA PUBLIC LIBRARY
31 DEC 1992





படம் 7 - சானூர் - சவக்குழியினுள் காணப்படும் சுடுமண்
சவப்பெட்டிகளும் எலும்புக் கூடுகளும்



படம் 8 - அமிர்தமங்கலம் - ஈமத்தாழி

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992
MADRAS-600 008.

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC




படம் 9 - அரிக்கமேடு - உரோமர்களது 'ரவுலடெட்' மட்பாண்ட ஓடுகள்



CONNEMARA PUBLIC LIBRARY
31 DEC 1992
MADRAS-600 008.

படம் 10 - செங்கமேடு - செங்கமேட்டின் ஒரு தோற்றம்



படம் 11 - திருக்காம்புலியூர் - நெற்களஞ்சியம்



படம் 12 - திருக்காம்புலியூர் - களிமண் கற்களைக் கொண்டு கட்டப்பட்ட சுவர்கள்

CONNEMARA PUBLIC LIBRARY




படம் 13 - திருக்காம்புலியூர் - வண்ண வேலைப்பாடு கொண்ட பானை ஓடுகள்

CONNEMARA PUBLIC LIBRARY



படம் 14 - உறையூர் - சாயத்தொட்டி

CONNEMARA PUBLIC LIBR




படம் 15 - உறையூர் - 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடுகள்

NNEMARA PUBLIC LIBRA




படம் 16 - உறையூர் - 'பிராமி' எழுத்துகளைத் தாங்கிய பானை ஓடு

CONNEMARA PUBLIC LIBR




படம் 17 - காஞ்சிபுரம் - உரோமர்களது 'ஆம்போரா' மதுச்சாடிகள்

CONNEMARA PUBLIC LIBRARY




படம் 18 - காஞ்சீபுரம் - சங்ககால வேந்தர்களை நினைவுபடுத்தும் சுடுமண் உருவங்கள்

CONNEMARA PUBLIC LIBRA

NEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992
MADRAS



படம் 19 - காஞ்சிபுரம் - இடிந்த புத்த 'ஸ்தூபத்தின்' ஒரு தோற்றம்




CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992
MADRAS-600 008.

படம் 20 - திருக்காம்புலியூர் - இரும்புப்பொருள்கள்




படம் 21 - திருக்காம்புலியூர் -சுடுமண் உருவங்கள்

31 DEC 1992




படம் 22 - உறையூர் - சுடுமண் உருவங்கள்

CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992



CONNEMARA PUBLIC LIBRARY
3 1 DEC 1992
MADRAS-600 008.

**படம் 23** - உறையூர் - மரத்தூண்களைத் தாங்கிய குழிகள்




படம் 24 - திருக்காம்புலியூர் - பலவண்ணக் கல்மணிகள்

NEMARA PUBLIC LIBR




படம் 25:- திருக்காம்புலியூர் - சுடுமண் மணிகள்

CONNEMARA PUBLIC LIBRARY



படம் 26- அலகரை - அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற பானை ஓடுகள்

...MARA PUBLIC LIBR...
1 DEC 1992
MADRAS-600 00...




படம் 27 - திருக்காம்புலியூர் - 'கிராபிடி' குறிகள் (விண்மீன்)

NEMARA PUBLIC LI

27